

இலங்கை

அவசரகாலச் சட்டத்தின் உண்மையான உள்நோக்கம்

பக்கம் 04



இலங்கை

வடகிழக்கில் படைபலத்தைக் கட்டி எழுப்புவதில் அரசு தீவிரம்

பக்கம் 07



ஈராக்

50 வருடங்களுக்குப் பின்னர் ஜனநாயகத் தேர்தல்

பக்கம் 09



லங்கா ராணி

பக்கம் 21

TAB SERVICES
TAXATION ACCOUNTING
BOOKKEEPING
For all Your Accounting needs!
Madhu Sikand, CGA & Kenga Nada
59 The Westway, Etobicoke, On, M9C 2B4
Ph: 416.997.3114
416.695.3973
Fax:416.614.3059

# வைகறை

சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மைபெறின்

இதழ் 28 தை 27 2005

January 27 2005 www.vaikarai.com

# ஜே.வி.பிக்கும் அரசுக்கும் இடையில் முரண்பாடு வலுக்கிறது

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. (ஜனதா விமுக்தி பெரமுன) ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்ட ஒரு வருட பூர்த்திக்குப் பின்னர் முதல் தடவையாக புதன்கிழமை கொழும்பில் தனித்து ஜே.வி.பி.சார்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்வியது.அண்மையில் நாட்டில் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்திற்கு பின்னர் ஸ்ரீரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்குமிடையே அமெரிக்கப் படைகளின் பிரசன்னம் தொடர்பாகவும்நிவாரணப் பணிகள் மீள் கட்டமைப்பு தொடர்பாகவும் முரண்பாடுகள் தோன்றியதோடு முறுகல் நிலையும் ஏற்பட்டது.

## பின்னணியில் இந்திய அழுத்தம்?

### முதற் தடவையாக தனியாக ஜே.வி.பி. செய்தியாளர் மாநாடு

இது இன்று உச்சக்கட்டத்தை அடைந்திருப்பதே தனித்து ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி தற்போதைய அரசியல் நிலையை விளக்க ஜே.வி.பி. முற்பட்டுள்ளதென அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். இந்தியாவின் தென் எல்லையில் இருந்து 25 மைல்களுக்குள் அமரிக்கப்டைகளை வர இலங்கை அரசு, அதுவும் சந்திரிகாவின் அரசு அனுமதித்ததையிட்டு இந்தியா கடும் விசனம் அடைந்துள்ளது. இதனால் ஜே.வி.பி யின் மூலமாக சந்திரிகா அரசுக்கு நெருக்குவாரத்தை கொடுக்க இந்தியா முயல்கிறது என கொழும்பு ராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகிறது. இந் நிலை தொடருமானால் அரசுக்கு அளித்துவரும் ஆதரவினை விலக்கிக் கொள்ள ஜே.வி.பி நிர்ப்பந்திக்கப் படலாம். புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்கப்பட்டது முதல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள்

8 ம் பக்கம் பார்க்க

# மகாராஷ்டிரத்தில் மலைக்கோயிலில் தீ -நெரிசலில் சிக்கி 300 பக்தர்கள் பலி



மகாராஷ்டிர மாநிலம் புனே அருகே சதாரா மாவட்டத்தில் மந்திரதேவி கோயிலில் ஏற்பட்ட திடீர் நெரிசலில் சிக்கி 300-க்கு மேற்பட்ட பக்தர்கள் பலியானார்கள். அவர்களில் பெரும்பாலோர் பெண்கள் மற்றும் குழந்தைகள். 200-க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். கோயிலில் பகல் ஒரு மணியளவில் ஏற்பட்ட மின்கசிவால் தீப் பொறி கிளம்பியது. அதைத் தொடர்ந்து கோயிலில் இருந்த மின்மாற்றி பலத்த சப்தத்துடன் வெடித்தது. அதனால் பீதியடைந்த பக்தர்கள் கோயில் வளாகத்திலிருந்து வெளியே ஓடினர். கோயிலுக்குச் செல்லும் பாதை மிகவும் குறுகலானது. அப் பாதை வழியாக பல ஆயிரம் பேர் முண்டியடித் துக்கொண்டு வெளியேற முயன்றனர். அதனால் பயங்கர நெரிசல் ஏற்பட்டது. அதில் சிக்கி 300-க்கு மேற்பட்ட பக்தர்கள் பலியானார்கள். அவர்களில் பெரும்பாலோர் பெண்களும் குழந்தைகளுமாவர். அதே நேரத்தில் பக்தர்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில், மண்டபங்களுக்கும் பந்தல்களுக்கும் தீவைக்கப்பட்டது. இதனால் அமளி தீவிரமானது.

சதாரா மவட்டத்தில், வாய் நகரில் மலை மீது அமைந்துள்ளது மந்திரதேவி ஆலயம். இங்கு பவுர்ணமி தினத்தில் விசேஷ பூஜைகள் நடைபெறும். தை பவுர்ணமி மிகவும் விசேஷ நாளாகும். எனவே மகாராஷ்டிரத்திலிருந்து மட்டுமல்லாமல், பக்கத்து மாநிலங்களில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் தை பவுர்ணமி தினத்தில் மந்திரதேவியை தரிசிக்க வருவார்கள். செவ்வாய்க்கிழமை தை பவுர்ணமி ஆனதால், 3 லட்சத்துக்கு மேற்பட்ட பக்தர்கள் கோயிலில் குவிந்திருந்தனர். அவர்கள் சுவாமி தரிசனத்துக்காக கர்ப்பகிரகத்தை நோக்கி வரிசையாகச் சென்றுகொண்டிருந்தனர். அப்போது பகல் 1 மணியளவில் திடீரென்று கோயிலில் மின்கசிவு ஏற்பட்டு தீப் பொறி கிளம்பியது. அதைத் தொடர்ந்து கோயில் வளாகத்தில் இருந்த மின்மாற்றி பலத்த சப்தத்துடன் வெடித்தது. உடனே பக்தர்கள் பீதியில் அலறியடித்துக்கொண்டு கோயிலை விட்டு வெளியே ஓடிவந்தனர். ஆனால், கோயிலுக்கு வரும் வழி மிகவும் குறுகலாக உள்ளது. எனவே, அதன் மூலம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் முண்டியடித்துக்கொண்டு வெளியேற முயன்றதால் பயங்கர நெரிசல் ஏற்பட்டது.

8 ம் பக்கம் பார்க்க

## ‘Pit bull’ நாய்களுக்கு ஒன்ராறியோவில் தடை விதிக்கப்படுமா?



‘Pit bull’ எனப் பொதுவாக அழைக்கப்படும் ஒருவகை நாய்களை ஒன்ராறியோ மாநிலத்தில் தடை செய்ய வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதற்காக, மாகாண அரசு ஓர் விசாரணைக் குழுவை அமைத்திருந்தது. கடந்த திங்கட்கிழமை இக்குழு முன்னிலையில், இந் நாய்களால் தாக்கப்பட்ட இரு குழந்தைகளின் தாய்மார்கள் சாட்சியமளித்தனர். இவ்விரு பெண்களும் வெவ்வேறு கருத்துக்களையே தெரிவித்துள்ளனர். Louise Ellis என்பவரின் 5 வயது மகள், இந் நாய்களினால், 10 வருடங்களுக்கு முன்னர் தாக்கப்பட்டவர். “நாய்கள் அல்ல, நாய்களை வளர்ப்பவர்களே, இவ்வாறான தாக்குதலுக்குப் பொறுப்பானவர்கள் என விலங்குகளின் உரிமைபற்றிப் பேசுபவர்கள் கூறுவதில் உண்மையில்லை. இந் நாய்கள் இயற்கையிலேயே மூர்க்க குணம் கொண்டவை, அவை சண்டையிடுவதற்தாகவே, பயிற்றப் படுகின்றன. ஆகவே, இவ்வகையான நாய்கள் மக்கள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் தடை செய்யப்பட வேண்டும்’’ எனத் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மற்றுமொரு பெண்மணியான Donna Frempe யின் 8வயது மகன், ஓர் நாயினால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டவர். இவரைப் பொறுத்தவரை நாய்களைத் தடை செய்வதைவிட, அந் நாய்களின் உரிமையாளர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார். இவரது மகன் கொல்லப்பட்ட விடயத்தில், நாயின் உரிமையாளர் எந்தவிதத் தண்டனையும் இன்றித் தப்பித்துக் கொண்டது குறிப்பிடத் தக்கது.திங்கட்கிழமை நடந்த விசாரணைகளின் போது, பாதிக்கப்பட்ட வர்களைவிட, இந் நாய்களை வளர்ப்பவர்களும், விலங்குகள் உரிமை அமைப்புக்களைச் சேர்ந்தவர்களுமே அதிகமாகக் காணப்பட்டனர். நாய்களை இன ரீதியாக வேறுபடுத்தி தடைசெய்வது ஒருவித இனச் சுத்திகரிப்பு போன்றது என அவர்கள் வாதிட்டனர். இந் நாய்களின் அபிமானிகள், பிரபல சட்டத்தரணி Clayton Ruby என்பவரை தமக்காக வாதிடுவதற்கு அமர்த்தியுள்ளனர். தற்போது பரிசீலனைக் குட்பட்ட சட்டவாக்கத்தின் பிரகாரம், பொது மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் நாய்களின் உரிமையாளர்களுக்கு 10,000 டொலர் அபராதம் அல்லது 6 மாத சிறைவாசம் தண்டனையாக வழங்கப்படும். இச் சட்டவாக்கம், பாராளுமன்றத்தில் நிறைவேற்றபட்டால், அதனை எதிர்த்து நீதிமன்றம் செல்லப் போவதாக Clayton Ruby தெரிவித்தார்.

Cash Point™
The Buck Starts Here!
CHEQUES CASHED
PAYDAY LOANS MONEY TRANSFERS
தொடர்புகளுக்கு Kumar (V. Manickam & Bro.)
Money Transfers
எங்களூடாக பணம் அனுப்பும்போது நிச்சயமாய் உங்கள் உறவுகள் அதிகமான பணத்தைப் பெற்றுக்கொள்வார்கள்.
● காசோலை மாற்றல் ● அந்நிய செலாவணி மாற்றுச் சேவை ● இலங்கை முழுவதற்குமான துரித பணமாற்று சேவை
3852 Finch Ave. E. SuiteG-03, Scarborough (Kennedy & Finch) 416-284-7000 www.cashpoint.ca

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வைகறை

1252 Lawrence Avenue East, Unit 207
Toronto. ON. M3A 1C3
Tel: 416-385 2999 Fax: 416-385 9862
e-mail editor@vaikarai.com

# யுத்த அபாயம் தற்காலிகமாக நீங்கியுள்ளது ஆனால், நம்பிக்கை ஏற்படவில்லை

-கலாநிதி எஸ்.ஜ. கீதபொன்கலன்-

இலங்கை அரசியலில் தாக்கம் செலுத்துகின்ற பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. கடந்த காலங்களில் இலங்கை அரசியலை ஆய்வு செய்துவந்த ஆய்வாளர்கள் இக் காரணிகளில் பலவற்றை கவனத்தில் எடுத்து வந்த போதும், இயற்கை இந் நாட்டின் அரசியலிலும் வரலாற்றிலும் கூட மிகப் பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒரு காரணியாக மாறும் என எவரும் கற்பனை செய்து பார்த்திருக்க வாய்ப்பில்லை. ஆயினும், சுனாமி இலங்கை அரசியலில் விட்டுச் சென்றுள்ள தாக்கம் சாதாரணமானதன்று. அவ்வகையில் இவ் இயற்கை அழிவின் பின் ஏற்பட்டுள்ள புதிய அரசியல் பரிமாணங்கள் சிலவற்றை ஆராய்வதே இன்றைய கட்டுரையின் நோக்கமாகும். கடந்த சில காலங்களாகவே இந் நாடு மெதுவாக ஆனால் ,சீரான ஒரு முறையில் யுத்தத்தை நோக்கி நகர்ந்து கொண்டுள்ளது என இப்பகுதியில் கூறி வந்துள்ளோம். தற்போது விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து வருகின்ற தகவல்களின் அடிப்படையில் நோக்குகையில் பொங்கலின் பின் யுத்த நிறுத்த ஒப்பந்தம் உத்தியோக பூர்வமாக முடிவுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கலாம். யுத்த நிறுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படுவதென்பதன் கருத்து கிடைக்கின்ற முதலாவது சந்தர்ப்பம் யுத்த தரப்பினர் வன்முறையை நாட்டியிருக்கலாம் என்பதாகும். இத்தகைய ஒரு யுத்தம் எத்தகைய விளைவுகளைக் கொண்டிருக்கலாம் என்பதும் மீண்டும் ஒரு சமாதான செயன்முறையை ஆரம்பிப்பது எவ்வளவு கடினமானதாக இருந்திருக்கும் என்பதும் கடந்த காலங்களில் ஆய்வு செய்யப்பட்டிருந்தன. எனவே, யுத்த அபாயமென்பது உண்மையானதாகவும் நிச்சயமானதாகவும் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. தற்பொழுது, சுனாமி (தற்காலிகமாக) இவ்வபாயத்தை நீக்கியுள்ளது. அதாவது, சுனாமியின் காரணமாக தற்போது ஏற்பட்டுள்ள சமூக, அரசியல் சூழ்நிலைகள் இரு தரப்பினரும் யுத்தத்தை நோக்கி நகரக் கூடிய இயலுமையை இல்லாமற் செய்துள்ளது. அரசாங்கத்தைப் பொறுத்தவரை யுத்தம் செய்யக்கூடிய மனோ தைரியத்துடன் சுனாமியின் முன்னரும் கூட அது இருந்திருக்கவில்லை. பொருளாதார ரீதியாகப் பாரிய இழப்பு ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில் அரசாங்கம் யுத்தத்தினுள் தள்ளப்படுமாயிருப்பின் மீள் கட்டுமானப் பணிகள் மட்டுமல்ல, பொருளாதாரச் செயற்பாடுகளின் அடித்தளமே கூட தகர்க்கப்பட்டிருக்கக் கூடும். அவ்வகையில் அரசாங்கத்தின் நலன்களுக்கு சாதகமாயிருந்த "யுத்தமுமற்ற பேச்சுவார்த்தைகளுமற்ற " நிலையை நீடித்துக் கொள்வதற்கு உண்மையில் சுனாமி உதவியுள்ளது. மாறாக, போராட்டத்தின் நோக்கம் என்ற கோணத்திலிருந்து நோக்குகையில் "யுத்தமுமற்ற பேச்சுவார்த்தைகளுமற்ற நிலை" புலிகளுக்குப் பாதகமாகவே அமைந்திருந்தது. அதன் காரணமாகவே கடந்த ஆண்டின் இறுதியில் யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக் கொள்ளக் கூடிய நிலையை புலிகள் அடைந்திருந்தனர். அதன் காரணமாகவே, திகதி குறிக்கப்படாத காலக்கெடுவும் கூட விதிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், இன்று உடனடியாக யுத்தத்திற்குச் செல்லக் கூடிய நிலையில் புலிகளும் கூட இல்லை. சுனாமியின் காரணமான வட, கிழக்குக் கரையோரப் பிரதேசங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான உயிர்ச்சேதங்களுக்குப் புறம்பாக மிக மோசமான கட்டமைப்பு ரீதியான சேதங்களும் ஏற்பட்டுள்ளன. ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நடுத்தெருவுக்குத் தள்ளப்பட்டுள்ளன. இம் மக்களுக்கான நிவாரணப் பணிகளை மேற்கொள்வதுடன் மீள்குடியேற்றம், மீள் கட்டுமானம் என்பவற்றில் உதவ வேண்டிய தார்மீகக் கடமை புலிகள் இயக்கத்திற்கு உண்டு. தாம் ஒரு போராட்ட இயக்கமே அன்றி, இன்னும் ஓர் அரசு அல்ல என்று அவர்கள் சிந்திப்பார்களேயாயின் அது அவர்களின் சித்தாந்தம், செயற்பாடு, நோக்கம் என்பவற்றின் அடித்தளத்தையே பலவீனப்படுத்தி விடக்கூடும். ஆயினும், தமது பொறுப்புகளை சரியாக உணர்ந்துள்ளதன் காரணமாகவே புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில மிக விரைவாகவே ஈடுபட்டிருந்தனர். தற்போது கொழும்பை வந்தடைகின்ற தகவல்களின்படி இப் பணிகள் திட்டமிட்ட அடிப்படையிலும் செயற்திறனுடையவையாகவும் அமைந்திருந்தன எனக் கூறப்படுகின்றது. அதே போன்று மீள்கட்டுமானப் பணிகளிலும் அவர்களுக்குப் பாரிய ஒரு பங்கு உண்டு. யுத்தத்திற்கு மீண்டும் உடனடியாகத் திரும்புவது தமது சொந்த செயற்பாடுகளை பாதித்து விடுகின்ற அதே சமயம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படக் கூடிய சில திட்டங்களையும் கூட இல்லாமற் செய்து விடக் கூடும். இதனை புலிகள் நிச்சயமாக விரும்ப மாட்டார்கள் எனக் கூறலாம். இவ் விடயத்திற்குச் சமமாக முக்கியத்துவமுடைய இன்னுமோர் விடயம் சர்வதேச அபிப்பிராயம் ஆகும். யுத்தத்திற்குத் திரும்பிச் செல்வதற்கான நியாயங்கள் எத்தகையவையாக இருப்பினும், இத்தகைய ஒரு பாரிய அனர்த்தத்தின் பின்னணியில் உடனடியாக யுத்தத்தை நாடுவதை எந்த ஒரு நாடும் அல்லது நிறுவனமும் அங்கீகரிக்கப் போவதில்லை. அது மட்டுமன்றி, யுத்த நிறுத்த உடன்படிக்கையில் இருந்து விலகிக் கொள்வது போன்றதொரு அறிவிப்பும் கூட தீவிரமாகக் கண்டிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை. இது தமிழ் நலன்களுக்கு உகந்ததாக இருக்காது என்பதும் நிச்சயமானது.

அதே சமயம், இப்புதிய சூழ்நிலை புலிகளின் சில நோக்கங்களை அடைந்து கொள்வதில் புதிய சந்தர்ப்பங்களை வழங்கியுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். புலிகள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டமைக்கு ஒரு காரணம் மட்டுமே இருந்தது எனக் கூற முடியாது. பல காரணிகளில் ஒன்று தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தென்னிலங்கை அரசாங்கங்களுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதை சர்வதேச சமூகத்திற்கு உணர்த்துவதாகும். இந் நோக்கம் சுனாமி நிவாரணம், மீள்கட்டுமானம் என்பவற்றை அரசாங்கம் வட, கிழக்கில் எவ்விதம் கையாள்கின்றது என்பதை வெளிப்படுத்துவதன் மூலம் அடையப்படலாம். இயல்பாகவே வட, கிழக்கில் இப் பணிகள் மாற்றாந்தாய் மனப்பான்மையுடனேயே கையாளப்படும் என்பதில் சந்தேகமில்லை. இதற்கு கொபி அனானின் இலங்கை விஜயம் சிறந்த ஒரு உதாரணமாகும் அனானை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு அழைத்துச் செல்வது பிரச்சினையாக இருந்திருக்குமாயின் யாழ்ப்பாணத்திற்காவது அவர் அழைத்துச் செல்லப்பட்டிருக்கலாம். ஆயினும் அனான் தமிழ்ப் பகுதிகளுக்குப் பயணம் செய்யாதிருந்தமை இறுதியில் தமிழ் மக்களுக்கு தந்திரோபாய ரீதியான நலன்களையே கொண்டு வந்துள்ளதெனலாம். இது தொடர்பான தமிழ் மக்களின் முறைப்பாடுகள் சர்வதேச ஊடகங்களில் பேசப்பட்டுள்ளதுடன், அரசாங்கத்தின் மனோபாவத்தை புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் செயலாளர் நாயகம் இருந்திருப்பார். அத்துடன் கிடைக்கின்ற நிதி வட, கிழக்கின் தேவைகளுக்காக நியாயமாக செலவழிக்கப்படுமா என்ற சந்தேகம் சர்வதேச சமூகத்தின் மத்தியில் உறுதியாக விதைக்கப்பட்டுள்ளது. இது எதிர்காலத்தில் பல நலன்களைக் கொண்டுவரக் கூடும்.அதே சமயம், கவனிக்கப்பட வேண்டிய இன்னுமோர் விடயம், சுனாமியின் பின்னர் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகள் புலிகளுக்கும் அரசாங்கத்திற்குமிடையிலான உறவைப் பூரணமாக நெருக்கடிக் குள்ளாக்கியிருப்பதாகும். எனவே, சுனாமி யுத்தத்தை தாமதப்படுத்தியுள்ள போதும், புதிய நம்பிக்கைகளை ஏற்படுத்தத் தவறியுள்ளது.

சுனாமியின் பின் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளினால் தோன்றியுள்ள முக்கியமான இன்னுமோர் கேள்வி ஜனாதிபதியின் அரசியல் எதிர்காலம் பற்றியதாகும். அரசியலமைப்பை மாற்றி (பூரணமான ) பாராளுமன்ற முறைமைக்குச் செல்வதன் மூலம் தனது அரசியல் எதிர்காலத்தை நீடித்துக் கொள்ளும் ஜனாதிபதியின் திட்டத்திற்கு என்னவாகும் என்பது முக்கியமானது. புதிய சூழ்நிலைகள் பற்றிய கரிசனை இன்றி தமது திட்டத்தை அவ்விதமே முன்னெடுத்துச் செல்லக் கூடுமா அல்லது புதிய அணுகுமுறை ஒன்று அவசியமாகுமா என்பவை சுவாரஸியமான கேள்விகளாகும். சுனாமி ஜனாதிபதியின் கோணத்திலிருந்து நோக்குகையில் பல நலன்களைக் கொண்டு வந்துள்ளது என்பதில்

8ம் பக்கம் பார்க்க

# கனடிய பிரதமரின் இலங்கை விஜயம்

சென்ற வாரம் முடிவுற்ற கனேடியப் பிரதமர் போல் மாட்டினின் ஆசிய நாடுகளுக்கான பயணத்தில் இலங்கையில் மட்டுமே, அந்நாட்டு உள்நாட்டு அரசியல் விடயங்களிலும் அவரைச் சிக்கவைக்கும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. ஈழத்திற்கு வெளியே அதிகளவு ஈழத் தமிழர்கள் வாழும் நாடு கனடா. ரோறன்ரோ பெரும் பகுதியில் சில தொகுதியில், பாராளுமன்றத் தேர்தல்களின் முடிவுகளை நிர்ணயிக்கின்ற வாக்குப் பலம் ஈழத் தமிழர்களிடம் உண்டு. அதுமட்டுமல்ல, ஈழத் தமிழர்களில் பெரும் பகுதியினர் லிபரல் கட்சியின் அங்கத்தவர்களாகவும், ஆதரவாளர்களாகவும் உள்ளனர். இந்நிலையில் தான் கடற்கோளினால் ஏற்படட்ட பேரழிவுகைள நேரடியாகப் பார்வையிடுவதற்காக, பிரதமர் மார்டின் தலைமையிலான குழுவொன்று சிறீலங்கா உட்பட ஆசிய நாடுகள் சிலவற்றிற்கு பயணமாகியது. ஏற்கனவே, ஐ.நா. செயலாளருடன் நடந்து கொண்டவாறு கனேடியப் பிரதமர் மார்ட்டினும், அழிவுக்குட்பட்ட தமிழ்ப் பிரதேசங்களுக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று எந்தவித அழுத்தத்தையும் பிரயோகிக்கவில்லை. இத் துர்ரதிஷ்ட நிலைமைக்கு தமிழர் தரப்பை வெளி நாடுகிளல் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள், அதிலும் குறிப்பாக கனடாவில் தமிழர் தரப்பை பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யாமைதான் காரணம். இலங்கைக்கு விஜயம் செய்த வெளிநாட்டுத் தலைவர்களில், ஈழத் தமிழர்களின் நலன்களில் அக்கறை காட்ட வேண்டிய அரசியல் நிர்ப்பந்தத்தை கொண்டவர் கனேடியப் பிரதமர் போல் மாட்டின் தான். பேரழிவுக்குட்பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களைக் கனேடியப் பிரதமர் பார்வையிடுவது, அதுவும் அரசின் பூரண சம்மதம் இன்றிப் பார்வையிடுவது என்பது, தமிழ் மக்களை, சிறீலங்கா எனும் பொது அடையாளத்தின் கீழ் அல்லாமல் வேறுபடுத்தி ஈழத்தமிழர் என்கின்ற அடையாளத்தை அங்கீகரிக்கின்ற விடயம். இதனை சிறீலங்கா அரசு நன்றாகவே புரிந்து வைத்திருக்கின்றது. கனேடியப் பிரதமர் மாத்திரம், ஈழத் தமிழர்களின் தாயகப் பிரதேசத்திற்கு விஜயம் செய்திருந்தால் அதனைத் தொடர்ந்து ஏனைய நாட்டுத் தலைவர்கள், அதனைச் செய்வதை சிறீலங்கா அரசினால் தடுத்துவைக்க முடியாது. ஈழத் தமிழர்களின் தேசிய அடையாளத்தை அதன் தனித்துவத்தை நிலை நிறுத்துவதற்கும், அதற்கான சர்வதேச அங்கீகாரத்தையும், ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஓர் அரிய சந்தர்ப்பம் ஒன்றினை தமிழர் தரப்பு நழுவவிட்டுள்ளது. ஓர் குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தையும், பிரதேசத்தையும், கட்டுப்படுத்துவதன் மூலம் மட்டும் தேசியத்துக்கான, அங்கீகாரம் கிடைத்து விடாது. சர்வதேச சமூகம், ஈழத்தமிழர்களின், நியாயமான, அபிலாஷைகளை அனுதாபத்துடன் புரிந்து கொண்டால்தான், எமது தனித்துவ அடையாளத்திற்கான அங்கீகாரம் கிடைக்கும். இதனை முன்னெடுப்பதற்கு சந்தர்ப்பங்கள் கிட்டும் போது அதனை முழுமையாக தமிழர் தரப்பு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கனேடியப் பிரதமரின் இலங்கை விஜயத்தை, இலங்கை அரசு மிகவும் சாதுர்யமாகவும், தந்திரமாகவும் கையாண்டுள்ளது என்றே தோன்றுகின்றது. கடற்கோளால் ஏற்பட்ட பேரழிவு பற்றி பேசியதைவிட விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்துக் கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டே முன்நிலைப் படுத்தப்பட்டது. கொழும்பு ஊடகங்களையும், சர்வதேச ஊடகங்களையும் இதற்காக நன்றாகப் பயன்படுத்திக் கொண்டுள்ளது.

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை சர்வதேச அரங்கில் முன்னிலைப் படுத்த வேண்டிய அவசியம் மீண்டும் தோன்றியுள்ளது. இதற்கு கனேடியத் தமிழர்கள், காத்திரமான பங்களிப்பினை வழங்க முடியும். அவ்வாறான பங்களிப்பினை வழங்குவதற்குரிய பொருளாதார, அரசியல், சக்தி அவர்களிடம் உண்டு. இதனைக் கனேடியத் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளும், தனிநபர்களும், ஊடகங்களும் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். கனேடியப் பிரதமர், இலங்கைக்கு விஜயம் செய்தும், ஈழத்தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களுக்கு செல்லவில்லை என்பது, கனேடியத் தமிழர்களுக்கு ஏற்பட்ட தோல்வி என்றே கருத வேண்டும். கனேடியத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களுக்கு ஏற்பட்ட தோல்வி என்றே கருத வேண்டும். இந்நிலைமை தொடர்ந்தும் நீடிக்கக் கூடாது.

பிதரமர் போல் மார்ட்டினுக்கு நேரடியாக தொலைபேசி எடுத்துப் பேசக் கூடிய அரசியல் செல்வாக்கு தமக்கு உள்ளது என் கூறிக் கொள்ளும் ஈழத் தமிழர்கள் பலர் உள்ளனர். மத்திய அமைச்சர்களுடன் மாகாண அமைச்சர்களுடனும், லிபரல் கட்சிப் பிரமுகர்களுடனும் தமக்கிருக்கும் நெருங்கிய உறவினை படம் பிடித்துக் காட்டும் ஈழத் தமிழர்கள் பலரும் உள்ளனர் ஆயினும், இவர்களது செல்வாக்கும், நெருக்கமும், எமது நீண்ட போராட்டத்தின் ஓர் முக்கிய கட்டத்தில், பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் இன்று எம்முன் உள்ள கசப்பான உண்மை. நடந்து முடிந்தவைகளில் இருந்து நாம் சரியான படிப்பினையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஈழத்தமிழர்கள் தமது தேசிய அபிலாஷைகளை வென்றெடுப்பதில், கனேடியத் தமிழர்களுக்கு காத்திரமான பங்கு உண்டு. அப் பங்களிப்பினை வழங்கவேண்டிய தார்மீகக் கடமையும் அவர்களுக்கு உண்டு. சுனாமி நிதிக்காக டொலர்களை வழங்குவதுடன் கடமையும் பங்களிப்பும் முடிந்துவிட்டது என்று அர்த்தமல்ல. கனேடியத் தமிழர்கள் தமக்கு உள்ள அரசியல் சக்தியை ஒருமுகப்படுத்திச் செயற்படவேண்டிய தருணமிது. நீண்ட கொடிய யுத்தத்தில் 60,000த்திற்கு மேற்பட்ட உயிர்களைப் பலி கொடுத்துள்ளார்கள். இன்று இயற்கை அனர்த்தத்துக்கு 10,000க்கும் மேற்பட்ட உயிர்களைப் பலிகொடுத்துள்ளார்கள். இப்பாரிய இழப்புக்கள் அனைத்தையும் ஈடு செய்யக் கூடிய விலை ஒன்று இருக்குமேயானால் அது, ஈழத் தமிழ்த் தேசியத்துக்கான, அதன் தனித்துவ அடையாளத்துக்கான, சர்வதேச அங்கீகாரமாகவே இருக்கும். அதனை அவர்கள் பெற்றுக் கொள்ளவதற்கு கனேடியத் தமிழர்கள் முக்கிய பங்காற்ற முடியும், பங்காற்ற வேண்டும், என்கின்ற இன்றைய யதார்த்தத்தையும் தேவையையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். செய்வார்களா?

## அன்பார்ந்த வைகறை வாசர்களுக்கு!

கடந்த ஆறு மாதங்களாக வைகறை வாராந்தப் பத்திரிகையை இலவசமாக விநியோகித்து வருகின்றோம். ஓர் இலவசப் பத்திரிகையை வெளியிடுவதில் உள்ள சிரமங்கள் யாவரும் அறிந்ததே. ஓர் தனி விளம்பரப் பத்திரிகையாக வைகறையை வெளியிடுவதும் எமது நோக்கமல்ல. வாசகர்களுடன் ஓர் ஆரோக்கியமான கருத்து ஊடாட்டத்தை ஏற்படுத்துவதே எமது பிரதான நோக்கம். வைகறை தமது கைகளில் கிடைப்பதில்லை என பல வாசகர்கள் எம்மிடம் தொடர்பு கொண்டு தெரிவித்துள்ளார்கள். இதனை நிவர்த்தி செய்யும் பொருட்டு, வைகறைக்கான சந்தாதாரர்களைத் திரட்ட எண்ணியுள்ளோம். விநியோகச் செலவுகளை ஈடுகட்டுவதற்காக, ஓர் சிறு தொகையை சந்தாக்கட்டணமாக நிர்ணியித்துள்ளோம். வைகறையை கிரமமாகப் பெற விரும்புகின்ற வாசகர்கள் 6ம் பக்கத்திலுள்ள சந்தாப் படிவத்தைப் பூர்த்தி செய்து எமக்கு அனுப்பிவைத்தால் உங்கள் வாசல் தேடி வைகறை வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்து தருவோம். வாசகர்களின் ஆதரவை மூலவேராகக் கொண்டே இப் பத்திரிகையை வெளியிட விரும்புகின்றோம். அதுவே ஆரோக்கியமானதும் என எண்ணுகின்றோம்.

......

அன்புடன் ஆசிரியர் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைக்கு மேலதிகமாக ஒரு நிமிடம் கூட இலங்கையில் அமெரிக்கப் படை தங்கியிராது

## பிரதி பாதுகாப்பமைச்சர் வூல்விற்ச் கூறுகிறார், புலிகள் ஒத்துழைப்பதாக திருப்திப்படுகிறார்

இலங்கையில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் விடுதலைப் புலிகள் போதிய ஒத்துழைப்பை வழங்குவதாகத் தெரிவித்துள்ள அமெரிக்க பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் போல் வூல்விற்ச், இது நல்ல அறிகுறி எனத் தெரிவித்துள்ளார். இலங்கையில் கடற்கோளால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட பின்னர், கொழும்பு இன்டர்ஹொன்டினன்டல் ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில், இலங்கை மீட்பு மற்றும் புனர் நிர்மாணப் பணிகளை முடித்துக் கொண்டு மிக வேகமாகப் புனர் நிர்மாணப் பணிகளை நோக்கி முன்னேறுவதாகவும், இலங்கையில் தேவைக்கு மேலதிகமாக ஒரு நிமிடம் கூட தங்கியிருக்க அமெரிக்க மரைன் படைப் பிரிவினர் விரும்பவில்லை எனவும் குறிப்பிட்ட அவர், மேலும் தெரிவித்ததாவது கடற்கோளால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு உதவும் விடயத்தில் நாங்கள் எங்கிருக்கிறோம் என்பதை மதிப்பிடுவதற்கான பயணத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கிறோம். அமெரிக்காவின் இராணுவம் இங்கு மனிதாபிமானப் பணிகளை ஆற்றி வருவது தெரிந்ததே. அமெரிக்காவின் பணி என்ன, அமெரிக்க இராணுவத்தின் பணி என்ன என்பதை மதிப்பிடுவதும் இந்த விஜயத்தின் நோக்கம். இலங்கை சந்தித்த அழிவுகளுக்காக அதற்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம். இலங்கை பாரிய அழிவுகளை சந்தித்துள்ளது. அதேவேளை, மிக வேகமாக மீட்புப் பணிகள் போன்றவற்றை முடித்துக் கொண்டு புனர்நிர்மாணப் பணிகளை நோக்கி முன்னேறுகின்றது.இலங்கை தற்போது புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் கட்டத்தில் உள்ளது.இலங்கை இராணுவத்தினரும் அமெரிக்க இராணுவத் தினரும் இணைந்து பணியாற்றுவதை பார்த்தேன். அமெரிக்க இராணுவத்தினர் மரைன் பொறியியலாளர்கள் பிரிவு, இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றது. அவர்கள் இலங்கையில் தங்களுக்கு கிடைத்த வரவேற்பு குறித்து மகிழ்ந்து போயிருக்கிறார்கள். மரைன் படைப் பிரிவினர் குறித்து பொதுமக்களிடம் கேட்ட போது, அவர்கள் சிரித்தார்கள், நன்றி கூறினார்கள். நாங்கள் மாத்திரமல்ல, 14 நாடுகள் இங்கு பணிபுரிகின்றன.இந்தியாவும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கின்றது. தனியொரு நாடு அளித்துள்ள அதிக கூடிய உதவி என்ற வகையில் இந்தியாவே, இலங்கைக்கு சுனாமிக்கு பின் அதிக உதவி அளித்துள்ளது. தற்போது இங்கு பணிபுரியும் அமெரிக்கர்களில் இங்கு பிறந்து அமெரிக்காவின் குடியுரிமை பெற்ற மரைன் வீரர்களும் உள்ளனர். அவர்கள் இலங்கைக்கு சேவையாற்ற முடிந்ததில் அளப்பெரிய திருப்தி அடைந்துள்ளனர்.இங்கு எமது படையினர் 700 பேர் உள்ளனர்.அவர்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முடித்துக் கொண்டு, புனர் நிர்மாணப் பணிகளில் உதவப் போகின்றனர்.ஜனாதிபதியை சந்தித்தேன். அவர் ஏற்கனவே புனர்நிர்மானப் பணிகள் குறித்த கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளார் .விடுதலைப் புலிகள் விவகாரத்தையும், அசே விடயத்தையும் பொதுவாக பார்ப்பது தவறு.

இலங்கை மிகவும் ஆழமான கிளர்ச்சியையும் வன்முறையையும் சந்தித்துள்ளது.எனினும், சுனாமி மூலம் உணரப்பட்ட உண்மை ஒன்றுள்ளது.சுனாமிக்கு முன்னர் சமூகங்களிடையே சந்தேகங்கள் இருந்தன. இரு தரப்பும் ஏனைய தரப்பின் செயற்பாடுகள் குறித்து சந்தேகம் கொண்டிருந்தன.எனினும், தற்போது மறுதரப்பிலிருந்து உதவி கிடைத்துள்ளது. இது பாரிய மாற்றத்திற்கு வழிகோலலாம் .விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து சாதகமான மாற்றங்கள், முன்னேற்றங்கள் தென்படுகின்றன.விடுதலைப் புலிகள் நிவாரண மீட்புப் பணிகளில் போதிய ஒத்துழைப்பை வழங்குவதாக தெரிவிக்கப் படுகின்றது. இது நல்ல ஒரு அறிகுறி. இதேவேளை, அதிகளவு நம்பிக்கையும் கொள்ளக் கூடாது.இலங்கையிலும் இந்தோனேசியாவிலும் நிவாரணப் பணிகள் கையாளப்படும் விதத்திலும் வித்தியாசங்கள் உண்டு.இதிலும் இரண்டு முக்கிய வித்தியாசங்கள் உண்டு. இந்தோனேசியாவின் அசேயில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள், மிகத் தொலைவிலுள்ள கிராமங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களை ஹெலிகொப்டர் மூலம் மாத்திரமே மீட்டுக் கொண்டு வர முடிந்தது.இலங்கையில் இதனை தரை வழியூடாகவே செய்ய முடிந்தது. ஹெலிக்கொப்டர்கள் பெருமளவிற்குத் தேவைப்படவில்லை. இலங்கை மிக வேகமாக மீட்பு மற்றும் நிவாரண விநியோகப் பணிகளை முடித்துக் கொண்டு , புனர்நிர்மாணப் பணிகளுக்குள் நுழைகின்றது. இந்தோனேசி யாவின் இழப்புகளின் அளவும், துரிதமாக எதனையும் செய்ய முடியாத நிலையை தோற்றுவித்துள்ளது. மேலும், விநியோக வசதிகளும் கடினமாகவுள்ளன.இந்த சுனாமி அனர்த்தத்தை கையாளும் விடயத்தில் இலங்கை மிகவும் முன்னணியில் உள்ளது.இங்குள்ள அமெரிக்கப் படையினர் மிக விரைவில் தாயகம் திரும்ப எண்ணியுள்ளனர். தேவைக்கு அதிகமாக ஒரு நிமிடம் கூட நாம் இங்கிருக்க விரும்பவில்லை. எமது இராணுவப் பணிகள் சிறப்பாக இடம்பெறுகின்றன.உலகில் அனர்த்தம் நிகழ்ந்த உடனேயே பாரிய அளவில் ஆட்களை திரட்டி, மீட்புப் பணிகளை மேற்கொள்ளும் திறன் எம்மிடம் மாத்திரமே உள்ளது.அதனாலேயே நாம் இந்த சுனாமி அனர்த்த உதவிப் பணிகளில் தீவிர அக்கறை காட்டுகின்றோம். நாங்கள் எனினும், இங்கு இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

# அமெரிக்க கடற்படை மருத்துவர் குழு பருத்தித்துறையில்

அமெரிக்கக் கடற்படையின் மருத்துவக் குழுவொன்று தற்போது பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் நிலை கொண்டுள்ளது .மருத்துவ நிபுணர்கள், தாதியர், சுகாதாரத் தொண்டர்கள் என 21 பேர் இக்குழுவில் அடங்கியுள்ளனர். டாக்டர் ரோன் டேவிஸ் தலைமையில் இக்குழுவினர் இங்கு இரு வாரங்கள் தங்கியிருந்து சிகிச்சை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.எனினும், தமது மருத்துவ சேவை யாழ்ப்பாணத்துக்கு மேலும் தேவைப்பட்டால், இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகமும், இலங்கை அரச தரப்பினரும் அது குறித்து முடிவு செய்வார்களென டாக்டர் டேவிஸ் தெரிவித்தார்.தற்போது பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் கடமையாற்றுமாறே பணிக்கப்பட்டுள்ளோம். வேறு பகுதிகளுக்கும் செல்லுமாறு அமெரிக்க தூதரகமோ அல்லது எமது வருகைக்கான ஏற்பாடுகளைச் செய்தவர்களோ எம்மைக் கேட்டுக் கொண்டால் மேலதிக காலம் இங்கு தங்கியிருந்து சேவையாற்றுவோமெனவும் அவர் கூறினார்.

இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு நேரில் சென்று மருத்துவ உதவிகளை வழங்குவதே சிறந்தது. பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் அதற்கு அனுமதி வழங்கினால் நிச்சயம் முகாம்களுக்குச் செல்வோமென்றும் தெரிவித்தார்.

# அமெரிக்கப் படையின் வருகை குப்பை கூளத்தை புதைக்கும் மனிதாபிமானப் பணிக்கு மட்டுமே

இலங்கையில் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தினால் ஏற்பட்ட இடிபாடுகளை குழிதோண்டிப் புதைத்து சூழலை சுத்தம் செய்யும் மனிதாபிமான பணிக்கென வந்துள்ள அமெரிக்கப் படையினரை வரவேற்கின்றோம். ஆனால் அதனை விட மீறிய செயற்பாடுகளில் ஈடுபடுவதை அனுமதிக்கவும் முடியாது ஏற்றுக்கொள்ளவும் முடியாதென்கிறார் ஜாதிக ஹெல உறுமயவின் பாராளுமன்ற குழுத் தலைவர் அதுருலியே ரத்ன தேரர்.கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும் போதே இதனைத் தெரிவித்தார்.மனித நேயப் பணிகளை மேற்கொள்வதற்காகவே அமெரிக்கப் படைகள் உட்பட அந்நிய நாட்டுப் படைகள் இலங்கை வந்தன, அதனை வரவேற்கின்றோம். ஆனால், மனிதாபிமான உதவிகளை மீறிய தலையடுகளை ஏற்கவும் முடியாது அனுமதிக்கவும் முடியாது.கடற்கோள் அனர்த்தம் நிகழ்ந்தவுடன் எமக்கு நேசக்கரம் நீட்டியது. அயல் நாடான இந்தியாதான். இன்றும் உதவி செய்கின்றனர். இதனைப் பாராட்டாமல், நன்றி கூறாமல் இருக்க முடியாது.அதற்குப் பின்னர் தான் இடிபாடுகளையும் ஏனைய குப்பைகளையும் குழிதோண்டிப் புதைக்க அமெரிக்க போன்ற நாடுகள் முன்வந்தன. இதுவும் தேவைதான். ஆனால், அதனை மீறிய செயற்பாட்டை ஏற்க முடியாதென்றும் அதுருலியே ரத்ன தேரர் தெரிவித்தார்.

# புலிகளின் பகுதிகளுக்கு அமெரிக்க உதவிகள் செல்வதை அந்நாட்டுச் சட்டங்கள் தடுக்கின்றன

கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பல்வேறு பகுதிகளிலும் அமெரிக்கப் படையினரும், அமெரிக்க உதவி நிறுவனங்களும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டாலும் அமெரிக்கப் படையினரோ அல்லது அவர்களது உதவி நிறுவனங்களோ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் செல்வதற்கு சட்டச் சிக்கல்கள் எழுந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளர்.இது பற்றி "லொஸ் ஏஞ்சல்ஸ் ரைம்ஸ்" பத்திரிகை கூறுகையில்,கடற்கோள் அனர்த்தத்தை தொடர்ந்து, இலங்கை அரசின் அவசர அழைப்பின் பேரில் பல நூற்றுக்கணக்கான அமெரிக்கப் படையினர், கடற்படைக் கப்பல்கள், விநியோக விமானங்கள், ஹெலிகொப்டர்கள் சகிதம் இலங்கை வந்துள்ளனர்.இவர்கள் தங்கள் பணிகளுக்காக வடக்கு - கிழக்கிற்குச் சென்றாலும், இப் பகுதிகளில் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளுக்கு நிவாரணப் பணிகளுக்காகச் செல்லமாட்டார்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த நிலையில், விடுதலைப் புலிகளை சர்வதேச பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்த்துள்ள அமெரிக்கா, புலிகள் அமைப்பை தடைசெய்துமுள்ளது. இலங்கை அரச படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தற்போது போர் நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தாலும், தற்போதைய நிலையில், அமெரிக்கப் படையினரோ அல்லது அமெரிக்க உதவி அமைப்புகளோ புலிகளின் பகுதிகளுக்குச் செல்வதற்கு அமெரிக்காவின் சட்டம் தடையாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனால், அமெரிக்க அதிகாரிகளை குழப்பமடையச் செய்துள்ளது.இந்த அனர்த்தமானது எவ்வித பாகுபாட்டையும் காட்டாததால், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான உதவிகளிலும் பாகுபாடு காட்டப்படக்கூடாதென தாங்கள் கருதுவதாக, இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் கிறிஸ் லோங் தெரிவித்தார்.

புலிகளும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் உள்ளதால், அவர்களது பகுதிகளுக்கு உதவுவதையும், அப்பகுதிகளுக்கு உபகரணங்களை அனுப்புவதையும் அமெரிக்க அரசாங்கம் தடுக்கிறது என்பதே கருத்தாகுமென்றும் அவர் கூறினார்.அமெரிக்க சட்டம் இவற்றைத் தடுத்தாலும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புகளினூடாக இவற்றை அப்பகுதிகளுக்கு அனுப்பும் வாய்ப்புள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.நாடு முழுவதற்கும் நிவாரணப் பொருட்களை விநியோகிக்கத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக "யு.எஸ்.எயிட்"டின் வெளிநாட்டு அனர்த்த நிவாரண உதவிக்கான அதிகாரியான கென் இஷாக்ஸ் தெரிவித்தார்.ஆனாலும், இவற்றுக்கெல்லாம் அப்பால், அப்பகுதிகளுக்கு உதவிகள் தேவையென்பதால் தற்போது அது குறித்து கவனத்திலெடுத்துள்ளதாகவும் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு ஓடு பாதையில் விடுதலைப் புலிகளின் இரண்டு விமானங்கள்!

விடுதலைப் புலிகள் வசம் இரு விமானங்கள் இருப்பது தற்போது உறுதியாகியுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.கிளிநொச்சி இரணைமடுக் குளக்கட்டின் அருகேயுள்ள ஓடு பாதையிலேயே இவ்விரு விமானங்களும் நிறுத்தப்பட்டிருப்பதை விமானப் படையினரின் உளவு விமானம் (யு.ஏ.வி.) கடந்த புதன்கிழமை கண்டுபிடித்துள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.அதேநேரம் செய்மதிப்படமும் இதனை உறுதிப்படுத்தியுள்ளதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. எனினும், இந்த செய்மதிப் படத்தை வழங்கிய தரப்பு குறித்து படைத் தரப்பு எதனையும் தெரிவிக்கவில்லை.இரணைமடுவிலுள்ள இந்த ஓடு பாதையானது சுமார் 1,250 மீற்றர் நீளமுடையதெனவும் , இந்த ஓடு பாதையானது சி-130 ஹேர்குலிஸ் ரக சரக்கு விமானம், பூரணமாக சரக்குகளை ஏற்றிக் கொண்டு தரையிறங்கக் கூடிய வசதியைக் கொண்டதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இந்த விமானமானது தனி சுழலியைக் கொண்ட ஆறு இருக்கைகளையுடைய வானூர்தியென, யு.ஏ.வி. விமானத்திலிருந்து எடுக்கப்பட்ட படங்கள் தெரிவிப்பதாகவும் வியாழக்கிழமை இரவு யு.ஏ.வி.மேற்கொண்ட உளவு நடவடிக்கை மூலம் ஆறு இருக்கைகளைக் கொண்ட மற்றொரு வானூர்தியும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது. எனினும், 2 ஆவது விமானம் முதலாவது விமானத்தை போலல்லாது சற்று வித்தியாசமானதெனவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் விடுதலைப் புலிகளிடம் இரு விமானங்கள் இருப்பதை விமானப் படையினர் முதல் தடவையாக இந்த வாரம் உறுதிப்படுத்தியுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.இவை நிறுத்தப்பட்டிருந்த ஓடு பாதைக்கு வடமேற்காக, இந்த விமானங்களை நிறுத்தக் கூடிய கூடாரமொன்றும் காணப்பட்டதாகவும் விமானப் படையினர் தெரிவித்துள்ளனர்.முன்னர் புலிகள் வேறு ஓடு பாதையொன்றை அமைத் திருந்ததாகவும் ஆனாலும் தற்போது அதனை விடுத்து புதிய ஓடு பாதையொன்றை அமைத்துள்ளதாகவும் படையினர் தெரிவிக்கின்றனர்.இதே நேரம், வன்னிப் பகுதியில் இந்த உளவு விமானம் அடிக்கடி பறந்த போதும் புலிகளின் விமானங்களையோ அல்லது புதிய ஓடுபாதையையோ கண்டுபிடிக்க முடியாத படையினர்,தற்போது இலங்கை வந்துள்ள அந்நியப் படையினரின் உதவியுடன் புலிகளின் பகுதிகளில் உளவு வேலைகளில் ஈடுபட்டு இவ்வாறு கூறலாமெனவும் கருதப்படுகிறது.

# கனேடிய பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஜியானிஸ் குடாநாட்டிற்கு விஜயம்



கனடா ரொறன்ரோ - ஸ்காபரோ பிரதேச பாராளுமன்ற உறுப்பினரும், கனடா குடியரசு பாராளுமன்ற செயலாளருமான ஜிம் ஹரிஜியானிஸ் புதன்கிழமை யாழ். குடாநாட்டிற்கு விஜயம் செய்து கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டதுடன், யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். கொழும்பிலிருந்து பலாலி விமான நிலையத்தை வந்தடைந்த கனடா பாராளுமன்ற உறுப்பினரும் கனடா வாழ் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் நான்கு பேர் அடங்கிய குழுவினர் நேரடியாக யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்திற்கு விஜயம் செய்து, யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியைச் சந்தித்து, இயற்கை அனர்த்தத்தின் பின்னரான செயற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலில் யாழ் . மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.இச்சந்திப்பின் போது, கனேடிய பாராளுமன்ற உறுப்பினருடன் பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கடல் அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் நலன்கள், அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பேசிய அதேநேரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் போதியளவில் கிடைத்துள்ளதா என அவர் வினவினார்.இது தொடர்பாக கனேடியப் பாராளுமன்ற உறுப்பினருக்கு பூரண விளக்கமளித்துள்ளோம். பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவிகள் இதுவரை போதியளவு கிடைக்கவில்லை. இதன் காரணமாக அந்த மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் தெரிவித்துள்ளதாகவும் தெரிவித்தார். வெள்ளிக்கிழமை முகமாலை வழியாக வன்னிக்குப் பயணம் செய்த அவர், கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு பிரதேசத்தையும் நேரில் சென்று பார்வையிட்டார். பின் இவர், கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நண்பகல் 12 மணியளவில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசினார்.அதன் பின் கருத்துத் தெரிவித்த அவர், கனேடிய அரசும் மக்களும் இந்த உதவிகள் சமமாகப் பகிர்ந்தளிப்பதில் அவதானமாக உள்ளனர் எனவும், தான் ஊடக விளம்பரங்களுக்காக அல்லாமல் நீண்டகால உதவித் திட்டங்களுடனேயே இங்கு வந்தேன் எனவும் கூறினார்.தொண்டர் நிறுவனங்கள் ஊடாக வழங்கப்படும் இந்த உதவிகளை தென்பகுதிக்கும் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிப்பதற்கு தாம் உறுதியளித்திருப்பதாகவும் கூறினார்.

# நிவாரணம் தமிழ்ப் பகுதிகளுக்கு உரிய முறையில் செல்வதை கனடா உறுதிப்படுத்தும்

### பிரதமர் போல் மார்ட்டின்



சமாதான முயற்சிகள் ஆரம்பமான காலத்தின் பின்னர் விடுதலைப் புலிகளை எந்த நாடும் தனது பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கவில்லை என சுட்டிக் காட்டிய கனடியப் பிரதமர் போல் மார்ட்டின், விடுதலைப் புலிகள் அமைப்பை மீண்டும் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்ப்பது ஏற்கனவே பலவீனமான நிலையில் உள்ள சமாதான முயற்சிகளை மேலும் பலவீனமாக்கிவிடும் என்பதால் இதனைத் தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கம் உட்பட பலர் நம்மைக் கேட்டுக் கொண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். திங்கட்கிழமை இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்ட பின்னர் கலதாரி ஹோட்டலில் செய்தியாளர்களைச் சந்தித்த வேளையே அவர் இதனைத் தெரிவித்தார்.விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகளுடன் போல் மார்ட்டின் ஒட்டி உறவாடுவது கனடாவுக்கு வருவதற்கு தடை செய்யப்பட்ட தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பது போன்ற பல கேள்விகளுக்குப் பதிலளித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:தாய்லாந்து சுனாமியால் பாதிக்கப்பட்ட விதத்துக்கும் இலங்கை பாதிக்கப்பட்ட விதத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் உள்ளன. ஏற்பட்ட அழிவிலும் வித்தியாசங்கள் உள்ளன. இலங்கையைப் பொறுத்தவரை உள்ளூர் மக்களே சுனாமியின் சீற்றத்தினை அதிகம் எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தாழ் நிலப் பகுதிகளில் இருந்த மக்கள் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ளனர். சுனாமி அலைகளின் முழுத் தாக்கத்தின் அளவு இங்கேயே தென்படுகிறது. அந்த அலைகள் என்ன செய்துள்ளன என்பதையும் இங்கேயே உணர முடிகின்றது.நான் பல கிராமத்தவர்களுடன் பேசியபோது அவர்கள் பலியானவர்களின் எண்ணிக்கை சரியாகக் கூற முடியாது என்றார்கள்.

ஒரு பாரிய புதை குழியைப் பார்த்தேன். ஒரு வீடு தரைமட்டமாகிக் கிடந்தது. ஒரு மனிதர் அருகில் நின்று கொண்டிருந்தார். அவர் இதுதான் எனது வீடு என்றார். பக்கத்தில் ஒரு சிறுவன் நின்று கொண்டிருந்தான். அவனிடம் உங்கள் தந்தைக்கு உதவக் கூடாதா எனக் கேட்டேன். அந்தச் சிறுவன் அவர் தனது தந்தை இல்லை எனவும் தந்தையை அலைகள் அடித்துக் கொண்டு போய் விட்டதாகவும் சொன்னான். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக பணிபுரியும் கனடாவின் டார்ட் குழுவைச் சந்தித்தேன். அவர்கள் தமது பணி குறித்து பெருமிதம் கொண்டுள்ளனர். டார்ட் குழு மருத்துவ முகாம்களை நடத்துகின்றது. அங்கு சகல விதமான சிகிச்சையும் அளிக்கப்படுகின்றது. அங்கு சிகிச்சை பெறுபவர்கள் கடும் மன உளைச்சலுக்கு உட்பட்டவர்களாகக் காணப்படுகின்றனர்.தங்களுக்கு நேர்ந்த அவலங்களை ஏற்றுக் கொள்வது, அதற்கு முகம் கொடுப்பது மிகவும் சவாலான விடயமாக இவர்களுக்கு அமையப் போகின்றது.

ஒவ்வொரு மருத்துவ நிலையத்திலும் ஐம்பது முதல் நூறு பேர் நாள்தோறும் சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர்.கனடா குழு தங்களுக்கான உண்மையான கடப்பாடுகளுக்கு அப்பால் புனர்நிர்மாணப் பணி, நீர் சுத்திகரிப்புப் பணி போன்றவற்றையும் மேற்கொள்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்கு பல காரணங்கள் உள்ளன. முதலாவது காரணம் நிதியுதவி வட, கிழக்கு போன்ற பகுதிகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படுகின்றதா? என்பதை உறுதிப்படுத்துவது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் இதற்காக அவர்களைச் சந்திக்க வேண்டியுள்ளது.சீடா அமைப்பு மூலமும் எமது உயர்ஸ்தானிகராலயம் மூலமும் கூட இதனை உறுதிப்படுத்த முயல்கிறோம்.அரச சார்பற்ற அமைப்புகளிடமும் இது குறித்து ஆராயவுள்ளோம்.மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்கும் வேளை சிறுவர்கள் படையணியில் சேர்க்கப்படுவதாக வெளிவரும் வதந்திகள் குறித்தும் விவாதிப்பேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு ஒரேயொரு முறை மாத்திரமே கனடா வருவதற்கான விசா மறுக்கப்பட்டது. அவர்கள் நிதி திரட்டும் நடவடிக்கையொன்றில் ஈடுபட வருகிறார்கள் என்பதற்காகவே விசா மறுக்கப்பட்டது.ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின்படி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது.மனிதாபிமானப் பணிகளுக்கு நிதி சேகரிக்கலாம். நான் இங்கு வருவதற்கு முன்னர் கற்பனை செய்து பார்த்திராத விடயங்களை எல்லாம் இங்கு வந்த பின் பார்த்தேன்.நான் இன்று இலங்கையில் சுனாமியால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகச் சொன்னார்கள். ஹெலிகொப்டரிலிருந்தும் பார்த்தேன். நீண்ட கடற்கரையையும் பார்த்தேன். பாரிய புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அழிக்கப்பட்ட வீடுகளையும்

6ம் பக்கம் பார்க்க

# ஹெல்கீசன், சொல்ஹெய்ம் அடுத்த வாரம் இலங்கை வருகிறார்கள்

நோர்வே அனுசரணையாளர் குழுவினர் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளனர்.கடந்த வாரம் முற்பகுதியில் இவர்கள் இங்கு வரவிருந்த போதிலும் இவர்களது இலங்கை விஜயம் இரு வாரங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.இந்த நிலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்மும் 19 ஆம் திகதி பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கீசனும் 20 அல்லது 21 ஆம் திகதி வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனும் இலங்கை வரவுள்ளனர்.இங்கு இவர்கள், கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளுக்கும் நேரில் சென்று நிலைமைகளை அவதானிக்கவுள்ளனர். அத்துடன், இவர்கள் அரசுதரப்பினரையும் விடுதலைப் புலிகளையும் சந்தித்து கடற்கோள் அனர்த்தப் பாதிப்பு மற்றும் சமாதான முயற்சிகள் குறித்தும் பேசவுள்ளனர்.கடற்கோள் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தாய்லாந்து மற்றும் இந்தோனேசியாவுக்கு அண்மையில் விஜயம் செய்த ஜான் பீற்றர்சன் இலங்கைக்கு உடனடியாக வராதது குறித்து விமர்சனங்கள் எழுந்த நிலையில், நோர்வே அனுசரணையாளர்கள் குழு இங்கு வரவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.





J.S.T.D Financial Service
பணமில்லையா? கவலை வேண்டாம்
2 நாட்களில் உங்கள் பிரச்சனையை தீர்க்க நான் இருக்கிறேன்
$ 25,000 - $50,000
■Line of Credit ■ Personal Loans ■Credit Cards ■Mortgage & Refinancing
Call JAY @
Office - 416.288.9425 Cell - 416.666.5381




S & S Satellite Service
SunTV and KTV மேலும் 300க்கு மேற்பட்ட TV Channels களும்
உங்கள் இல்லம் நோக்கி வருகின்றன....
$430.00 மட்டுமே
Digital Satellite Systems.
Free- To-Air
சுதர்சன் 416.569.9372 , 514.568.0193
சிவா 416.908.5931


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமியைத் தொடர்ந்து இலங்கையில் குவியும் வெளிநாட்டுப் படைகள்

துறைமுக அலையின் (சுனாமி) தாக்கம் முடிவடைவதற்குள், பாதிக்கப்பட்ட நாடுகளின் துறைமுகங்களை நோக்கி அலையலையாக பன்னாட்டு போர்க் கப்பல்களும் படையெடுக்கத் தொடங்கிவிட்டன. விமான நிலையங்கள் யாவும் அந்நியப் படைகளின் விமானங்களாலும் ஹெலிகொப்டர்களாலும் நிறைந்து காணப்படுகின்றன. வான்வெளியில் விபத்துக்கள் ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுமளவிற்கு விமானங்களும் ஹெலிகொப்டர்களும் பறந்து திரிகின்றன.

கடற்கோளினால் தெற்காசியாவும் தென்கிழக்காசியாவுமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. இந்த அனர்த்தத்தால் இலங்கை இடிந்து போய்விட்டது. போரழிவை விட, பேரழிவை ஒரு சில நிமிட நேரத்தில் சந்தித்துள்ளது. வடக்கு - கிழக்கில் மிகப் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. படையினரதும் புலிகளதும் கட்டுப்பாட்டுப் பிரதேச எல்லைகள் கூடத் தெரியாதளவிற்கு கடற்கோளினால் இலங்கை படையினர் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இருந்த இடங்களில் இன்று பல படை முகாம்களில்லை. ஆட்லறிகளுடன் ஆயுதக் களஞ்சியங்களும் அள்ளிச் செல்லப்பட்டுவிட்டன. சமாதான முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்து மீண்டுமொரு போர் வெடித்து விடலாமென அஞ்சப்பட்ட நிலையில் வடக்கு - கிழக்கில் படையினர் பேரழிவைச் சந்தித்துள்ளனர். புலிகளுக்கும் பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாகக் கூறி படைத்தரப்பு ஆறுதலடைய முற்பட்டாலும் அதில் எந்த அளவிற்கு உண்மையுள்ளது என்பது யாரும் அறிந்து கொள்ள முடியாது விடயம்.

கடற்கோள் அனர்த்தம் ஆயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவு கொண்ட அதேநேரம், மற்றொரு யுத்தத்திற்கு முகம் கொடுக்க முடியாத நிலையில் மிகவும் பலவீனமாக இருந்த படையினருக்கு ஏற்பட்ட பேரழிவு அரசை உலுக்கிவிட்டது. அனர்த்தம் நிகழ்ந்த அடுத்த சில தினங்களில் முப்படைத் தளபதிகளும் வடபகுதிக்குச் சென்று படையினருக்கு ஏற்பட்ட பாரிய இழப்புகள் குறித்து மதிப்பீடு செய்ததுடன், அதிர்ந்து போயிருந்த படையினருக்கும் ஆறுதல் அளித்தபோது, அந்நியப் படைகள் சிலவற்றின் வருகை குறித்தும் சூசகமாகத் தெரிவித்தனர்.

இயற்கை அனர்த்தத்தால் இந்தியாவின் தென்பகுதிக் கடலோரங்களும் பலத்த அழிவைச் சந்தித்தாலும் இலங்கையில் ஏற்பட்ட இழப்புகள் குறித்தே இந்தியா சிந்தித்தது. தனது இழப்பையும் பொருட்படுத்தாது இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்க இந்தியா களத்தில் குதித்தது. தெற்காசியப் பிராந்தியத்தில் வல்லரசாகும் தனது முயற்சிக்கு முட்டுக்கட்டை வந்துவிட முன்பே இலங்கைக்கு உதவ முன்வந்தது.

அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் உதவியை இலங்கை நாடி விடக்கூடாதென்பதில் மிகுந்த கவனம் செலுத்திய இந்தியத் தலைவர்கள், இலங்கை ஜனாதிபதியுடன் அடிக்கடி தொடர்புகொண்டு தங்களின் வருகையை அறிவித்துக் கொண்டிருந்தனர். மீட்புப் பணிக்காக இந்தியக் கடற்படை வருமெனவும் உறுதியளிக்கப்பட்டு, அதற்கேற்ப விமானம்தாங்கி கப்பல்கள் பலவற்றுடன் இந்தியப் படையினர் இலங்கைக்குள் வந்தனர்.

வேற்று நாட்டுப் படைகளை இலங்கை அழைக்க முன்பே இலங்கையில் மீட்புப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திவிட வேண்டுமென இந்தியா அவசரம் காட்டியது.

அழுத்தங்களையும் தாண்டி அமெரிக்கப் படையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கைக்குள் அழைத்துவிட்டார்.

**இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு பெரும் தோல்வி ஏற்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களின் பிரச்சினையை மனிதாபிமானமாக தீர்க்க உதவாது தனது நலனுக்காக அதனைப் பயன்படுத்தி ஈழத் தமிழரையும் வேதனைக்குள்ளாக்கி இலங்கையையும் மிரட்டி வந்த இந்தியா, இன்று அமெரிக்கப் படையினரின் இலங்கை வருகையால் அதிர்ந்து போயுள்ளது.இனியாவது இந்தியா, இனப் பிரச்சினை தீர்வு விடயத்திலும், சிங்கள இனவாதிகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை உணரத் தவறுவார்களேயானால், இப் பிராந்தியத்தில் இந்தியாவைக் கூட காப்பாற்ற எவருமே இருக்க மாட்டார்களென்பதே உண்மை.**

ஆனாலும், அதற்கு முன்பே, அமெரிக்கப் படையை அழைக்க இலங்கை தீர்மானித்துவிட்டது. இதனை தடுத்துவிட இந்தியத் தலைவர்கள் பலத்த முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் அமெரிக்கப்

இயற்கை அனர்த்தத்திற்காக உதவவென போர்க் கப்பல்கள், விமானங்கள், தாக்குதல் ஹெலிகொப்டர்கள் என மிகப்பெரும் இராணுவ இயந்திரத்துடனே இலங்கைக்குள் நுழைந்துள்ள அமெரிக்கா, கடற்கோள் அனர்த்தம் ஏற்பட முன்பே இதுபற்றித்



படைகளின் இலங்கை வருகை உறுதிப்படுத்தப்பட்டது.

மத்திய கிழக்கு நாடுகளில் நெருக்கடிகள் அதிகரித்த நிலையில் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தனக்கு வாய்ப்பான தளமொன்றுக்காக அமெரிக்கா மிக நீண்டகாலமாகவே இலங்கை மீது ஒரு கண்வைத்துள்ளது. ஆனாலும், இப்பகுதியில் குட்டி வல்லரசாகத் திகழும் இந்தியாவுக்கு இது கடும் சினத்தை மூட்டி வந்ததால் இவ் விடயத்தில் ஒரு சில வேளைகளைத் தவிர, ஏனைய நேரங்களில் அமெரிக்கா அடக்கியே வாசித்தது. அதேநேரம், இலங்கையை எப்போதும் தனது பிடிக்குள் வைத்திருந்ததால் இந்தியாவை மீறி எவராலும் இதற்குள் நுழைவதும் கடினமென்றதொரு நிலையிருந்தது.

உள்நாட்டுப் போரில் சிக்கித் தவிக்கும் இலங்கைக்கு, இந்தியாவின் ஆசி இன்றியமையாதது. இலங்கையில் இனக் கலவரம் ஏற்பட்ட பின்னர் இலங்கையின் உள்விவகாரத்தில் இந்தியா எவ்வாறெல்லாம் ஆதிக்கம் செலுத்தியது என்பதற்கு இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கையும் எடுத்துக் காட்டாகும். ஆனாலும், இதனையும் மீறி இந்தியத் தலைவர்களின் வேண்டுகோள்கள்,

தெரிந்தும் ஏன் அதுபற்றிக் கூறவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

கடற்கோள் அனர்த்தம் வடக்கு - கிழக்கில் படையினரின் வளங்களை கழுவித் தள்ளியதால் புலிகளின் கை ஓங்கி விடுமென இலங்கை அரசு பயந்தது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் புலிகள் நுழைந்து விடலாமெனவும் அஞ்சியது. இயற்கை அனர்த்தத்தின் தாக்கம் குறைந்ததும் புலிகள் போருக்கு அழைத்து விடுவார்களெனவும் அஞ்சியது. இதனால், புலிகளின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள அமெரிக்கா போன்ற படையொன்று தேவை என்பதை உணர்ந்தே அவர்களுக்கு அவசர அழைப்பு விடுத்தது.

இலங்கை வந்த அமெரிக்க படையினருக்கும் மீட்புப் பணியில் ஈடுபடும் வாய்ப்பு கிடைக்கவில்லை. அனர்த்தம் இடம்பெற்று பல நாட்களின் பின்பே அவர்கள் இங்கு வந்துள்ளனர். அதேநேரம், நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதை விட அவர்கள் முக்கிய துறைமுகம்களை கட்டியெழுப்பி அங்கு தங்கள் நிலைகளைப் பலப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். இது பலத்த சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. அமெரிக்காவிற்கு, இலங்கையின் திருகோணமலைத் துறைமுகம் மீது ஒரு கண்ணுள்ளது. இதேநோக்கம்

இந்தியாவுக்கும் உள்ளது. இதனால் தான் அமெரிக்கப் படைக்கு இலங்கை அரசு அழைப்பு விடுத்த மறுகணம், இந்தியக் கடற்படையின் இரு பாரிய யுத்தக் கப்பல்கள் திருகோணமலை துறைமுகப் பகுதியில் நங்கூரமிட்டுள்ளன. இதையடுத்து, அமெரிக்க கடற்படைக் கப்பல் மட்டக்களப்பு நாவலடி கடற்பரப்பில் நிலை கொண்டுள்ளது. இப் பிராந்தியத்தில் இவ்விரு நாடுகளுக்குமே கடும் போட்டா போட்டி நிலவுகையில் அமெரிக்கப் படையினரின் உதவிக்கெனவும், நிவாரணப் பணிகளில் ஈடுபடவுமெனக் கூறி பாகிஸ்தானியப் படைகளும் கடற்படைக் கப்பல்களுடன் வந்துள்ளன. அமெரிக்காவின் சகாவான ஜப்பானும் அமெரிக்கப் படைகளுக்கு உதவவென தனது படையினரையும் அனுப்புகின்றது. இதேநேரம், இங்கு வந்த படையினர் எவரும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் செல்லமாட்டார்கள். இந்திய, அமெரிக்கப் படையினரும் இதனை உறுதிப்படுத்தியுள்ளனர். ஆனாலும், இந்தப் படைகள் குறிப்பாக அமெரிக்கப் படைகள் கிழக்கிலும், வடக்கில் யாழ்ப்பாணத்திலும் முகாமிடவுள்ளன. தற்போது, காலி துறைமுகப் பகுதியிலும் கட்டுநாயக்கா விமான நிலையத்திலும் முகாமிட்டுள்ள அமெரிக்க படைகள், பலாலி மற்றும் காங்கேசன்துறை துறைமுகத்தை அண்டிய பகுதிகளிலும் முகாமிடவுள்ளனர். நிவாரண மற்றும் மீள் கட்டுமாணப் பணிகளில் இவர்கள் ஈடுபடவுள்ளதால் இலங்கை அரசுக்கு திருப்தியேற்படும் வரை இவர்கள் இங்கு நிலைகொண்டிருப்பார்களென அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் கூறியுள்ளார். நிவாரணப் பணியென்று கூறி இலங்கைக்குள் நுழைந்துவிட்ட இவர்களை திருப்பி அனுப்பும் சக்தி இனி இலங்கை அரசுக்கு இருக்குமா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது. வியட்நாம், ஈராக் அனுபவங்களை எவரும் இலேசில் மறக்கமாட்டார்களென்றாலும், தற்போது மத்திய கிழக்கில் அமெரிக்கா எதிர்கொண்டுள்ள மிகப்பெரும் நெருக்கடிகளிலிருந்து விடுபட இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், குறிப்பாக, தெற்காசியாவில் அமெரிக்கப் படைகளுக்கு தளமொன்றை ஏற்படுத்த வேண்டியது மிக மிக அவசியமாகும்.

இந்த நிலையில் அமெரிக்கப் படையினரின் வருகை இலங்கை அரசியலிலோ தற்போதைய சமாதான முயற்சிகளிலோ எதுவித மாற்றங்களையும் ஏற்படுத்தாதென கொலின் பவல் கூறினாலும், தேவைக்கேற்ப படையினரின் எண்ணிக்கை கூடிக் குறையுமெனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, இன்று இலங்கையின் அனைத்து துறைமுகங்களிலும் அந்நிய போர்க் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. காங்கேசன்துறை துறைமுகத்திற்கும் மிக விரைவில் அமெரிக்க போர்க் கப்பல் செல்லவுள்ளது. அதேநேரம், அந்நியப் படைகள், இடர் அனர்த்த நிவாரணப் பணிகளுக்காகவே இங்கு வந்துள்ளதால் அவர்களது வருகை போர்நிறுத்த உடன்பாட்டிற்கு எதுவித பாதிப்பையும் ஏற்படுத்தாதென தெரிவிக்கப்படுகின்றது.

போர்நிறுத்த உடன்பாட்டின்படி, படையினரும் புலிகளும் மற்றவரது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் செல்வதாயின் உரிய முறையில் அனுமதி பெற வேண்டுமென்பது அவசியம். அதேபோன்ற கடற்பரப்பிலும் வான் பரப்பிலும் கட்டுப்பாடுகளுள்ளன. தற்போதைய, நிலையில் வெளிநாட்டுப் படைகள் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளினுள் செல்லமாட்டார்களென்றாலும், அவர்களது விமானங்களும் ஹெலிகொப்டர்களும்

8 ம் பக்கம் பார்க்க

Canada Payroll Loan Inc.
PAYDAY LOAN NO INTEREST!
No Credit, New Credit, Bad Credit
Borrow up to $1000

For more Infor Call us or visit us:
2171 Lawrence Ave. E. Scarborough, On. ( Birchmount & Lawrence )
Tel: (416) 755-4555 Fax: (416) 755-8458

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஜயேந்திரரை ஒரு நாள் போலிஸ் காவலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு

காஞ்சி வரதராஜபெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள, காஞ்சி இளைய மடாதிபதி விஜயேந்திரரை விசாரணைக்காக, ஒரு நாள் போலிஸ் காவலில் வைக்க காஞ்சிபுரம் நீதிமன்றம் , செவ்வாய்க்கிழமை, அனுமதி அளித்தது. காஞ்சி நீதிமன்றததில் இன்று விசாரணைக்காக , சென்னை சிறையில் இருக்கும் விஜயேந்திரர் வந்திருந்தார். தன்னிடம் அனைத்து விவரங்களும் போலிசார் கேட்டுவிட்டதாகவும், தனக்கு தெரிந்த தகவல்கள் அனைத்தையும் தான் முன்னமேயே கூறிவிட்டதாகவும் , இனி சொல்வதற்கு ஒன்றுமில்லை என்றும் அவர் நீதி மன்றத்தில் கூறினார்.இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி , விஜயேந்திரரை ஒரு நாள் போலிஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்து உத்தரவிட்டார்.இதற்கிடையே, காஞ்சி மடத்தின்



வங்கிக் கணக்குகளை போலிஸ் முடக்கி வைத்ததை எதிர்த்து, மடத்தின் சார்பில் போடப்பட்ட மனுவை விசாரித்த சென்னை உயர் நீதிமன்றம் மடத்தின் அன்றாட தேவைகளுக்காக 24ந்தேதி வரை மடத்தின் வங்கிக் கணக்குகளில் இருந்து இரண்டு கணக்குகளை இயக்க அனுமதி அளித்தது.

# உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் அறிமுகம்

உலகின் மிகப்பெரிய பயணிகள் விமானம் ஏர்பஸ் ஏ-380 என்ற விமானம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது. பிரான்ஸ் நாட்டின் தென்மேற்குப் பகுதி தூலோஸ் நகரில் இதுகுறித்து நடந்த பெரும் வைபவத்தில் பிரெஞ்சு அதிபர் ஜாக் சிராக், இந்த விமானம் வான்பயண வரலாற்றில் ஒரு முக்கிய சாதனை, சாகசம் என்று விவரித்தார். இந்த விமானத்தால் எண்ணூறு பயணிகளை,பதினைந்தாயிரம் கிலோமீட்டர் தூரம் வரை ஏற்றிச்செல்ல முடியும் என்று அவர் கூறினார். இந்த சாதனையில் பங்கேற்ற ஜெர்மனி, பிரிட்டன், ஸ்பெயின் ஆகிய நாடுகளின் தலைவர்களும் இந்த வைபவத்தில் பங்கேற்றனர். இந்த விமானம், எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல்முறையாகப் பறக்கும் என்றும் அடுத்த ஆண்டு விமானச் சந்தையில்



விற்பனைக்கு வரும், போயிங் 747 விமானத்துடன் போட்டியில் இறங்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# ஜெயலலிதா மீதான வழக்கு கர்நாடகத்தில் நடக்கலாம் - உச்ச நீதிமன்றம தீர்ப்பு

தமிழக முதல்வர் ஜெயலலிதா மீதான வருமானத்துக்கு அதிகமான சொத்துக்குவிப்பு வழக்கை கர்நாடகா மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு மாற்றக்கோரும் அவரது மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை தள்ளுபடி செய்திருக்கிறது .இந்த சொத்துக்குவிப்பு வழக்கு தமிழகத்தில் ஜெயலலிதா முதல்வராக இரண்டாவது முறை பதவியேற்றதிலிருந்து முறையாக நடைபெறவில்லை என்று கூறி, அவ்வழக்கை தமிழகத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு மாற்றவேண்டும் என்று திமுக சார்பில் அதன் பொதுச்செயலாளர் அன்பழகன் வழக்கு தொடுத்திருந்தார். அதனடிப்படையில் இந்த வழக்கு கர்நாடக மாநிலத்திற்கு உச்சநீதிமன்றத்தால் மாற்றப்பட்டது. ஆனால் இவ்வழக்கை கர்நாடக மாநிலத்திலிருந்து வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டும் என்று ஜெயலலிதா தொடுத்திருந்த இரு வழக்குகளை ஏற்கனவே உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்திருந்தது. இந்த நிலையில் “கியுரேடிவ் பெடி‘ன்“ எனப்படும் , மாற்று ஏற்பாட்டிற்கான மனுவை ஜெயலலிதா தாக்கல் செய்திருந்தார். இதையும் இன்று உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

# கல்முனையில் கனேடிய பிரதமர் குறுகிய நேர விஜயம்

கனடா பிரதமர் போல் மார்ட்டின் நேற்று திங்கட்கிழமை காலை கல்முனைக்கு குறுகிய நேர விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.இலங்கைக்கு ஒருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு ஞாயிற்றுக்கிழமை மாலை அவர் கொழும்புக்கு வந்தார்.கடற்கோளால் பெரிதும் பாதிக்கப்பட்ட கல்முனைப் பகுதிக்கு நேற்றுக்காலை கனேடியப் பிரதமர் தலைமையிலான குழுவினர் ஹெலிகொப்டர் மூலம் சென்றனர்.வெஸ்லி கல்லூரி மைதானத்தில் காலை 10 மணியளவில், இவர்கள் சென்ற ஹெலிகொப்டர் தரையிறங்கியது. பாடசாலையில் தங்கியுள்ள அகதிகளைச் சந்தித்து ஆறுதல் கூறிய போல் மார்ட்டின் பாதிக்கப்பட்ட சில பகுதிகளையும் பார்வையிட்டார்.பாண்டிருப்புப் பகுதியில் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள கனேடியப் படையினரையும் சந்தித்து உரையாடினார். அத்துடன், இந்தப் பகுதியில், குளத்துநீரை சுத்திகரித்து குடிநீராக்கி விநியோகிக்கும் கனேடியப் படையினரையும் அவர்களது பணியையும் பார்வையிட்டார்.

இப்பகுதியில் சுமார் அரை மணிநேர விஜயத்தை முடித்துக்கொண்டு போல் மார்ட்டின், மு.ப.10.30 மணியளவில் ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்பை நோக்கிச் சென்றார்.

7ம்பக்கத் தொடர்ச்சி(பிரதமரை..)

நிரலை மாற்றியமைக்காக மன்னிப்பும் கேட்டுக் கொண்டார். சமபால் திருமணத்தை சட்டரீதியாக அங்கீகரிக்கும் சட்டவாக்கத்தை இம்முறை பாராளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பிக்கும் பொழுது சமர்ப்பிக்கப்படவுள்ளது. கனடாவில் வசிக்கும் சீக்கியர்களில் பெரும்பான்மையானவர்கள் லிபரல் கட்சியையே ஆதரிக்கின்றனர். இந்நிலையில் சீக்கி மதத் தலைவர்களின் நிலைப்பாடு, லிபரல் கட்சிக்குள் சலசலப்பை ஏற்படுத்தும் என்றே கருதப்படுகின்றது. கனேடிய மத்திய பாராளுமன்றத்தில், சீக்கியப் பின்னணியைக் கொண்ட ஆறு உறுப்பினர்கள் உள்ளனர். சுகாதார அமைச்சர் டொஸ்ஸன்ஞ் உட்பட, மூவர் சமபால் திருமணத்திற்கு ஆதரவாக உள்ளனர். கன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த இருவர், சமபால் திருமணத்திற்கு எதிராகவே உள்ளனர். அமைச்சர்களைத் தவிர ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அபிப்பிராயங்களுக்கேற்ப சுதந்திரமாக வாக்களிப்பதற்கு தடையொன்றுமில்லை. இந்நிலையில் சீக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள், தாம் சார்ந்திருக்கும் சமூகத்தின் உணர்வலைகளைப் பிரதிபலிக்கும் விதத்தில் வாக்களிப்பார்களா? அல்லது, தமது கட்சியினால் முன்வைக்கப்படும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பார்களா? என்பதுதான் இங்குள்ள முக்கிய கேள்வியாக உள்ளது. மொத்தத்தில் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள சமாபால் திருமண விவகாரம், புதிய பாராளுமன்றக் கூட்டுத் தொடர் ஆரம்பிக்கும் பொழுது, மீண்டும், முன்னிலைப் படுத்தப்படலாம் என்றே தோன்றுகின்றது.

## ஜப்பானிய தூதுவர் மட்டக்களப்பு விஜயம்

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் செய் டொலம்பு தலைமையிலான 25 பேரடங்கிய தூதுக் குழுவினர் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட பல இடங்களை பார்வையிட்டனர்.இக்குழுவினர் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் வே. சண்முகத்தினை மட்டக்களப்பு கச்சேரியில் சந்தித்து கலந்துரையாடினர். குழாய்நீர் திட்டத்தை மாவட்டத்தில் முழுமையாக செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

4ம்பக்கத் தொடர்ச்சி(நிவாரண)

படகுகளையும் மீளத் திருத்திக் கொடுத்து வாழ்வாதாரத்தினை மீள உருவாக்க வேண்டும். இதனைவிட, மனோ ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களை பழைய நிலைக்குக் கொண்டு வர வேண்டும்.சுனாமியால் பாதிக்கப்பட்டு கடந்த மூன்று வாரங்களாக ஒரு வார்த்தை கூட பேசாத 15 வயதுச் சிறுமியைக் கண்டேன். அனைத்தையும் இழந்து நிற்கின்றது. ஆண்களையும், பெண்களையும் பார்த்தேன்.

மனிதாபிமானப் பணிகள் இலகுவாக அமையப் போவதில்லை. நீண்ட காலம் எடுக்கும். அதுவரை நாங்கள் உங்களுடன் இருப்போம். நாங்கள் மிக நீண்ட காலமாக உங்களுடன் இருந்திருக்கின்றோம். எதிர்காலத்திலும் இருப்போம்.மில்லியன் கணக்கான மக்களைப் போல் நானும் தொலைக்காட்சியில் பார்த்ததை வைத்துக் கொண்டே சுனாமி அனர்த்தம் பற்றிய எண்ணக் கருவை உருவாக்கியிருந்தேன். அநேகமானவை ஹெலிகொப்டர் மூலம் எடுத்த படங்களே. எனினும், இலங்கையில் இன்று சந்தித்தவைகளை எதிர்கொள்ள நான் தயாராக வரவில்லை.இடிந்து தரைமட்டமான வீதிகள், வீடுகளுக்குள்ளால் நடப்பதற்கு நான் ஆயத்தமாக வரவில்லை. மண்ணுக்கு அடியில் மூடப்பட்ட வீடுகளைப் பார்ப்பதற்கு நான் தயாராக வரவில்லை. தனது தந்தையை அலை அடித்துச் சென்று விட்டதாகக் கூறும் சிறுவனைப் பார்ப்பதற்கு தயாராக வரவில்லை. சிறுவர்களின் தேவைகளை பாரிய அளவில் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது. பாரிய அளவு சிறுவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது சிரிப்பைப் பார்க்கும்போது எவ்வளவு சந்தோ‘மாக இருந்திருப்பார்கள் என சிந்திக்கத் தோன்றுகின்றது. பாடசாலைகளை உடனடியாக ஆரம்பிக்க வேண்டும். மருத்துவ தேவைகள் பாரியளவுக்கு இல்லை. நோய்கள் ஆபத்து இல்லை. இதுவொரு சிறப்பான விடயம்

பல பாடசாலைகள் அழிந்து போயிருப்பதைப் பார்த்தோம். கதிரைகள் மாத்திரம் இருந்தன. புத்தகங்கள் அடித்துக் கொண்டு போய்விட்டதாகச் சொன்னார்கள்.

விடுதலைப் புலிகளிடமிருந்து எந்தக் கடிதமும் எனக்கு வரவில்லை. இது ஒரு மனிதாபிமான நெருக்கடி இதன் காரணமாக அரசியல் பேதங்களைத் தவிர்த்து விட்டு, ஒதுக்கி வைத்துவிட்டுச் செயற்பட வேண்டும்.

என்ன மனிதாபிமான நடவடிக்கை அவசியம் என்பதை சிந்திக்க வேண்டும்.

இந்த நேரத்தில் அரசியல் விமர்சனங்கள் அவசியம் இல்லை. ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் படி கனடா பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி திரட்டுவதை அனுமதிப்பதில்லை.

**வாசல் படிகளில் வைகறை**

பெயர்:..........................

முகவரி:..........................
..................................

தொ.பேசி:
..................................

சந்தா விபரம்:
மாதங்கள் 3 ☐
மாதங்கள் 6 ☐
மாதங்கள் 12 ☐

சந்தப் பணமாக $.........
பெற்றுக் கொள்ளப்பட்டது
..................................

**வைகறை** **வாசல் படிகளில் வைகறை**

1252 Lawrence Ave East.
Unit 207, Tornto.ON.
M3A 1C3

பெயர்: ..........................................................................

முகவரி: ..........................................................................
..........................................................................
..........................................................................

தொ.பேசி:

சந்தா விபரம்: 3 மாதங்கள் $12 ☐ 6 மாதங்கள் $20 ☐ 12 மாதங்கள் $40 ☐

வைவறை வாரப் பத்திரிகைக்கு சந்தாதாரராக இணங்குகிறேன். ..........................................




*High Speed Internet*

1St Month Free - Next 3 Months $24.99 Only

Bell ExpressVu
Satellite Tv
Starting From $7.00
( TVI, ATN and Over 500 Channels )



*TVI, ATN தமிழ் தொலைக்காட்சி சேவையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்*

**Call Sunthar: 416.473.0058 or 416.289.2082**

www.Speednetcanada.com

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கனடிய குடிவரவு அமைச்சர் ராஜினாமா



கனேடிய மத்திய அரசின், குடிவரவு அமைச்சர், ஜூடி. ஸ்குரோ (Judy Sgro) கடந்த சனிக்கிழமை தனது பதவியை ராஜினாமா செய்தார். அண்மைக்காலமாக இவர் தொடர்பாக பல சர்ச்சைகள் ஊடகங்களில் கிளப்பப்பட்டிருந்தது. கடந்த ஜூன் மாதத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போது, இவரது பிரச்சாரப் பணிகளில் ரூமேனியா நாட்டைச் சேர்ந்த இரவு விடுதிகளில் நடனமாடும் பெண் ஒருத்தியும் ஈடுபட்டிருந்திருந்தார். இவர் அமைச்சரவைத் தேர்தலில் வெல்வதற்காக மேற்கொண்ட பிரச்சாரப் பணிகளுக்கு பிரதியீடாக, அவருக்கு கனேடிய குடியுரிமை, சட்டத்திற்கு புறம்பாக அமைச்சரால் வழங்கப்பட்டது என பரவலாகக் குற்றம் சாட்டப்பட்டது. இதே போன்று பிரம்ரன் நகரில் பீஸ்ஸாக் கடை ஒன்றை நடாத்திவரும் ஹர்ஜித் சிங் என்பவரும் இவருக்காக தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபட்டார். இவர் பல்வேறு கிரடிட் கார்ட் மோசடிகள் புரிந்ததாக குற்றம் சாட்டப்பட்டு இந்தியாவுக்கு நாடுகடத்தப்படும் நிலையில், வழக்குத் தாக்குதல் செய்து முடிவுக்காகக் காத்திருப்பவர். தேர்தலில் உதவி செய்வதற்கு பிரதி உபகாரமாக, இவரது குடியுரிமைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதாக அமைச்சர் ஹர்ஜித் சிங்க்கு உறுதி அளித்திருந்தார். அமைச்சர் ஸ்குரோ மேற்கு யோர்க் (West York) தொகுதியில் 65% சதவீதமான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றவர். பிரதமர் போல் மாட்டினின் நெருங்கிய விசுவாசிகளில் ஒருவர். ஏற்கனவே அமைச்சர் ஸ்குரொ மீது பலவிதமான குற்றச்சாட்டுக்கள் எழுந்திருந்தமையினால், ஒழுக்காற்று விசாரணை ஒன்றிற்கு உட்படுத்தப்பட்டிருந்தார். பேர்னாட் ஷப்பிரோவின் விசாரணை அறிக்கை இன்னும் சில வாரங்களில் வெளிவரவுள்ளது. இந் நிலையில் தான், இந்தியாவிற்கு நாடுகடத்துவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் ஹர்ஜித் சிங், இவ்விடயம் தொடர்பாக சத்தியக் கடுதாசி (affidavit) ஒன்றினை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். இவ் வாக்குமூலத்தில், தன்னுடைய குடிவரவுப் பிரச்சினைகள் பற்றி, அமைச்சரிடம் கூறியபோது, தேர்தலில் தமக்காக பிரச்சார வேலைகள் செய்யும் படியும், தேர்தல் முடிந்ததும், குடிவரவுப் பிரச்சினையைத் தான் தீர்த்து வைப்பதாகவும், அமைச்சர் கூறியதாக குறிப்பிட்டுள்ளார். அத்துடன், அமைச்சரின் தேர்தல் அலுவலகத்திற்கு 'பிஸ்ஸா' (Pizza)க்கள் அனுப்பிவைக்கும்படியும், இன்னும் 15- 16 தொண்டர்களைச் சேர்த்துத் தரும்படியும் அமைச்சர் கேட்டுக் கொண்டதாக ஹர்ஜித் சிங் கூறுகின்றார். அமைச்சரின், தேவைகளைத் தான் பூர்த்தி செய்ததாகவும், தேர்தல் வெற்றியின் பின், தான் வழங்கிய உதவிக்கு நன்றி தெரிவித்து அமைச்சர் கையெழுத்திட்டு தனக்கு ஓர் கடிதம் அனுப்பியதாகவும், ஹர்ஜித் சிங் தனது வாக்கு மூலத்தில் குறிப்பிட்டுள்ளார். தேர்தல் முடிவுற்று ஸ்குரொ குடிவரவு அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்பு, இது தொடர்பாக பேசிய போது அமைச்சரின் மூத்த ஆலோசகர் இகொர் வொனஸ் (Ihor Wons) உடன் தொர்பு கொள்ளும்படி அமைச்சர் கூறியுள்ளார். ஆனால் சில நாட்களுக்குப் பின், அமைச்சர் ஜூடி, ஸ்குரோவைப் பற்றி வதந்திகள் பத்திரிகைகளில் பிரசுரமாயின. இதனைத் தொடர்ந்து, ஹர்ஜித் சிங் விடயத்தில் அமைச்சரால் ஒன்றும் செய்ய முடியாது என வொன்ஸ் தனக்குத் தெரிவித்ததாக தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். இத்துடன், அமைச்சர் ஹர்ஜித்துக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றப் போவதில்லை என்பது தெளிவாயிற்று. அதுமட்டுமல்ல டிசெம்பர் 26ம் திகதி ஹர்ஜித் சிங் கைது செய்யப்பட்டு இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்படுவதற்காகத் தடுத்து வைக்கப்பட்டார். அமைச்சர் தான் தப்பித்துக் கொள்வதற்காக, என்னைப் பலிக்கடாவாக்க முயற்சிக்கின்றார். நான் 16 வருடங்களாக கனடாவில் வசிக்கின்றேன். ஒரு முறையேனும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படவில்லை. எனது பிள்ளைகள் இங்கு உள்ளனர். எனது மனைவியின் சமாதியும் இங்குதான் உள்ளது. ஆகவே என்னை இங்கு தங்க அனுமதிக்கும்படி வேண்டுகிறேன் எனத் தனது வாக்கு மூலத்தில் ஹர்ஜித் சிங் குறிப்பிட்டுள்ளார். ஹர்ஜித் சிங்கின் வாக்குமூலத்ததைத் தொடர்ந்து அமைச்சர் ஜூடி ஸ்குரொ, தனது பதவியை ராஜினாமா செய்தார். தனது பெயருக்கு ஏற்பட்டிருக்கும் களங்கத்தை அகற்றும் வரை தான் பதவி விலகுவதாக அவர் தனது ராஜினாமாக கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு அமைச்சர் ஸ்குரொ பதிலளிக்கையில் தான் ஹர்ஜித் சிங்கை சந்தித்துமில்லை, பேசியதுமில்லை எனக் கூறியிருந்தார். ஆனால், அமைச்சரும், ஹர்ஜித் சிங்கும் ஒரே அறையில் நிற்கும் புகைப்படங்களையும், அமைச்சர் ஸ்குரொ கையொப்பமிட்டு ஹர்ஜித் சிங்க்கு எழுதிய கடிதத்தையும், அமைச்சரும், ஹர்ஜித் சிங்கும் பேசியதை நேரடியாகக் கண்ட சாட்சியங்களையும், பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும் பகிரங்கப்படுத்தியுள்ளன. இந்தப் பின்னணியில் தான் புதன்கிழமை ஹர்ஜித் சிங் தனது நாடுகடத்தலுக்கு எதிரான மனு மீது இறுதி விசாரணை நடைபெறவுள்ளது. எது எப்படியிருப்பினும், கனடா போன்ற 'வளர்ந்த' நாடுகளிலும், ஊழலும், மோசடிகளும், 'அபிவிருத்தியடையாத' ஆசிய ஆபிரிக்க நாடுகளைப் போன்றே பரவலாக வியாபித்துள்ளது என்பதையே, அமைச்சர் ஸ்குரொ- ஹர்ஜித் சிங் விவகாரம் ஊர்ஜிதப் படுத்துகின்றது.

# பிரமரைத் துரத்தும் சமபால் திருமணச் சர்ச்சை

கனடாவில் தொடர்ந்து வரும் சமபால் திருமணம் தொடர்பான சர்ச்சை பிரதமர் போல்.மாட்டினை பின் தொடர்ந்து செல்கிறது. அண்மையில் சீக்கிய மதத்தின் அதியுயர் பீடத்தின் சார்பாக, ஜோகின்டர் சிங் வேதாந்தி, சமபால் திருமணத்தை சீக்கியர்கள் எதிர்க்க வேண்டும் என அறிவித்திருந்தார். இயற்கைக்கு விரோதமானதும், ஒருவித மனநோயின் விளைவாக விரும்பப்படும் உறவுகளை சட்டரீதியாக்குவதை உண்மையான சீக்கியர்கள் எதிர்க்க வேண்டும் என சீக்கிய மத உயர்பீடம் அறிவித்ததைத் தொர்ந்து, கனேடியப் பிரதமரின் இந்திய விஜய நிகழ்ச்சி நிரலில் மாற்றங்கள் ஏற்பட்டனவா எனக் கேள்வி எழுந்துள்ளது. பிரதமர் போல் மாட்டின், இந்தியாவுக்கு விஜயம் செய்யும் போது, அம்றிஸ்த்தாரில் உள்ள சீக்கிய பொற்கோவிலுக்குச் செல்வார் எனவும், அங்கு சீக்கிய மதத் தலைவர்களையும் சந்திப்பார் என திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் இறுதி நேரத்தில் அவரது பயண ஒழுங்குகளில் மாற்றம் செய்யப்பட்டு அம்றிஸ்தாருக்குச் செல்லும் திட்டம் கைவிடப்பட்டுளளது. சுனாமி அனர்த்தத்தினால், வேறு நாடுகளுக்கும் செல்ல வேண்டியிருந்ததால், இந்திய விஜயத்தின் நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டது என கனேடியத் தரப்பு கூறிக்கொண்டாலும் சீக்கிய மதத் தலைவர்கள் பிரதமர் போல் மாட்டினைச் சந்திப்பதற்கு மறுத்துவிடுவார்களோ என்ற அச்சம் காரணமாகவே, கனேடியர்கள் அம்றிஸ்தா விஜயத்தை தவிர்த்துக் கொண்டனர் என இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளிவந்துள்ளன. இவற்றை எல்லாம் சமாளிப்பதற்காக, மத்திய சுகாதார அமைச்சர் டொஸ்ஸன்ஞ்சை அம்றிஸ்தாருக்குச் சென்று பிரதமர் போல் மாட்டின் சார்பில், விளக்கமளித்து மதத் தலைவர்களிடம் நிகழ்ச்சி

6ம் பக்கம் பார்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5ம்பக்கத் தொடர்ச்சி(சுனாமியை)

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியூடாகச் செல்ல அனுமதிக்கப்படுமா என்ற கேள்வியும் எழுகிறது. மீட்புப் பணிகள் முடிவடைந்து இனி புனர் நிர்மாணப் பணிகளே உள்ளதால், அந்நியப் படைகளின் வருகை குறித்து புலிகள் மத்தியில் பலத்த சந்தேகங்களிலிருந்தாலும், நிவாரணப் பணிகளுக்கெனக் கூறி வந்த படையினர் அந்தப் பணிகளை மட்டும் செய்தால் அதனை எதிர்க்கப் போவதில்லையெனக் கூறியுள்ளனர். ஆனால், இங்கு வந்த அமெரிக்கப் படைகள் இப்பிராந்தியத்தில் தளமிடும் இரகசியத் திட்டத்தை கொண்டிருக்கும் அதேநேரம், இலங்கை அரச படைகளின் தேவைக்கென தனது நலனுக்காக புலிகளின் பகுதிகளை கடல் வழியாகவும், வான் வழியாகவும் உளவு பார்க்குமென்பதில் சந்தேகமில்லை.

1,500 படையினருக்காக அமெரிக்கா கொண்டு வந்து இறக்கிய தளபாடங்கள் (?) மிக மிக அதிகம். பின்னர் இவையெல்லாம் இலங்கைப் படையினருக்கே வழங்கப்படவுள்ளன. இன்றைய நிலையில் இந்தியப் படையினரின் வருகையை விட அமெரிக்கப் படையினரின் வருகை குறித்தே பல்வேறு கேள்விகளும் எழுப்பப்படுகின்றன. இந்தியா மிக மிக அருகிலுள்ளதால் இயல்பாகவே இவ்வாறான நிலைமைகளில் இந்தியப் படையினரின் உதவி நாடப்படுவது வழமை. ஆனால், அமெரிக்கப் படை எப்போதுமே ஆக்கிரமிப்புப் படையாக இருப்பதால் அதன் வருகை குறித்து பல்வேறு கேள்விகளும் எழுப்பப்படுகின்றன.

நிவாரணப் பணிகளிலிருந்து புலிகளை ஓரங்கட்டும் நோக்கிலேயே, சிவில் அதிகாரிகளே முற்று முழுதாகச் செய்ய வேண்டிய நிவாரணப் பணிகளை ஜனாதிபதி சந்திரிகா முழுமையாக இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளார். என்னதான் காரணம் கூறப்பட்டாலும், மீட்புப் பணியை தவிர, அடுத்த கட்டப் பணியையும் இராணுவத்திடம் ஜனாதிபதி ஒப்படைத்ததற்கு பல்வேறு உள்நோக்கங்கள் இருப்பதாகவே கருதப்படுகிறது.

மீட்புப் பணிகளையும் நிவாரணப் பணிகளையும், புலிகள் மிகவும் கட்டுக்கோப்புடனும் சிறப்பாகவும், கையாண்டு வருவது குறித்து சர்வதேச சமூகமும் பாராட்டுக்களை தெரிவித்துள்ள அதேநேரம், “வாஷிங்டன் ரைம்ஸ்“ பத்திரிகை, ஒரு படி மேல் சென்று, விடுதலைப் புலிகளின் மீட்புப் பணிகள் அவர்களது கட்டுக்கோப்பான நிர்வாகத் திறமையை எடுத்துக் காட்டுவதுடன், இவ்வாறான சிரமம்மிக்க ஒருபணியினை மிகவும் நேர்த்தியாகவும் நிதானமாகவும் கையாண்ட முறைகள், அவர்களது தனிநாட்டுக் கோரிக்கைக்கு முன்னோடியாக அவர்களிடம் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு இருப்பதனை உலகிற்கு நிரூபித்துமுள்ளதாகக் கூறிய அதேநேரத்தில், இவ்விடயங்களை இலங்கை அரசு கையாண்ட முறையையும் கடுமையாகச் சாடியுள்ளது.

இந்த நிலையில், புலிகளுக்கு சர்வதேச சமூகம், சர்வதேச தொண்டர் அமைப்புக்கள், புலம்பெயர்ந்த மக்களிடமிருந்து கிடைக்கும் உதவிகளை தடுக்கும் நோக்கிலேயே நிவாரணப் பணிகளை அரசு முழுமையாக இராணுவத்திடம் ஒப்படைத்துள்ளது. இப்பணிகளிலிருந்து புலிகளை அப்புறப்படுத்திவிட்டால் அவர்களுக்கு ஏன் நிதியுதவியை வழங்க வேண்டுமென்ற கேள்வியும் எழும். அதைவிட, புலிகளின் பகுதிகளுக்கு நேரடியாகவும் செல்லும் உதவிகளையும் தடுத்து நிறுத்திவிடவும் முடியுமென அரசு கருதுகிறது. இவற்றையெல்லாம் கருதியே நிவாரணப் பணிகளை கையாள இராணுவத்தை அழைத்துள்ளது.

இதைவிட, அனர்த்த நிலைமைகளை பார்வையிட வந்துள்ள ஐ.நா. செயலாளர் கொபி அனான் புலிகளின் பகுதிகளில் ஏற்பட்ட பேரழிவை பார்க்கச் சென்றால் அங்கு புலிகளின் தலைவரை நிச்சயம் சந்திப்பார். அவ்வாறானதொரு சந்திப்பு நிகழ்ந்தால், அது அமெரிக்க படைகள் இலங்கையில் நிற்கையில் கூட ஐ.நா. செயலாளர் புலிகளின் தலைவரைச் சந்தித்தமை அவர்களுக்கு அங்கீகாரமளித்து விடுமென்ற அச்சத்தில் கொபி அனான், பேரழிவைச் சந்தித்த முல்லைத்தீவு மாவட்டத்திற்கு செல்லவிடாது தடுக்கப்பட்டுள்ளார்.இந்த இயற்கை அனர்த்தம் இரு தரப்பையும் ஒற்றுமைப்படுத்த கிடைத்த அரிய வாய்ப்பெனக் கூறிய ஐ.நா. செயலரே, புலிகளின் பகுதிக்கு செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரண விநியோகம் எப்படியிருக்குமென்பதை விட, இனப்பிரச்சினை தீர்வில் இலங்கை அரசு எப்படி நடந்துகொள்ளுமென்பதை ஐ.நா. செயலர் உணராதது துரதிர்ட்டமே. அத்துடன், இவ்விடயத்தில் ஐ.நா. செயலரும் பாகுபாடு காட்டியமை ஐ.நா.வின் குறிக்கோளுக்கு அபகீர்த்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் அமெரிக்கப் படையினருக்கு ஏட்டிக்குப் போட்டியாக இந்தியப் படையினரும் இங்கு நிலை கொண்டுள்ளனர். ஆனாலும், இந்தியப் படையினர் இலங்கை அரசுக்கு வேண்டா விருந்தாளிகளே. அவர்கள் தங்கள் தேவைக்காகவே இங்கு நிலைகொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் கொலின் பவல் இலங்கை வந்து அமெரிக்கப் படையின் இருப்பை உறுதிசெய்து விட்டுப் போய்விட்டார். ஆனால், இந்தியத் தலைவர்கள் எவருக்கும் இலங்கை அழைப்பு விடுத்ததாகத் தெரியவில்லை. இல்லையேல், கோபத்தால் அவர்கள் வரவில்லை போலும். தங்களைப் புறக்கணித்து அமெரிக்கப் படையை இலங்கை அரசு இங்கு அழைத்தது குறித்து இந்தியா மௌனம் சாதிக்கிறது. அமெரிக்கப் படையினரின் வருகை தங்களை சீற்றமடையச் செய்யவில்லை என இந்திய தரப்பு கூறுகிறது. ஆனாலும், அமெரிக்கப் படையை அழைத்ததற்காக இலங்கை அரசு மீது, குறிப்பாக, ஜனாதிபதி சந்திரிகா மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மீது இந்தியா கடும் சினமடைந்துள்ளது. இவ்விடயத்தில் இந்தியாவின் ராஜதந்திரமோ அல்லது மிரட்டலோ இலங்கையிடம் எடுபடவில்லை. ஆசியாவில் இந்த அனர்த்த பணிகளை ஐ.நா. தலைமையிலேயே மேற்கொள்ள வேண்டுமென இந்தியப் பத்திரிகைகள் கூறுமளவிற்கு இவ் விடயத்தில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு பெரும் தோல்வி ஏற்பட்டுள்ளது. ஈழத் தமிழர்களின் பிரச்சினையை மனிதாபிமானமாக தீர்க்க உதவாது தனது நலனுக்காக அதனைப் பயன்படுத்தி ஈழத் தமிழரையும் வேதனைக்குள்ளாக்கி இலங்கையையும் மிரட்டி வந்த இந்தியா, இன்று அமெரிக்கப் படையினரின் இலங்கை வருகையால் அதிர்ந்து போயுள்ளது.

இனியாவது இந்தியா, இனப் பிரச்சினை தீர்வு விடயத்திலும், சிங்கள இனவாதிகள் எப்படிப்பட்டவர்கள் என்பதை உணரத் தவறுவார்களேயானால், இப் பிராந்தியத்தில் இந்தியாவைக் கூட காப்பாற்ற எவருமே இருக்க மாட்டார்களென்பதே உண்மை.

2ம்பக்கத் தொடர்ச்சி(யுத்த..)

சந்தேகமில்லை. உதாரணமாக, யுத்த அபாயம் தாமதப்படுத்தப்பட்டுள்ளது, மிக மோசமாகத் தேக்கப்பட்டுள்ள பொருளாதாரம் திடீரென உள்வாங்கப்பட்ட சர்வதே நிதியின் காரணமாக புத்துணர்ச்சியடைந்துள்ளது போன்று தோன்றுகின்றது. ரூபாயின் பெறுமதி சற்று ஸ்திரமடைந்துள்ளமை இதற்கான சான்றாகும். அத்துடன் சுனாமி மிகப் பாரிய அளவில் மக்களின் உணர்வுகளைத் தூண்டி விட்டுள்ளமையினால் உடனடியான அரசியல் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் மறக்கப்பட்டு விடலாம். இன்று எஸ்.பி. திசாநாயக்க பற்றி பிரச்சினை பூரணமாக பின் தள்ளப்பட்டுள்ளமை இதற்கான சிறந்த உதாரணமாகும். எனவே, உடனடி நிலையில் சுனாமி ஜனாதிபதிக்கு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும், அது அவரது இறுதி இலக்குப் பொறுத்து எவ்வித தாக்கத்தைக் கொண்டிருக்கும் என்பது சந்தேகத்திற்கிடமானதே. ஏனெனில், ஜனாதிபதிக்கு இன்றிருக்கின்ற பிரதானமான பிரச்சினை காலம் தொடர்புடையதாகும். காலம் மிக விரைவாக ஓடிக் கொண்டிருக்கின்றது. அது ஓடி முடிவதற்குள் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும். ஜனாதிபதியின் பதவிக்காலம் இவ்வாண்டு டிசம்பர் மாதம் முடிவடைகின்றது என்ற வகையில் ஏற்கனவே காலம் பெருமளவிற்குத் தாமதப்படுத்தப்பட்டுள்ளது. ஒரு ஆண்டு காலத்தினும் ஓர் அரசியல் யாப்பு வரைபை முன்வைத்து அங்கீகரித்து கொள்வதென்பது இலகுவானதல்ல. தற்போது சுனாமியினால் ஏற்படக்கூடிய தாமதம் ”காலப்” பிரச்சினையை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. ஏனெனில், சுனாமியினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணம் முடிவடைவதற்கு முன் அல்லது மீள் கட்டமைப்பு உறுதியாக ஆரம்பிக்கப்படுவதற்கு முன் அரசியலமைப்பு மாற்றம் பற்றிய வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட முடியாது. எனவே, அரசியலமைப்பு மாற்றத் திட்டத்தை ஆரம்பித்து வைக்க அரசாங்கம் குறைந்தது சித்திரைப் புதுவருடம் வரையாயினும் காத்திருக்க வேண்டியிருக்கும். அவ்வகையில் ஜனாதிபதி பெருமளவிற்கு கையாளக்கூடிய உபாயம் யாதெனில், தான் ரகசியமாக செய்து கொண்ட பதவியேற்பே உண்மையானது என வாதிடுவதன் மூலம், 2006 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரை பதவியிலிருக்க முயற்சிப்பதாகும். இது அரசியல் ரீதியான பதற்றத்தை தென்பகுதியில் ஏற்படுத்தக் கூடுமேயாயினும், இதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்னெடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே இருக்கும். சுனாமிக்கு முன்னரே கூட கூட்டம் சேர்ப்பதில் ஐ.தே.கட்சிக்கு அதிக இயலுமை இருந்ததில்லை. தற்போது அது மேலும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

எனவே, சுனாமியின் விளைவுகள் ஜனாதிபதியின் திட்டத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை. அது அரசியலமைப்பு மாற்றத்தை சாத்தியமற்றதாக்கி இருக்குமேயாயின், அரசியல் வரலாற்றின் முக்கிய அம்சமாகக் கணிக்கப்படும்.


தமிழர் நிர்வாகத்தில் மாபெரும் திறப்பு விழா

Cara cars
Auto Parts Ltd.

Engine Tune Up • Under Coating • Body Works, Painting • Rust Proofing • Mufflers • Brakes & Exhaust. • Safety Certification. Air Conditioning. • All Mechanical & Electrical Works




நியாயமான விலைகளில் ஜப்பான் வாகனங்களிற்குரிய புதிய மற்றும் பாவித்த உதிரிப்பாகங்கள்



அழையுங்கள்: ரஞ்சன்
வர்த்தக நிலையம்: (905) 294-4522 கைத்தொலைபேசி: (647) 298-2017
வீடு: (416) 335-4865 தொலைநகல்: (416) 294-4542
9321 Highway #48, Markham, Ont. L3P 3J3

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுனாமி எச்சரிக்கை கிடைத்தும் அலட்சியம் செய்ததா மத்திய அரசு

உலக மக்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாக கடந்த இரண்டு வாரங்களாக ‘சுனாமி’ என்ற சொல்லை உச்சரித்து வருகின்றனர். சுனாமி என்ற இராட்சத கடலலை தெற்காசியப் பிராந்தியத்தின் கடற்கரையோரத்தைச் சின்னா பின்னமாகியதுடன் உலக வரை படத்தையே மாற்றி அமைத்துள்ளது.



நாகப்பட்டினம், கன்னியாகுமரி, சென்னை, கடலூர் ஆகிய தமிழ் நாட்டின் கடற்கரைக் கிராமங்களை சுனாமி விழுங்கி விட்டது. சுனாமியின் கோர வடுக்கள் நினைவுச் சின்னங்களாக ஒருபுறம் இருக்க, சுனாமியின் தாக்குதலுக்கு முன்பும், சுனாமி தாக்கிய பின்பம் நடைபெற்ற சம்பவங்களை அரசியல் கட்சிகள் தமக்குச் சார்பாக மாற்றிக் கொண்டிருக்கின்றன.

தமிழக முதல்வர் ஜெயலலிதா அவசர அவசரமாக விமானத்தின் மூலம், சுனாமியினால் தாக்கப்பட்ட பிரதேசங்களைப் பார்வையிட்டார். தமிழக முதல்வர் அடுத்தடுத்து மூன்று முறை பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஸ்டாலின், அமைச்சர்களான



ரி.ஆர்.பாலு, தயாநிதி மாறன் ஆகியோர் பாதிக்கப்பட்ட பகுதிகளைச சுற்றிப் பார்த்தனர். வைகோ அதிரடியாகச் சென்றார். பிரதமர் மன்மோகன் சிங், அத்வானி, சோனியாகாந்தி ஆகியோரும் டில்லியிலிருந்து அக்கறையுடன் தமிழகத்தில் அழிவுகளைப் பார்த்து ஆறுதல் கூறினார்கள்.

கருணாநிதி உடல் நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்தார். பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று பார்வையிட விருப்பமில்லாததால் தான் கருணாநிதி வைத்தியசாலையில் சென்று படுத்திருக்கிறார் என்றும், கருணாநிதி இறந்து விட்டார் என்றும் தமிழகத்தில் வதந்தி சுனாமியை விட வேகமாகத் தாக்கியது. தொலைக்காட்சியில் நான் உயிரோடு இருக்கின்றேன் என்று கருணாநிதி அறிக்கை விட வேண்டிய நிர்ப்பந்தத்தை அந்த வதந்தி ஏற்படுத்தியது.

தமிழகக் கரையோர மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள், அவர்களுக்கு உடனடி நிவாரணமும் கொடுக்க வேண்டியது மாநில அரசின் கடமை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவியைத் தமிழக அரசு வழங்கவில்லை என்று மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழகக் கட்சிகள் சுட்டிக்காட்டின.

தொண்டு நிறுவனங்களும், தனியாரும் பதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து சென்ற உடனடி நடவடிக்கையில் இறங்கின. இறந்தவர்களின் உடல்களை மீட்பதிலும் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதிலும் அவர்கள் காட்டிய அக்கறையை தமிழக அரசு காட்டவில்லை. சுனாமியின் தாக்குதலினால் அரசு இயந்திரம் சின்னாபின்னமாகியது. இது போன்ற ஒரு பேரழிவுக்கு முகம் கொடுக்கக் கூடிய தாயர் நிலையில் இந்தியா இல்லை. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இது புதிய அனுபவம். அரச அதிகாரிகளையே கடல் காவு கொண்டு விட்டது. அரச கட்டளையை நிறைவேற்றக் கூடிய நிலையில் அதிகாரிகள் எவரும் அப்பிரதேசங்களில் இருக்கவில்லை.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து கொண்டிருந்த போது கடல் மீண்டும் பொங்கி வருவதாக வதந்தி கிளம்பியது. அப்போது உயர்திகாரியைத் தவிக்க விட்டு விட்டு சாரதி வாகனத்துடன் ஓடிவிட்டார்.

[redacted]

முதல்வர் ஜெயலலிதா எந்த இடத்துக்கு வருகிறார். எப்போது வருகிறார் என்று சரியாகத் தெரியாத மாவட்ட அதிகாரி ஒருவர் ஊடகவியலாளர்களை அலைக்கழித்தார். ஊடகவியலாளர்கள் கடைசிவரை முதல்வரைச் சந்திக்கவில்லை. சம்பவத்தைக் கேள்விப்பட்ட முதல்வர் உடனடியாக அந்த அதிகாரியை இடமாற்றம் செய்தார்.

வதந்தியின் கொடூரத்தால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறும் போது அரசாங்கத்தினால் எதனையும் முறையாகச் செய்ய முடியாது.

ஒரு மாவட்டத்தில் மட்டும் அசம்பாவிதம் ஏற்பாட்டால் துரித கதியில் நிவாரண நடவடிக்கையை முடுக்கிவிடலாம். கன்னியாகுமரியிலிருந்து சென்னை வரையிலான கடற் பகுதியே சின்னாபின்னமாயுள்ளது. அதனை நிவர்த்தி செய்வதென்பது இயலாத காரியம் தான். ஆனாலும், தமிழக அரசு மிகமிகத் தாமதமாகவே தனது நிவாரணப் பணியை ஆரம்பித்தது.

தமிழகத்தில் உள்ள மத்திய அமைச்சர்கள் தமது பங்குக்கான நிவாரணத் தொகையை உரக்க அறிவித்தபடி, மாநில அரசு கை கட்டிக் கொண்டு இருப்பதாகக் குற்றம் சாட்டினர். மத்திய அரசின் நெருக்குதல் காரணமாக தமிழக அரசு நிவாரணமாக தமிழக அரசு நிவாரணப் பணியை முடுக்கிவிட்டுள்ளது.

தமிழக அரசு நிவாரணப் பணியில் மிக மும்முரமாக ஈடுபட்டாலும் தேவையான இடங்களுக்கு நிவாரணப் பணியாளர்கள் இன்னும் செல்லவில்லை. நிவாரணப் பணியை செய்ய முடியாமல் தமிழக அரசு திக்குமுக்காடுகிறது.

சுனாமியின் அழிவுகளை மக்கள் ஜீரணிக்க முடியாமல் இருக்கும் வேளையில் உரிய நேரத்தில் சுனாமி பற்றி எச்சரிக்கை கொடுத்தும் மத்திய அரசு அதனைக் கவனத்தில் எடுக்கவில்லை என்ற செய்தி கசிந்துள்ளது.

சுனாமி என்ற பெயருடைய இராட்சத அலை உருவாகியுள்ளதை மூன்ற நிமிடங்களில் அறிந்த ஹவாய் தீவிலுள்ள ஆய்வு மையம் உரிய இடங்களுக்கு எச்சரிக்கை செய்தியை அனுப்பியது. இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் சுனாமி பற்றிய எச்சரிக்கைச் செய்தி எதனையும் பெறவில்லை. ஆனால், அந்தமான தீவில் ஏற்பட்ட பூகம்பமும் அது பற்றிய ஆபத்து சமிக்ஞையும் தமிழகத்துக்கும், டில்லிக்கும் அனுப்பப்பட்டது.

அந்தமானிலிருந்து அனுப்பப்பட்ட ஆபத்துச் செய்தியைக் கண்டு கொள்வதற்குத் தமிழகத்தில் அதற்குரிய அதிகாரிகள் எவரும் இருக்கவில்லை. காலை 8.31 மணிக்கு அந்தமானிலிருந்து ஆபத்துச் செய்தி தமிழக்கத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதற்குரிய அதிகாரிகள் அலுவலகத்துக்குச் செல்வதற்கிடையில் எல்லாமே நடந்து முடிந்து விட்டது.

உள்துறை அமைச்சர் கபில் சிபிலுக்கு எச்சரிக்கைச் செய்தி அனுப்பப்பட்டது. ஆனால், சுனாமி பற்றி அவர் பெரிதாக அலட்டிக் கொள்ளாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. அமைச்சரிடம் இருந்து செய்தி வராததால் அந்தமானிலிருந்து முன்னாள் அமைச்சருக்கு அச்செய்தி அனுப்பப்பட்டது. முன்னாள் அமைச்சர் முரளி மனோகர் ஜோசி அதனை யாருக்குத் தெரிவிப்பது எனத் தெரியாது தடுமாறினார்.

வெறும் வாயை மெல்லும் தமிழக முதல் அமைச்சர் ஜெயலலிதாவுக்கு இந்தச் செய்தி தேனாக இனித்தது. உடனே மத்திய அரசைக் குற்றம் சாட்டி காட்டமாக அறிக்கை விட்டார். சுனாமியின் தாக்குதலால் மக்கள் இறந்ததற்கு மத்திய அரசுதான் காரணம் எனக் கண்ணீர் வடித்தார். அவருக்கு சார்பான பத்திரிகைகளும், ஊடகங்களும் அவரின் அறிக்கையைத் தூக்கித் தலையில் வைத்துக் கொண்டாடடின

சுனாமியினால் பாதிக்கப்பட்டது தமிழகம். கொல்லப்பட்டது தமிழக மக்கள். இந்த நிலையிலும் முதல்வர் அரசியல் ஆதாயம் பெறும் வகையில் அறிக்கைகளை வெளியிட்டு வருகிறார்.

முதல்வர் குற்றம் சொன்னால் அதற்குப் பதிலளிக்க வேண்டிது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடமை. சும்மா இருப்பாரா அமைச்சர் டி.ஆர்.பாலு? “சுனாமி



வருகிறதென்று கூறினால் மக்கள் இடத்தை விட்டு வெளியேறுவார்களா? சுனாமியைப் பார்க்க கடற்கரைக்குப் போய் அதிகளவில் இறந்திருப்பார்கள்” என்று பதில் கூறியுள்ளார்.

சேது சமுத்திரத் திட்டத்துக்கு எதிரானவர்கள் சுனாமியின் தாக்குதலைத் தமக்கு சாதகமாகப் பிரயோகித்துள்ளார். சுனாமியின் அச்சுறுத்தல் காரணமாக சேது சமுத்திரத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என அத்திட்டத்துக்கு எதிரானவர்கள் குரல் கொடுத்துள்ளனர்.

எங்கே என்ன நடந்தாலும் அதனைத் தமக்குச் சார்பாகத் திருப்புவதில் அரசியல் வாதிகள் வல்லர்கள். சேது சமுத்திரத்துக்கும் சுனாமிக்கும் முடிச்சுப் போட்டு சேது சமுத்திரத் திட்டத்தைக் கிடப்பில் போடச் சிலர் முயற்சித்து வருகின்றனர்.

“சுனாமியினால் சேது சமுத்திரத் திட்டத்துக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை திட்டமிட்டபடி சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற்றப்படும்” என்று அமைச்சர் பாலு அறிக்கை விடுமளவுக்கு இப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது.


தமிழகக் கரையோரப் பகுதிகளைச் சீரழித்த சுனாமி, தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையே புதிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

A1 Digital Video & Photography
The Professional People



Call: Ruthran
Res: 416-287-9844
Cell: 416-587-5583
Web: www.ruthran.com
Call for Specials

K. Ruthralingam
Sales Representative
Need Any Help Call Me First
416-587-5583
416-497-9784
417-497-5949 ( Fax )
rudy@ruthran.com
COLDWELL BANKER
EXCEPTIONAL R E SERVICES
3107 Sheppard Ave E, Toronto, Ontario, M1T 3J7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 58 நாடுகளில் இருந்து விமானங்களில் நிவாரணப் பொருட்கள்

சுனாமி அனர்த்தத்தினால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக இதுவரை 58 நாடுகளில் இருந்து 9236 தொன் நிவாரணப் பொருட்கள் 256 விமானங்களில் கொண்டு வரப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார். இந்த நிவாரணப் பொருட்கள் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எஞ்சியவை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இதை விட மேலும் நிவாரணப் பொருட்கள் கப்பல் மூலமாகவும் இலங்கைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

## கடல் அனர்த்தத்தினால் பலியானோர் தொகை அதிகரிப்பு

சுனாமி கடல் அனர்த்தத்தினால் உயிரிழந்தோர் தொகை 38,195 ஆகும் என உத்தியோகபூர்வமாக உறதிப்படுத்தப்படுவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் திலக் ரணவிராஜா தெரிவித்துள்ளார். தினமும் இறந்தவர்களின் சடலங்கள் கண்டுபிடிக்கப்படுவதாகவும் தெரிவித்த அவர் இந்த தொகை மேலும் அதிகரிக்கலாம் என்றார் இதேவேளை பாதிக்கப்பட்டு அகதிகளாகியுள்ள 750000 மக்களுக்கு தலா 375 ரூபா பெறுமதியான சுனாமி நிவாரணக் கூப்பன்கள் வழங்கப்படும் எனவும், இதனைக் கொண்டு பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினூடாக பொருட்களை பெற்றுக்கொள்ளகூடியதாக இருக்கும்.

## 120 தொன் நிவாரணப் பொருட்களுடன் இந்திய “சமர்” கொழும்புக்கு வருகை

இந்தியாவிலிருந்து 120 தொன் நிவாரணப் பொருட்களுடன் “சமர்” இந்திய கடற்படை கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த பொருட்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமாராவ் சுகாதார அமைச்சர் நிமல சிறீபால டி சில்வாவிடம் கையளித்தார். இதில் குடும்பங்களுக்கான சமையல் பாத்திரங்கள், மண்ணெண்ணெய் அடுப்புக்கள், விளக்குகள், உடுதுணிகள், சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள்மருந்துப் பொருட்கள் உட்பட மேலும் பாதிக்கப்பட்டவர்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் இதில் அடங்குகின்றன.

## பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு நிவாரணப் பொருட்கள்

கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு பகுதிகளுக்கான நிவாரணப் பொருட்களை அரசாங்கம் அனுப்பிவைத்துள்ளதாக புனர்வாழ்வு அமைச்சின் தகவல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இம்மாதம் 14ம் திகதி வரை வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு 7473.05 மெற்றிக் தொன் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி யாழ்ப்பாணத்திற்கு 2058.03 மெற்றிக் தொன், கிளிநொச்சி மாவட்டத்திற்கு 588.77 மெற்றிக் தொன், முல்லைத்தீவுக்கு 629.40, மட்டக்களப்புக்கு 1571.12 மெற்றிக் தொன்னும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இத்துடன் பிஸ்கட் வகைகள், ரின் மீன், கிழங்கு வகைகள், பால்மா பொருட்கள், மருந்துப் பொருட்கள் ஆடைவகைகள், தேவையான பாவனைப் பொருட்கள் குழந்தைகள்,சிறுவர்கள், பெண்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் என்பனவும் இதில் அடங்குகின்றன.

தொடர்ந்து அரசாங்கம் வடக்கு கிழக்கு பிரதேசங்களுக்கான நிவாரணக் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டுகிறது என்ற குற்றச்சாட்டை தொடர்ந்து இந்த புள்ளி விபரங்கள் அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## இளைஞனின் சடலம் அடையாளம் காணப்பட்டது

மட்டக்களப்பு கல்லடி வாகமரத்தடி சந்தியில் கடந்த 15-01-2005 இரவு சுட்டு கொலை செய்யப்பட்டவரின் சடலம் பொன்னுதம்பி சகாயராசா(குட்டி) வயது-36, 2ம் குறுக்குத்தெரு, பாரதிலேன், மட்டக்களப்பை சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருக்கு நான்கு பிள்ளைகள் இருக்கின்றனர். இவர் இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்தில் வெளிக்கள உத்தியோகத்தராக பணியாற்றுவதாகவும், புனர்வாழ்வு முகாமில் இருக்கும் தனது அக்காவை பார்த்துவிட்டு வருவதாக கூறி தனது ரி.வி.எஸ் மோட்டார் சைக்கிளில் வெளியே சென்ற போத இவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பொலிசார் விசாரணைகளை மேற் கொள்கின்றனர்.

## ஆறு ஆண்டுகளுக்கு தேர்தல் நடத்த தேவையில்லை: சிறீலங்கா ஜனாதிபதி

அடுத்துவரும் ஆறு ஆண்டுகளுக்கு தேர்தலொன்றை நடத்த தேவையில்லை என்று சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார். எனினும் தேர்தலொன்று நடத்தப்படுமானால் வெற்றிபெறும் நோக்கில் செயற்படாமல் நாட்டின் அபிவிருத்தியை நோக்காக கொண்டு செயற்பட வேண்டுமென்று அவர் கூறியுள்ளார்.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில், ஆரம்ப கட்டமாக ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம் நேற்று ஜனாதிபதியினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த வைபவத்தில் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில், பல நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி, பிரச்சனைகளின் போது ஒன்றிணைந்து செயற்படும் தன்மை தொன்றுதொட்டு இருந்து வந்துள்ளதாக சுட்டிக்காட்டினார்.

இந்த ஒற்றுமையை முன்னெடுப்பதே அனைவரினதும் பொறுப்பு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இயற்கை அனர்த்தத்தின் போது அனைத்து அரசியற் கட்சிகளும் இதயசுத்தியுடன் தமது கடமைகளை செய்தமையை ஜனாதிபதி பாராட்டியுள்ளார்.

## பௌத்த பிக்குமார் குழு முல்லைத்தீவிற்கு யாத்திரை

கதிர்காமம் திஸ்ஸரமவிலிருந்து முல்லைத்தீவிற்கு எதிர்வரும் 26ம் திகதி வண.மாதம்பே அஸ்வஜித தேரோ தலைமையிலான பௌத்த பிக்குமார் குழுவொன்று யாத்திரை செல்லவிருக்கின்றது.

யுத்தத்திற்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த இந்த பௌத்த பிக்குமார்கள் குழு ஓரிரு நாட்கள் வன்னியில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினரையும் சந்திப்பதோடு ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட சகல இடங்களையும் நேரில் சென்று பார்வையிடவுள்ளார்கள். நேற்று குறிப்பிட்ட மத குருமார் குழு நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹேய்மை கொழும்பில் சந்தித்து உரையாடியுள்ளனர். கொழும்பிலுள் நோர்வே தூதரகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் ஆழிப்பேரலையினால் சேதமடைந்த மத வழிபாட்டுத் தலங்களை புனரமைப்பதற்கு நோர்வேயின் உதவியை நாடியுள்ளனர்.

## மீள்குடியேற்றப் பணிகளை முடக்கிப் போட்டது சந்திரிகாவின் அவசரநிலை பிரகடனம்: சூசை

சிறீலங்கா அதிபர் சந்திரிகா தற்போது அறிவித்துள்ள அவசரநிலையால் ஆழிப்பேரலையில் பெருந்துயரை சந்தித்த முல்லைத்தீவில் அடுத்த கட்ட பணிகள் முடக்கப்பட்டுக் கிடக்கின்றன என்று தமிழீழ கடற்புலிகள் படைப்பிரிவு சிறப்புத் தளபதி கேணல் சூசை குற்றம் சாட்டியுள்ளார்.



இது குறித்து அவர் கூறியுள்ளதாவது:

ஒட்டுமொத்த இலங்கைத் தீவகத்திலும் ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் உச்ச பாதிப்பிற்குள்ளான இடம் முல்லைத்தீவு.

ஆழிப்பேரலையின் போது மிகத்துரிதமாக மீட்பு பணி மேற்கொள்ளப்பட்டதும் முல்லைத்தீவு. இவற்றை உலக ஊடகங்கள் வெளியுலகிற்கு தெரியப்படுத்திவிட்டன. இதன் விளைவாகவே சந்திரிகா இப்போது அவசரகால நிலையை பிரகடனப்படுத்தியுள்ளார்.

( 28 ம் பக்கம் பார்க்கவும் )


HOUSE FOR SALE

BY OWNER

$ 379,900



Mavis&Derry, Mississauga

2 YR NEW DETACHED.2200 Sq ft Aprox.
3+2 BED ROOMS. 4 WASHROOMS.
FINISHED BASEMENT WITH 2nd KITCHEN
and SEPERATE WALK OUT ENTRANCE.
HARDWOOD FLOOR.
A/C, FIRE PLACE,5 CAR PARKINGS
HOME THEATRE READY.
5 APPLIANCES. ALARM

*Easy Access to Hwy 401,410,407,403, Transit.*
*Walk to Greate Schools,Shopping Plazas,Park.*
*Fabulous Location. Hi demanded Growing Area.*

Please call For Vewing:

905 565 0013, 416 845 0013

THIPAN SIVARAJALINGAM
Accident Benefits Specialist

வாகன விபத்தில் காயமடைந்துவிட்டீர்களா?

in consultation with

If accident is your fault or not you can claim up to $ 172,000



அனுபவசாலிகளின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் பணமாக வலி, வருத்தம், வாழ்வில் இறந்த மகிழ்ச்சி, சம்பள இழப்பீடுகள் அத்துடன் $172,000.00 வரை இழப்பாகவும் மற்றும் பல்வகையான இழப்புக்களுக்கு நஷ்டஈடுகள் பெறமுடியும்.

உங்களுக்குத் தெரியுமா?

நடந்த விபத்து உங்கள் தவறாகவிருப்பின் உங்களால் $172,000.00 வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும்.

specializing in serious Personal Traumatic Injuries as result of motor vehicle accident

FIREMAN LOFRANCO
Personal Injury Lawyers

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

TORONTO MISSISSAUGA KITCHENER

தீபன் 416 505-9804
24 hours 7 days

29 King St. East UNIT 7

"IF YOU HAVE OPTIONAL INSURANCE YOU CAN CLAIM UP TO $1,000.00 IRB'S PER WEEK"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூக்கில் ரத்தம் வழிந்தால் செய்ய வேண்டியது என்ன?

மூக்கில் ரத்தம் வழிந்தவுடன் சிலர் உச்சந்தலையில் தண்ணீர் கொட்டிக் கொள்வார்கள். சிலர் அண்ணாந்து பார்த்து தலையை வைத்துக் கொள்வார்கள். இந்த இரண்டுமே சரி கிடையாது. அதற்குப் பதில் உடனடியாக மருத்துவரிடம் அழைத்துச் செல்வது தான் புத்திசாலித்தனமான முறை. முதலுதவிக்கு மூக்குத் துவாரத்தை நன்றாக அழுத்திப் பிடித்து, ரத்தக்கசிவை தடுத்து நிறுத்தலாம். அதுபோல, மூக்குத் துவாரத்தில் பஞ்சை அடைத்தும் ரத்தக்கசிவை நிறுத்தலாம். எந்தக் காரணத்தைக் கொண்டும் மூக்கைச் சிந்துவதோ, விரல்களால் நோண்டுவதோ கூடாது. மூக்கைப் பிடித்திருப்பதால் வாய் பகுதிக்கும் ரத்தம் வர வாய்ப்பு இருக்கிறது. பயப்பட வேண்டாம். அப்படி வந்தால் துப்பி விட்டு ரிலாக்சாக இருங்கள்.

நமது ரத்தத்தில் சிவப்பணுக்கள், வெள்ளை அணுக்களோடு கூடவே, ப்ளேட்லெஸ் என்கிற மூன்றாவது அணி ஒன்றும் உண்டு. ரத்தத்தை உறைய வைப்பது தான் இந்த மந்திரவாதிகளின் வேலை. வெட்டுக்காயம் ஏற்படும்போது, அந்த இடத்தில் இந்த ப்ளேட்லெஸ்கள் அதிமாகச் சேர்ந்து ரத்தத்தை உறைய வைத்து அந்த ஏரியாவை அடைத்துக் கொள்ளும். இதே டெக்னிக் தான் மூக்கில் ரத்தம் வழியும் போதும் நிகழ்கிறது. ரத்தம் கொட்டிய சில நிமிடங்களிலேயே ரத்தம் உறையத் தொடங்கி நின்று விடும். அதையும் மீறிக் கொட்டுவதை உடனே நிறுத்த காட்டரைசே'ன் செய்வார்கள். அதாவது ரத்தக் கசிவு உள்ள இடத்தை மின்சார உதவியுடன் லேசாகத் தீய்த்து உறைய வைத்து ரத்தத்தை நிறுத்தும் முறைக்கு தான் காட்டரைசேஷன் என்று பெயர்.

ஹீமோ.ஃ.பிலியா என்கிற வியாதி உள்ளவர்களுக்கு மூக்கில் ரத்தம் ஒழுகினால் லேசில் நிற்காது. அவர்களுக்கு காட்டரைசேஷன் ஒன்றுதான் தீர்வு.

# உடம்பை குறைக்க மிதமான நடைபயிற்சியே போதும்

குண்டு குழந்தைகள் வேகமாக நடந்தால் வேகமாக எடை (கொழுப்பு) குறையும் என்று சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இதில் உண்மை எதுவும் இல்லை. 9 முதல் 11 வயது வரையிலான குண்டு குழந்தைகள் உடம்பை குறைப்பதற்கு வாக்கிங் போனாலே போதும், ஓடத் தேவையில்லை என்கிறார்கள் விஞ்ஞானிகள். எவ்வளவு வேகமாக நடக்கிறோம் என்பதைப் பொறுத்து கொழுப்பு எரிக்கப்படுவது இல்லை. ஆகையால் குண்டு குழந்தைகள் தங்கள் உடம்பை குறைக்க மிதமான உடற்பயிற்சி களே போதுமானது என்கிறார்கள் இவர்கள். மணிக்கு 2.5 மைல் வேகத்தில் நடக்கும் போது அதிகப்படியான கொழுப்பு மற்றும் கார்போஹைட்ரேட் எரிக்கப்படுகிறது. இதே வேகத்தை மணிக்கு 5 மைல் என்று அதிகரிப்பதால் இன்னும் கூடுதலான கொழுப்பு எரிக்கப்படுவது கிடையாது.

பையன்களைப் பொறுத்தவரை மெதுவாக நடப்பதைக் காட்டிலும் வேகமாக நடக்கும் போது நிறைய அளவுக்கு கார்போஹைட்ரேட் எரிக்கப்படுகிறது என்பது உண்மை தான். இருந்த போதிலும் மிதமான வேகத்தில் நடக்கும் போதுதான் கார்போ ஹைட்ரேட் மற்றும் கொழுப்பு ஆகிய இரண்டுமே கூடுதலான விகிதத்தில் எரிக்கப்படுகிறது. உடல் எடை குறைவதற்கு இதுதான் தேவை.



உடல் பருமனானது உடம்புக்கு தேவையான சக்தியை கொழுப்பு தவிர வேறு வழிகளில் இருந்து பெற்றுக் கொள்வதால் கொழுப்பு மேலும் மேலும் சேர்ந்து விடும். இதுமாதிரியான நிலையில் உடற்பயிற்சிகள் கொழுப்பை எரித்து உடல் எடையை கட்டுக்குள் கொண்டு வரும்.



# மருத்துவம்

## குழந்தைகள் பொது அறிவு



குழந்தைகள் பொது அறிவுக்கும் அயோடின் உப்புக்கும் ஒரு தொடர்பு உள்ளது. அயோடின் உப்புச்சத்து குறைந்தால் குழந்தைகளின் பொது அறிவு மங்கிப் போய் விடுகிறது. இது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டு உள்ளது. நாடு முழுவதும் அயோடின் உப்புச்சத்து குறைபாடுகள் பற்றி 239 மாவட்டங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. ஆந்திராவில் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் நடந்த ஆய்வின் போது 64 சதவீதம் பேருக்கு அயோடின் உப்புச் சத்து குறைவாக இருந்தது தெரியவந்தது. இந்த சதவீதம் குறைவு தான். 5 மாவட்டங்களில் குழந்தைகளின் பொது அறிவுத் திறனை சோதித்துப் பார்த்ததில் சாதாரண பொது அறிவுக்கும் கீழ் நிலையில் உள்ள 15 சதவீதம் பேர் தான் இருந்தது தெரிய வந்தது. அவர்களுக்கு அயோடின் பற்றாக்குறை தான் காரணம். மேலும் பெரியவர்களுக்கு இதனால் மனநிலையே பாதித்து உள்ளது. வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ள குடும்பத்தில் தான் இந்த பாதிப்பு அதிகம். எனவே தான் அயோடின் உப்பு சேர்க்கச் சொல் கிறார்கள். சாதாரண உப்பு விலை 3 ரூபாய். அயோடின் உப்பு 7 ரூபாய் விற்கப்படுகிறது. விலை ஒரு பக்கம் இருந்தாலும் தேவைக்கேற்ப அயோடின் உப்பு கிடைக்கவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சைனசுக்கு உண்மை காரணம் என்ன?

ஜலதோஷம் என்பது பொதுவாக வைரஸ் தாக்குதல் காரணமாக தான் வருகிறது. இந்நிலையில் சைனசுக்கு காரணம் என்ன? என்ற கேள்வி எழுகிறது.

சைனசுக்கு வேறு பல காரணங்கள் இருந்தாலும் பெரும்பாலும் ஜலதோஷத்தின் தொடர் அவதாரமாக தான சைனஸ் உண்டாகிறது. ஜலதோ'த்தின் விளைவாக உருவாகும் சளி, சைனஸ் அறைகளில் போய் தேங்கும். அது சில நாட்களிலேயே வெளியே வந்து விட வேண்டும. இதுதான் ஜலதோஷம் குணமாகிவிட்டதன் அறிகுறி. அப்படியில்லாமல் உள்ளே போன சளி திரவம் வெளியே வர முடியாத அளவுக்கு அப்போது அறைக்கதவுகள் சில காரணங்களால் அடைத்துக் கொள்கின்றன என்று வைத்துக் கொள்வோம். அதுதான் சைனசின் ஆரம்பம். கிருமிகள் கலந்த சளி அந்த அறைக்குள்ளேயே இருக்கும் போது, நாளடைவில் அது சீழாக உருமாறும். அதன் விளைவுகள் பேச்சு, சுவாசம் என பல வகைகளிலும் வெளிப்பட்டு தொந்தரவு கொடுக்கும்.

# நவீன கருத்தரிப்பு முறைகளில் வெற்றியின் ரகசியம்

ஒரு பெண் தாய்மைப் பேறு அடையும் விஷயத்தில் வயது மிக முக்கியமான காரணியாக செயல்படுகிறது. இது சோதனைக் குழாய் உள்ளிட்ட செயற்கை கருத்தரிப்பு தொழில்நுட்பங்களை பயன்படுத்தும் சிகிச்சை முறைகளுக்கும் பொருந்தும். இத்தகைய முறைகளில் குழந்தைக்கு முயற்சிக்கும் பெண்களுக்கு வயது ஏற ஏற வெற்றி வாய்ப்பு 37 சதவீதத்தில் இருந்து வெறும் 4 சதவீதமாக குறைந்து விடுவதாக மருத்துவ வல்லுநர்கள் கூறுகிறார்கள்.

20-களிலும், 30-களிலும் உள்ள பெண்களுக்கு சோதனைக்குழாய் உள்ளிட்ட நவீன கருத்தரிப்பு முறை சிகிச்சைகளின் மூலம் வெற்றிகரமாக தாய்மைப் பேற்றை அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம். ஆனால் 30-களின் மத்தியில் உள்ள பெண் களுக்கு இத்தகைய வாய்ப்புகள் சுருங்கி விடுகிறது. இருப்பினும் அந்தப் பெண்ணுக்கு வேறொரு நபர் மூலம் முட்டைகள் தானமாக கிடைக்கும்பட்சத்தில் தாய்மைப் பேற்றுக்கு அவரது வயது பெரிய தடையாக இருக்காது. அவரது சினை முட்டையை பயன்படுத்தி கருத்தரிக்கச் செய்யும் முயற்சிகளில் மட்டுமே தாய்மைப் அடையும் பாக்கியம் பாதிக்கப்படும்.


KANTHAN
416.291.3997

வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?
வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா?
கவலையை விடுங்கள்.
காந்தன்:416.291.3997
No Spraying No Smelling No Moving

T.R.S AUTO LTD
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க புதிய விசாலமான இடத்தில் திறக்கப்பட்டுள்ளது



Special Special Special Special
Oil Change
( Most Cars )




$14.99



Under Car Washing, Oil Spray and Lubrication
Interior Shampoo & Engine Shampoo Tune up Brakes
All kind of Mechanical Works and Electrical
Safety Inspection and Certification
Under Coating
Tire Service and Wheel Balancing
Body Work & Painting
Auto Collision Repairs
Engine Transmission Repair

Insurance Works We Pay the Detectable
Excellent Services and Reasonable Rates

We Buy Used & Damage Cars





2305 Markham Road, Unit #3
தரமான சேவைக்கு 416.609.8110


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியலில் தன்னுணர்வுத் தேடல்

## அரவிந்தன் நீலகண்டன்

தன்னுணர்வு (consciousness) மானுடத்தின் நெடுநாளைய மர்மங்களுள் ஒன்று. அனைத்து மானுட பண்பாடுகளிலும் அதனைக் குறித்து சிந்திக்காத தத்துவஞானிகள் இல்லை எனலாம். தன்னுணர்வின் இயற்கை என்ன? விலங்குகள் தன்னுணர்வு கொண்டவையா? இயந்திரங்கள் தன்னுணர்வு பெற முடியுமா? பல தலைமுறைகளாக சிறந்த சிந்தனையாளர்கள் பதிலளிக்க முயன்றுவரும் கேள்விகள் இவை. இக்கேள்விகளுக்கான பதில்கள், முரண்படும் பார்வைகள் மற்றும் நிலைபாடுகள் சார்ந்தவை. இன்றைய தேதியில் இவற்றுள், இதுதான் சரி இது தவறு என திடமாக பதிலளிக்கும் நிலையில் அறிவியல் இல்லை. பல நூற்றாண்டுகளாக தன்னுணர்வு குறித்த விசாரம் தத்துவஞானிகள் மட்டுமே காலடி வைக்கும் புலமாக விளங்கியது. இருபதாம் நூற்றாண்டில்தான் அறிவியலாளர்கள் தன்னுணர்வை ஒரு ஆராய்தற்குரிய அறிவியல் கேள்வியாக காணமுற்பட்டனர். தன்னுணர்வு




ராபர்ட் எஃப்ரானின் பரிசோதனை
நன்றி: Scientific American:
The problem of consciousness by
Francis Crick & Christof Koch

என்பது மூளையின் இயங்குநிலையினோர் விளைவா எனும் கோணத்தில் ஆராய்ச்சிகள் எழுந்தன. அது ஒரு (நியூட்டானிய) இயற்பியல் சார்ந்ததோர் இயக்கத்தொடரால் உருவாவதா எனும் அடிப்படையில் ஆராய்ச்சிகள் வடிவமைக்கப்பட்டன. நம் சிந்தனை ஓட்டங்களும், உணர்வுகளும் நம் மூளையிலிருந்தே எழுகின்றன. நம் நனவிலும், கனவிலும், ஆழ் உறக்கத்திலும் நம் மூளையின் இயக்கத்தன்மை மாறுகிறது. மேற்கூறிய முந்நிலைகளிலும் நாம் நனவினை மட்டுமே திடமான தன்னுணர்வு கொண்ட நிலையாக உணர்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஜேம்ஸ் முதல் வாட்ஸன் வரை

அமெரிக்க உளவியலின் தந்தை என கருதப்படும் வில்லியம் ஜேம்ஸ் தன்னுணர்வை ஓர் நிகழ்வோட்டமாகக் (process) கருதினார். ஆயின் உளவியலின் நவீன காலகட்டமெனக் கருதப்படும் காலத்தில் “நடத்தையியல்“ (behaviourism) எனும் முறையின் அடிப்படையில் மனவியல் நிகழ்வுகளை அறிதலே முக்கியமானதெனப்பட்டது. நடத்தையியலின் பார்வை நியூட்டானிய இயற்பியலின் உளவியல் சகபாடி எனலாம். கட்டுப்பாடானதோர் பரிசோதனை சூழலில் நோக்கப்பட்டு அலகிடப்படாத எதுவுமே அறிவியல் எனும் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வர தகுதியற்றதெனும் திடமான நிலைபாடு நடத்தையியல் உளவியலாளர்களுக்கு இருந்தது. எனவே கட்டுப்பாடானதோர் பரிசோதனை சூழலில் பரிசோதனையாளரால் தனித்து நோக்கப்படவும் அலகிடப்படவும் முடியாத தன்னுணர்வினைக் குறித்த உளவியல் நகர்வுகள் மனோன்மணியத்தின் கருணாகரர்-நிஷ்டாபரர் வாதங்களைப் போல கறிக்குதவாதவை என கருதப்பட்டன. பிரசித்தி பெற்ற நடத்தையியலாளர் ஜான் வாட்ஸனின் வார்த்தைகளில்: ” நடத்தையியலைப் பொறுத்தவரை தன்னுணர்வு என்பது வரையறுக்கவோ பயன்படுத்தவோ முடியாததோர் கருத்தாக்கம். அது பழங்காலத்தில் “ஆன்மா“ என அழைக்கப்பட்டதற்கான மற்றொரு வார்த்தை மட்டுமே.” ஆக நவீனத்துவம் கோலோச்சிய காலங்களின் பல பத்தாண்டுகளாக உளவியலின் மையவோட்டத்தில் தன்னுணர்வு ஒதுக்கப்பட்டது.(விளிம்புகளில் தன்னுணர்வு குறித்த சில முக்கிய கருத்தாக்கப்புரட்சிகளே நிகழ்ந்தன)

### ஒரு தீண்டாமையின் முடிவு

1950களில் ஒரு மாற்றம் ஏற்பட்டது. அறிதலியலாளர்கள் (Cognitive scientists) உள்-நிகழ்வோட்டங்களுக்கு உளவியல் அளிக்க வேண்டிய முக்கியத்துவத்தைக் குறித்து கூறலானார்கள். என்ற போதிலும் தன்னுணர்வு என்பதென்னவோ பொதுவாக உளவியலாளர்களுக்கும் மற்ற அறிவியலாளர்களுக்கும் ஒரு விலக்கப்பட்ட புலமாகவே இருந்து வந்தது. இன்று நிலை புரட்சிகரமாக மாறியுள்ளது. “தத்துவவாதியின் அதீதக்கற்பனை“ எனும் முத்திரையுடனான தீண்டாமை விலகி அறிவியலின் பல முன்னணி புலங்களின் சிறந்த மனங்கள் ஒன்றுகூடி தன்னுணர்வின் இயற்கைக் குறித்து சிந்திக்கின்றனர். நரம்பியங்கியல், உளவியல், க்வாண்டம் இயற்பியல், செயற்கை நுண்ணறிவு ஆகிய புலத்தினர் தத்துவவாதிகளுடன் அமர்ந்து இப்பெரும் மர்மத்தினை பல்வேறு பரிமாணங்களூடாகச் சென்று ஆய்வதெவ்வாறு என ஆலோசிக்கின்றனர்.

சில அறிவியலாளர்கள் தன்னுணர்வின் அனைத்து தன்மைகளையும் விளக்கிடும் ஒற்றை விளக்கவியல் என்பதை சாத்தியமல்ல என்று கருதுகின்றனர், மாறாக தன்னுணர்வு அதன் பல்வேறு வெளிப்படு தன்மைகளில் தனித்தனியாக ஆராயப்பட்டு அத்தன்மைகளின் அதன் இயக்கவியல் அறிந்து கொள்ளப்பட வேண்டும். இவ்வாறு செய்துவருங்கால் வெகுகால பயணத்தின் பின் இத்தனித்தனி கண்டுபிடிப்புகள் குவியும் ஒரு குறிப்பிட்ட புள்ளியினை நாம் அறிந்து கொள்ளலாம் என அவர்கள் கருதுகிண்றனர். தாவீஸின் கலிபோர்னிய பல்கலைக்கழக உளவியல் ஆராய்ச்சியாளரான ராபர்ட் எ.்.ப்ரான் ஒரு பரிசோதனையை நடத்துகிறார். பரிசோதனைக்கு ஆட்படுத்தப்படுபவருக்கு 20 மில்லி விநாடிகளுக்கு ஒரு செந்நிற ஒளி வட்டம் காட்டப்படுகிறது. அதனை தொடர்ந்தடுத்து அடுத்த 20 மில்லி விநாடிகளுக்கு ஒரு பச்சைநிற ஒளிவட்டம் காட்டப்படுகிறது. பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் தங்களுக்கு ஒரு மஞ்சள் நிற ஒளிவட்டம் காட்டப்பட்டதாகவே உணர்கின்றனர். அதாவது ஒரே நேரத்தில் செந்நிற ஒளிவட்டமும் பச்சைநிற ஒளிவட்டமும் காட்டப்பட்டதாகவே உணர்கின்றனர். அதாவது இரு பார்வை-தொடர்பான உள்ளீடுகளும் (visual inputs) ஒரே நேரத்தில் மூளையில் பதனப் படுத்தப்படுகின்றனவேயன்றி தனித்தனியாக அல்ல என இவைக் காட்டுவதாக எ.்.ப்ரான் தெரிவிக்கிறார். இரு உள்ளீடுகளும் ஒருமைப் படுத்தப்படுகின்றன. உள்ளீடுகளைப் பதனப்படுத்தல் எனும் நிகழ்வு நிச்சயமாக பச்சை நிற உள்ளீட்டிற்கு பின்னர்தான் ஒரு திடத்துவ நிகழ்வோட்டமாகத் தொடங்குகிறது. இந்நிகழ்வோட்டம் 60 முதல் 70 மில்லி செகண்ட்கள் எடுத்துக் கொள்ளுமோர் நிகழ்வோட்டமாகும். ஆக, பார்வையூடாக வரும் உள்ளீடுகளின் தன்னுணர்வு நிகழ்வோட்டங்கள் எடுத்துக்கொள்ளும் கால அளவு நம்மால் அறியப்படமுடிகிறது என்பது எ.்.ப்ரானின் அனுமானம். இவ்விதமாக தன்னுணர்வு உருவாக்கத்தின் ஒவ்வோர் இயக்கத்தன்மையும் ஆராயப்பட்டு வெளிப்படும் புதிர் துண்டுகள் இணைக்கப்பட்டு இறுதியாக தன்னுணர்வின் முழு வடிவம் நமக்கு கிட்டும் என்பது ஒரு சாராரின் வாதம்.

தன்னுணர்வின் மற்றொரு தன்மை பல்வேறு வகையான புலன்களின் உள்ளீடுகளை ஒருமைப்படுத்துதல். உதாரணமாக, நெய்மீனின் மணம் கொண்ட நீல பிளாஸ்டிக் பெட்டி என் முன்னே இருக்கிறது. இப்பொழுது மீன் மணமும், நீல நிறமும், பெட்டியின் வடிவமும், அதன் பிளாஸ்டிக் தன்மையும் என் மூளையின் பல்வேறு பகுதிகளில் தனித்தனியாக பதனப்படுத்தப்பட்டு ஒன்று சேர்க்கப்பட்டு பின்னர் ஒரு பொருளின் பல்வேறு தன்மைகளான உணர்வாக்கப்படுகிறது. புகழ்பெற்ற அறிவியலாளரான (அண்மையில் மரணம் அடைந்த) பிரான்ஸிஸ் க்ரிக்கும், மற்றும் உயிர்-இயற்பியலாளரான

கிறிஸ்டாப் கோச்சும் தன்னுணர்வினை அது வெளிப்படும் மிக எளிய செயலோட்டங்களில் அறிய முயல்வது தன்னுணர்வின் மைய இரகசியத்தை முடிச்சவிழ்க்க மிகவும் உதவக்கூடும் எனக் கருதுகின்றனர். ஆனால் பார்வையுணர்வின் உருவாக்கத்தினைமிக எளிய செயலிழையும் கூட மிகவும் சிக்கலான கட்டமைப்பாகவே உள்ளது என்பதால் க்ரிக் ரூ கோச்சின் கனவு நனவாக மானுடம் வெகுகாலம் காத்திருக்க வேண்டியிருக்கலாம் அல்லது அபரிமித தொழில்நுட்ப உபகரணங்கள் அதனை விரைவுபடுத்தலாம். நரம்பு மண்டல செல்களான நியூரான்களில் நடக்கும் உள்ளீடுகளின் கடத்திச் செயல்பாடுகளை ஆராய்வோரும், மூளை இயக்கத்தினை ஆராய்வோரும், உளவியலாளரும், விலங்கின நடத்தைகளை ஆராய்வோருமென ஒரு விசித்திர கலவையினரின் கூட்டுமுயற்சி மூலம்தான் ஓர் எளிய தன்னுணர்வு வெளிப்பாடு கூட அதன் முழுபரிமாணங்களுடன் விளங்கப்படமுடியும்.

### தன்னுணர்வின் கடினக்கேள்வி (Hard problem)

இத்தனை கடின முயற்சிகளுக்கும் பின்னர், “இந்த ஆராய்ச்சியெல்லாம் நல்லதுதான் ஆனால் மூளைகளையும், நியூரான்களையும் அவற்றிற்கும் நடத்தைகளுக்குமான தொடர்புகளையும் படிப்பதன் மூலம் நாம் எவ்விதத்திலும் தன்னுணர்வின் இரகசியத்தை மர்மத்தை அறிந்துகொள்ள முடியாது“ என எவரேனும் கூறினால் எப்படி இருக்கும்? அவ்வாறுதான் டேவிட்.ஜெ.சால்மர்ஸ் கூறுகிறார். சால்மர்ஸ் கணிதவியலாளராக தம் அறிவுலக வாழ்க்கையைத் தொடங்கி பின்னர் தத்துவம் மற்றும் அறிதலியல் புலங்களால் ஈர்க்கப்பட்டவர். தன்னுணர்வு தொடர்பான அறிவியலின் தேடலுக்கு அவரளிக்கும் தத்துவ பின்புலம் முக்கியமானதாக கருதப்படுகிறது. தன்னுணர்வின் மையமர்மம் ஏன் முன்கூறிய ஆராய்ச்சிகளால் அறியப்பட முடியாததென அவர் கருதுவது, தன்னுணர்வு ஓர் புனித இறை இரகசியம் என்பதால் அல்ல. தன்னுணர்வை அறிய நரம்பியங்கியலோ அல்லது நரம்பியக்கம் சார்ந்த எந்த அறிவியல் புலமும் சரியான கருவியாக இருக்கமுடியாதென்பதாலேதான்.

( 14 ம் பக்கம் பார்க்கவும் )




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்து மாக்கடலில் பூகம்ப எழுச்சியை உளவு செய்து சுனாமி தாக்கப் போவதை எச்சரிக்க வேண்டும்

சி. ஜெயபாரதன் B.E.(Hons) P.Eng (Nuclear), கனடா

சுனாமி வரும் பின்னே! சுருதியோலம் வரும் முன்னே!

பூகம்ப உடுக்கடித்துக் கடல்மடியில்

பொங்கும் அலைப் பாம்புகள் நௌசிந்து

நாகப் படமெடுத்து நரபலிகள் நேருமுன்

நடுக்கத்தின் அதிர்வு நல்கும் எச்சரிக்கை!

"சுனாமி எச்சரிக்கை அனுப்பச் சீரான, விரைவான ஒலிபரப்புச் சாதனத் துணை ஏற்பாடுகள், பயிற்சி முறைபாடுகள் நாடெங்கும் நிலவப்படாமல், ஏராளமான நிதியைச் செலவழித்து நவ நாகரீகக் கருவிகளும், புதுவித அதிர்வு உளவுக் கண்காணிப்புகளும் நிறுவகம் செய்வதில் ஏது பயனுமில்லை! அவ்வித ஏற்பாடுகளை ஒரு நாட்டில் அமைப்பது மாபெரும் ஒழுக்க வேலையாகும். சுனாமி வருகையை அறிவித்தால், கடற்கரைப் பகுதியில் திரியும் ஒவ்வொரு தனிநபர் காதிலும் பலமாகத் தௌசிவாக அரவம் ஒலிக்க வேண்டும். அதுதான் மெய்யாக மிகக் கடினமானது."

"இந்து மாக்கடல் அரங்கு அனைத்திலும் சுனாமி எச்சரிக்கை செய்ய சுமார் 30 நிலநடுக்க வரைமானிகளும் [Seismographs], 10 அலை உயர அளப்புக் கருவிகளும் [Tidal Gauges], 6 சுனாமி உளவுச் சமிக்கை அனுப்பும் ஆழ்கடல் மிதப்பிகள் [Deep Ocean Assessment & Reporting of Tsunamis (DART) Buoys] தேவைப்படும்."

**பிரதம விஞ்ஞானி பிலிப்ஸ் மெக்ஃபாடன்** [இந்து மாக்கடல் சுனாமி எச்சரிக்கை அமைப்பாளர், பூதளவியல் கூடம், ஆஸ்திரேலியா]

"பசிபிக் மாக்கடல் அரங்கில் 1965 ஆண்டுமுதல் 26 கடற்தள நாடுகள் ஏற்கனவே இணைப்பாகி சுனாமி எச்சரிக்கை அறிவிப்பு ஏற்பாடு அமைக்கப்பட்டுத் தேசீயக் கடற் சூழ்வெளி உளவு ஆணையகத்தின் [National Oceanic & Atmospheric Administration (NOAA)] மேற்பார்வையில் சீராகப் பணியாற்றி வருகிறது. அதே ஏற்பாடு இந்து மாக்கடல் அரங்குக்கும் விரிவு செய்யப்பட்டு அதன் கடற்தள நாடுகள் இணைக்கப் பட்டால், உலகக் கடல்நாடுகள் அனைத்துக்கும் ஒரே அறிவிப்பகம் கண்காணிப்பு செய்யலாம்."


**அதிபதி கொன்ராடு லாடன்பேக்கர்** [இந்து மாக்கடல் சுனாமி எச்சரிக்கை அமைப்பு, பூதளவியல் கூடம், ஆஸ்திரேலியா]

"பசிபிக் மாக்கடல் அரங்கு சுனாமி எச்சரிக்கை அனுபவங்களையும், பொறிநுணுக்கங்களையும் இந்து மாக்கடல் நாடுகளுடன் பகிர்ந்து கொண்டு, அங்கேயும் ஒரு நிலையம் அமைத்திட நாங்கள் உதவி செய்யத் தயாராக இருக்கிறோம்."

**கொய்ச்சிரோ மட்சூரா** [Koichiro Matsuura, Director UNESCO]

முன்னுரை: பொதுவாக "சுனாமி" என்னும் ஜப்பானியச் சொல்லுக்கு நிலவு, பரிதி ஆகியவற்றின் ஈர்ப்பாற்றலில் ஏற்படும் [Tidal Waves] பொங்கலைகள் என்று பலர் தவறாக அர்த்தம் செய்து கொள்கிறார்கள். பூகம்ப அலைகளான சுனாமிச் சுவரலைகள் சாதாரணப் பொங்கலைகள் அல்ல. அடிக்கடி தோன்றாமல் அபூர்வமாக எழும் இம்மதில் அலைகள் கடல்மடியின் அடித்தளப் பூமியில் உண்டாகும் பூகம்பம், எரிமலை அல்லது கடலில் விழும் பெரும் நிலச்சரிவு ஏதாவது ஒன்றால் உற்பத்தியாகி, கரை ஓரப் பிரதேசங்களில் பேரழிவுகளையும், மாந்தருக்குக் கோர மரணத்தையும் உண்டாக்க வல்லவை! வெகு வெகு அபூர்வமாக அண்ட வெளியிலிருந்து புவிநோக்கி வரும் விண்கல் [Meteorite] ஒன்று கடலில் விழுந்தால் பூமிக்கு ஏற்படும் பேரழிவு, கற்பனை செய்ய முடியாத ஒரு பிரளயமாகத்தான் இருக்கும்! 1964 இல் அலாஸ்காவின் பிரின்ஸ் வில்லியம் சௌண்டு [Prince William Sound, Alaska] என்னும் தெற்குக் கடலோரப் பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தால் எழுந்த சுனாமிச் சுவரலைகள், அமெரிக்காவில் 90 மில்லியன் டாலர் நிதிச் செலவு விரையம் செய்து, நல்ல வேளையாக 119 பேர் மாண்டனர்! ஆனால் இந்து மாக்கடலில் 2004 டிசம்பர் 26 ஆம் தேதி ஏற்பட்ட சுனாமி 12 நாடுகளின் கரை ஓரங்களைத் தகர்த்து 150,000 பேர் மாண்டதுடன், பிழைத்த 5 மில்லியன் மாந்தர் குடிநீரின்றி, உணவின்றி, குடிலின்றி அனாதைகளாய் ஆக்கப்பட்டுப் பிறர் உதவியை அனுதினமும் எதிர்பார்த்துக் கிடைத்தும், கிடைக்காமலும் பேரின்னலில் அலைமோதி வருகிறார்கள். இறந்து போன, காயம்பட்ட அல்லது அனாதையான மொத்தக் குழந்தைகள் 1.5 மில்லியன் என்று அனுமானிக்கப் படுகிறது!

சுமாத்திர தீவுக்கருகில் 9.0 ரிக்டர் அளவு பூகம்பம் ஏற்பட்டதை 8 நிமிடங்களில் கண்டுபிடித்து, பசிபிக் சுனாமி எச்சரிக்கை அறிவிப்பகம் முதலில் இந்தோனேசியா, தாய்லாந்து, சிங்கபூர் உள்பட பசிபிக் கடலரங்கு நாடுகளுக்கு 15 நிமிடங்களுக்குள் அறிவித்தது! இந்த அறிவிப்புக் கூட்டணியில் இந்தியா, இலங்கை, மால்டிவ் தீவுகள் உறுப்பின நாடுகளாக இல்லாவிட்டாலும், பசிபிக் அறிவிப்பகம் நிலநடுக்கம் பற்றியும், அது சுனாமியாக உருவாகலாம் என்றும் தெரிவித்திருக்கிறது! இந்து மாக்கடல் அரங்கு நாடுகளில் அபாய அறிவிப்பு, மற்றும் காப்பு முறைகள் எவையும் அமைக்கப் படாததால், கரைப் பகுதிகளுக்கு முன் அறிவிப்பு செய்ய முடியாமல், ஆயிரக் கணக்கான மக்களை, குழந்தைகளைக் கால தேவனுக்குப் பலியிட நேரிட்டது! எச்சரிக்கை கிடைத்த இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளும் கரைப் பகுதி மாந்தருக்கு ஏன் முன்னறிவிப்பு செய்து பாதுகாக்க முயலவில்லை என்பது வியப்பாக இருக்கிறது!




இந்து மாக்கடல் அரங்கில் சுனாமி எச்சரிக்கை அறிவிப்பு ஏற்பாடுகளை நிறுவ, 2005 ஆண்டு நாணய மதிப்பில் சுமார் 2 மில்லியன் டாலர் செலவாகலாம் என்று ஒரு விஞ்ஞானி மதிப்பிடுகிறார். இந்த நிதி மிகையான தொகையாக அச்சமூட்டினாலும், இப்போது உலக நாடுகள் திரட்டியுள்ள உதவி நிதி 4 பில்லியனைத் தாண்டி [ஜனவரி 5, 2005] இன்னும் குவிந்து கொண்டுள்ளது! ஏதுமற்ற அனாதைகளான 5 மில்லியன் சுனாமிப் பாதிப்பு மக்கள், புதுக் குடியேற்றத்தில் புகுந்து ஊதிய வசதிகளை மீண்டும் பெறுவதற்குப் பல பில்லியன் கணக்கில் நிதிவளம் தேவைப்படும் போது, வருமுன் காக்கும் எச்சரிக்கை ஏற்பாடுகளுக்கு 2 மில்லியன் டாலர் செலவழிப்பது இந்து மாக்கடல் நாடுகளுக்கு வீண் என்று விலக்குவது தவறானது. மீண்டும் இத்தகையக் கோர மரணங்களும், இன்னல்களும் நேரக் கூடாது என்னும் தீர்மானத்தில் இந்தோனேசியா, இந்தியா, இலங்கை தாய்லாந்து, மலேசியா ஆகிய நாடுகள் இந்து மாக்கடல் அரங்கு சுனாமி எச்சரிக்கை ஏற்பாடைத் தீவிரமாய் அமைக்க ஜகார்டாவில் 2005 ஜனவரி 6 ஆம் தேதியில் கூடி ஆலோசனை செய்யப் போகின்றன. அகில நாட்டு ஐக்கியப் பேரவையின் ஆணையாளர் கொய்ச்சிரோ மட்சூரா [Koichiro Matsuura, Director UNESCO] பசிபிக்கடல் அரங்கு சுனாமி எச்சரிக்கை அனுபவங்களை, இந்து மாக்கடல் அரங்கு நாடுகளுக்குப் பகிர்ந்து கொண்டு, அங்கே ஒரு நிலையம் அமைத்திட உதவத் தயாராக இருப்பதாகவும் பாரிஸில் ஜனவரி 4 ஆம் தேதி கூறினார்.

சுனாமி மதில் அலைகள் வருவதற்கு எந்தக் கால நியதியோ அல்லது கால நேரமே எதுவும் இல்லை! அடிக்கடி வருமென்று சொல்ல முடியாமல் அபூர்வமாக, எதிர்பாராத சமயத்தில் எழுந்து தாக்குவது சுனாமியின் கோரப் பண்புகளில் ஒன்று. ஆயினும் சுனாமி கடற்தள மக்களின் கொடுங் கூற்றாக, பசிபிக் கடற்கரைப் பகுதிகளில் கருதப்படுகிறது! இந்து மாக்கடல் கரை மக்களுக்கு இதுவே சுனாமியின் முதல் பயங்கர அனுபவம்! சுனாமியின் கோரத் தாக்குதலைத் தவிர்க்க முடியா விட்டாலும், அதன் எழுச்சியைக் கண்காணித்து எச்சரிக்கை அறிவித்துப் பாதுகாப்புத் திட்டங்கள் தயாராக இருந்தால், பல்லாயிரம் உயிர்களைக் காப்பாற்ற முடியும். ஆயினும் சுனாமிச் சுவரலைகள் தகர்க்கப் போகும் வீடுகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவ மனைகள், வீதிகள், படகுகள், வாகனங்கள், இரயில் பாதைகள், வயல்கள், கிணறுகள் போன்ற மனிதத் துணை வசதிகள் எவற்றையும் பாதுகாக்க முடியாது. 1945 ஆம் ஆண்டில் அணு ஆயுதம் போட்டபின் அழிந்து போன ஹிரேஷீமா, நாகசாக்கி நகரங்கள் போன்று, இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவின் வடக்குப் பகுதி பேரழிவுக் கோலத்தை இப்போது காட்டுகிறது!

அமெரிக்காவின் சுனாமி கண்காணிப்புத் திட்டத்தில் நிலநடுக்க உளவு, அறிவிப்புப் பணிகள் 24 மணி நேரமும் மனிதரின் நேரடிப் பார்வையில் இயங்கி வருகின்றன. சுனாமி அபாய எதிர்பார்ப்பு அறிவிக்கப் பட்டதும், கடற்தளப் பகுதிகளில் எங்கு, யார், என்ன பணிசெய்ய வேண்டும் என்பவை சீராக எழுதி வைக்கப்பட்டு, பல இடங்களில் போலிப் பயிற்சிகளும் [Simulation Drills] மாந்தருக்கு அளிக்கப்பட்டு, மீண்டும் பயிற்சிகள் தொடரப்பட்டு வருகின்றன. இப்பணிகளை எல்லாம் தேசீயக் கடற் சூழ்வெளி உளவு ஆணையகம் [National Oceanic Atmospheric Asministration (NOAA)] மேற்பார்வை செய்து வருகிறது. இரண்டு தனித்தனி நிலையங்களில், பூகம்பச் சுனாமி எழுச்சிக் கண்காணிப்புகள் இயங்கி வருகின்றன. அலாஸ்காவில் பால்மர் [West Coast Tsunami Warning Center Palmer, Alaska] என்னும் இடத்தில் உள்ள மேற்குக் கடற்கரை சுனாமி எச்சரிக்கை மையம் ஒரு நிலையம். ஹவாயியின் ஈவா கடற்கரையில் உள்ள "ரிச்சர்டு ஹேக்மேயர் பசிபிக் சுனாமி எச்சரிக்கை மையம் [Richard Hagemeyer Pacific Tsunami Warning Center Ewa Beach, Hawaii] இரண்டாவது நிலையம்.

மில்லியன் டன் கணக்கில் கடல் வெள்ளத்தைச் சுமந்து கொண்டு, கடல்மீது வெகு விரைவில் நீந்திச் சுனாமிச் சுவரலைகள் அடுத்தடுத்து தாக்கும் காலாட் படைகள் போன்று கரைநோக்கிப் பயணம் செய்பவை. கடல் அடித்தளத்தில் எழும் நில நடுக்கத்தால் பெரும்பான்மையான சுனாமிகள் பிறக்கின்றன. சிறுபான்மையான சுனாமிகள் கடல்மடியில் வெடிக்கும் எரிமலைக் கிளர்ச்சியாலும் அல்லது மலையினின்றும் நழுவும் நிலச்சரிவாலும் நேர்ந்திடலாம். வெகு வெகு அபூர்வமாக விண்கற்கள் அண்ட வெளியிலிருந்து புவியீர்ப்பு மண்டலத்தால் இழுக்கப்பட்டுக் கடல்மீதில் விழுந்தால், மனிதர் கற்பனை செய்ய முடியாத பிரளயப் பேரழிவுகள் நிகழும்! கடல் நெடுவே ஓரிடத்தில் பிறக்கும் சுனாமியின் அலை வட்டங்கள் அடுக்கடுக்காய் எழுந்து கடற்பரப்பு முழுவதிலும் பரவுகின்றன. உதாரணமாக 1960 இல் தென்னமெரிக்காவின் சில்லி நாட்டருகில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுனாமி அலைகள் பசிபிக்கடல் முழுவதும் பரவி, ஜப்பான் நாடு வரைப் பயணம் செய்தன!

**சுனாமி கடல்மடியில் எப்படி உண்டாகிறது?**

இந்து மாகடலில் தற்போது நிகழ்ந்ததுபோல் கடல் அடித்தளத்தில் எழும் பூகம்பத்தால், சுனாமி உண்டாகலாம். மாபெரும் நிலச்சரிவுகள் ஏற்பட்டுக் கடலுக்குள் வீழும் போது, சுனாமி உருவாகலாம். கடல் அடியே எரிமலை வெடித்தால், சுனாமி அலைகள் ஏற்படலாம். அல்லது அண்ட வெளியிலிருந்து தவறி புவிஈர்ப்பில் இழுக்கப்பட்ட விண்கற்கள் [Meteorites] கடலில் விழுந்தால், மாபெரும் சுனாமி அசுர வடிவில் உதயமாகலாம். சுனாமி என்னும் ஜப்பானியச் சொல்லுக்குத் துறைமுகத்தைத் தாக்கும் அலை என்று பொருள். கரையை நோக்கி வலுவாய்த் தாக்கும் அலைமதில் என்று தமிழில் பொருள் கூறலாம்.

1. தோன்றும் காலத்தில் வெங்காயத் தோல் போன்று அடுக்கடுக்காய் உருண்டு வேறான இரண்டு தட்டுகளில் [Tectonic Plates] ஒன்று பூமிக்கடியில் கீழே சரியும் போது, மற்றொன்றை மேலே தள்ளுகிறது. அவ்விதப் பேரதிர்வு நிகழ்ச்சி கடலுக்கடியில் ஏற்படும் போது, கொந்தளிப்பு ஏற்பட்டு மாபெரும் கடல்தூண் மேலே செழுத்தாய்த் துள்ளி எழும்புகிறது. நீரில்

( 14 ம் பக்கம் பார்க்கவும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 13 ம் பக்கத் தொடர்ச்சி ) இந்துமா....
கல்லைப் போட்டால், வட்ட அலைகள் கிளம்புவது போல், கடல்தூண்கள் ஏகமைய வட்டங்களில் [Pillars of Concentric Circles] அடுக்காக எழுகின்றன!

2. கடலில் 20,000 அடிகளுக்குக் கீழ், மணிக்கு 400 மைல் வேகத்தில் [700 கி.மீ] கிளம்பும் சுனாமி காட்சிக்குப் புலப்படுவது அரிது. கடல் நடுவே நீண்ட அலையாகப் பயணம் செய்யும் சுனாமி, கரையை நெருங்க நெருங்க அதன் வேகம் குறைகிறது! வேகம் குறையக் குறைய சுனாமியின் அலை உயரம் மிகையாகி 120 அடி வரை [10 அடுக்கு மாளிகை உயரம்] உயர்ந்து நாகம்போல் படமெடுக்கலாம்! கரைநோக்கிப் பயணம் செய்யும் சுனாமி, தாக்குவதற்கு முன்பு பாம்புபோல் சீறிக் கொண்டு ஒருவித பயங்கர ஓலமிட்டு உறுமிக் கொண்டு முன்னே பாய்கிறது! யானை, சிங்கம், புலி, சிறுத்தை, நரி போன்ற காட்டு விலங்கினங்கள் இவ்வோசை அல்லது பூதள அதிர்வுகளை உணர்ந்து, சுனாமி தாக்கும் முன்பே எதிர்த்திசையில் தப்பி ஓடி விடிகின்றன!

3. கரையை அண்டி முன்னோக்கி அலைமதில் பாய்வதற்கு முன்பு, வலுவான அடியோட்டம் [Strong Under-current] ஏற்பட்டு, 25 நிமிடங்களுக்குக் கரை நீர்வெள்ளம் உள்ளிழுக்கப் படுகிறது! கரையைத் தாக்கும் போது, தலையை உயர்த்தி அழுத்த வலுவுடன் அடிக்கிறது!

4. சுனாமி கரையில் தாக்கும் போது, மாபெரும் ஆற்று வெள்ளம்போல் ஓங்கி அடித்து வீடுகளையும், வாகனங்களையும், மரங்களையும், எதிர்ப்படும் அனைத்தையும் தகர்த்துத் துண்டு துண்டாக்கி விடுகிறது!

5. கரையில் சுனாமியின் வலு முழுதும் தீர்ந்தபின், கடல் வெள்ளம் திரும்பிக் கடல்நோக்கிப் பின்வாங்குகிறது!

**பூகம்ப அரக்கியின் தீ வளையம்!**

பூகம்ப அரக்கியின் கழுத்தணியான ”தீ வளையத்தில்” [Ring of Fire] உள்ள ஒரு நாடு, இந்தோனேசியா! அடிக்கடி பூகம்பங்கள் அதன் தீவுகளில் நேர்ந்து, மக்கள் பாதிக்கப்படுவது புதிதான தகவல் அன்று. ஆனால் தற்போது சுமாத்திரா தீவுக்கருகில் நிகழ்ந்துள்ள நில நடுக்கத்தால் கடல்மீது சுனாமி தூண்டப்பட்டு அலைமதில் வட்டங்கள் அடுக்கடுக்காகக் கிளம்பி பனிரெண்டு நாடுகளைப் பாதித்தது, தெற்காசியக் கடலில் நூறாண்டுகளுக்குப் பிறகு நேர்ந்த முதல் நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது! சுமாத்திராவின் வடமேற்குப் பகுதி எப்போதும் தீவிர பூதளக் கொந்தளிப்புகள் மிக்க அரங்குகளில் ஒன்று! மணிக்கு 500 மைல் வேகத்தில் [800 கி.மீ] பயணம் செய்து, சில பகுதிகளில் 30 அடி உயரத்துக்குத் தாவிய சுனாமியின் பேரளவைக் கணித்துப் பார்க்கும் போது, சுமாத்திராவின் வடமேற்குப் பகுதியின் கடற் தளத்தில் சுமார் 100 மைல் [180 கி.மீ] நீட்சிக்கு கடலின் அடித்தளத் தட்டுகள், பூகம்பத்தால் முறிந்துபோய் இருக்க வேண்டும் என்று அனுமானிக்கப் படுகிறது!

(தொடர்ச்சி அடுத்தவாரம்)

( 12 ம் பக்கத் தொடர்ச்சி ) அறிவியலில்..

சால்மர்ஸ் தன்னுணர்வைச் சார்ந்த கேள்விகளை “எளிதான கேள்வி“, “கடினக்கேள்வி“ என இருவகையானவையாகப் பிரிக்கிறார். “எளிதான கேள்விகள்“ என்பவை தன்னுணர்வின் ஒரு குறிப்பிட்ட வெளிப்பாட்டின் இயக்கவியல் சார்ந்தவை. உதாரணமாக, நீங்கள் எவ்வாறு பச்சை நிற சமிக்ஞை கிடைத்ததும் தெருவினைத் தாண்டுகிறீர்கள் என்பது. நம் பார்வைச்சார்ந்த உள்ளீடுகள் எவ்விதம் பதனப்படுத்தப்பட்டு நம் கால்களின் தசைகள் ஒரு குறிப்பிட்ட திசை நோக்கிய புலப்பெயர்தலுக்கு தகுந்தவாறு இயக்கப்படுகிறது என்பதை நிச்சயமாக நரம்பியல் ஆராய்ச்சிகள் நமக்கு தௌசிவாகக் காட்டக்கூடும். ஆனால் அது தன்னுணர்வினை விளக்கிவிடுமா எனில் சால்மர்ஸை பொறுத்தவரை இல்லை என்றே கூற வேண்டியிருக்கும். ஏனெனில் ஆயிரக்கணக்கான மேற்கூறிய நிகழ்வுகளை நரம்பியல் விளக்கினாலும் கூட, அது சால்மர்ஸி ன் “கடினக் கேள்விக்கு“ விடைய அளிக்கப்போவதில்லை. அக்கடின கேள்வி “எவ்விதம் அனைத்து பௌதீக இயக்கங்களும் இணைந்து எண்ணிறை அனுபவங்களின் அக ஒருமையை தன்னுணர்வை உருவாக்குகின்றன?“ என்பதாகும்.

ஆஸ்திரேலிய தத்துவவாதியான ப்ராங்க் ஜாக்ஸன் இதனை ஒரு மனப்பரிசோதனை மூலம் விளக்குகிறார்: மேரி ஒரு நரம்பியல் அறிவியலாளர். அவர் வண்ணமயப் பார்வையின் அனைத்து நரம்பியல் பின்-இயக்கங்களையும் அறிந்தவர். அவர் பார்வையின் அனைத்து அமைவுகளையும், எவ்விதம் மூளை ஓர் நிறத்திலிருந்து மற்றோர் நிறத்தை பிரித்தறிகிறது என்பதையும், மின்காந்த அலையின் வேறுபட்ட அலைநீளங்களையும் அந்த அலைநீளங்களையும், அவற்றிற்கும் நிறங்களுக்குமான தொடர்புகளையும், மற்றும் வண்ணமயப்பார்வையுடன் தொடர்புடைய அனைத்து இத்யாதிகளையும் அறிவார். ஆனால் அவர் தம் வாழ்க்கை முழுவதும் கருப்பு-வெள்ளை சூழலிலேயே வாழ்கிறார். கருப்பு வெள்ளை தவிர அவர் வேறு எந்த வண்ணத்தையும் தம் பார்வையில் அனுபவித்ததில்லை. வண்ண அனுபவமே இல்லாமல் இருப்பதால் அவர் வர்ண அனுபவம் குறித்து இயக்கங்களை அறிந்திருந்தும் அனுபவத்தை இழந்துவிட்டார். அதாவது வண்ணம் எனும் அனுபவத்தின் மைய மர்மம் குறித்து அவர் கூற எதுவுமே இல்லை. சால்மர் கூறுகிறார்: ”ஒவ்வொரு நடத்தை மற்றும் அறிதல் ஆகிய நிகழ்வுகளின் இயக்கம் விளக்கப்பட்டாலும் கூட ஏன் இந்த இயக்கங்கள் தம்முடன் ஓர் அகஅனுபவத்தை எழுப்ப வேண்டும் எனும் கேள்வி பதிலளிக்கப்படாமல் இருந்தவாறே இருக்கும்.” டார்வினிய தத்துவவாதியான டானியல் டெனட் இம்மனப்பரிசோதனையையும் இதன் தத்துவ அடித்தளமான சால்மர்ஸின் பார்வையையும் விமர்சிக்கிறார். இம் மனப்பரிசோதனையை நம் மனக்கண் முன் கொணர்கையில் பொதுவான சித்திகரிப்பு இவ்விதமாக உள்ளது: மேரி முதன்முதலாக வண்ணமய உலகினுள் நுழைகிறார். அங்கே ஒரு சிவப்பு ரோஜா பூத்து நிற்கிறது. ”ஆ! இதுதான் சிவப்பா!” என அவர் வியப்படையும் காட்சி நம் மனதில் விரிகிறது. அதாவது சிவப்பு வர்ணத்தின், அந்த வர்ண அனுபவத்தின் அனைத்து பௌதீக தரவுகளையும் அவர் அறிந்திருந்தும் ஏதோ ஒன்று பூர்த்தியாகவில்லை. இந்த பூர்த்தி இன்மையிலேயே தன்னுணர்வின் மர்மம் அடங்கியுள்ளது அங்கே நரம்பியலின் கருவிகள் துழாவமுடியாது என்பதே இம்மனப்பரிசோதனை தன்னுணர்வு ஆராய்ச்சியாளருக்கு அளிக்கும் சித்திரம். மாறாக, டெனட் பின்வரும் சித்திரத்தை அளிக்கிறார், ”மேரி முதன்முதலாக வண்ணத்தைக் காண அனுமதிக்கப்படுகையில் அவரை கருப்பு வெள்ளை உலகில் அடைத்து வைத்தவர்கள் அவர் முன் ஒரு நீல நிற வாழைப்பழத்தை வைக்கின்றனர். மேரி அதனை உற்றுப்பார்த்துவிட்டு கூறுகிறார், ”ஹா நீங்கள் என்னை ஏமாற்றுகிறீர்கள் இப்பழம் பச்சையாக அல்லது மஞ்சளாக அல்லவா இருக்கவேண்டும். இது செயற்கை சாயம் பூசப்பட்டது.” மேரியின் காவலர்களுக்கு இது அதிசயமாக உள்ளது. மேரி விளக்குகிறார், ” எனக்கு வண்ணத்தின் அனைத்து பௌதீக தரவுகளும் தெரியும். எனவே இப்பழத்தின் நிறம் மஞ்சளாக இருந்தால் எனது மூளையில் ஏற்படும் உணர்வுகளுக்கும், இது ஏற்படுத்திய உணர்வுகளுக்கும் வேறுபாடு உண்டு என்பதும், இந்நிறத்தின் உணர்வுகளுக்கும் நீல நிறம் ஏற்படுத்தும் உணர்வுகளுக்கு ஒற்றுமை உண்டு என்பதும், இப்பழம் ஆனால் நீல நிறத்தில் இருக்க முடியாதென்பதும் தெரியும். எனவே இது செயற்கை வண்ணமூட்டப்பட்டது என்பதும் தெரியும்.” டெனட்டின் நிலைபாடு என்னவென்றால், இம்மனப்பரிசோதனை எதனையும் நிரூபிக்கவில்லை என்பதே.


ஆனால் பிரான்ஸிஸ் கிரிக்கும் கிறிஸ்டாப் கோச்சும் அவ்வாறு கருதவில்லை. மாறாக சால்மர்ஸின் “கடினக் கேள்வி“ தன்னுணர்வு குறித்த முக்கியமான - பதிலளிக்கப்பட வேண்டிய கேள்வி என்றே கருதுகின்றனர். அதற்கான விடையை நரம்பியல் நிச்சயமாக அளிக்கமுடியுமென்றும் ஆனால் இத்தேடலில் நரம்பியல் துறை அதற்கான முதிர்ச்சியை அடைய வேண்டுமெனவும் ஆனால் நரம்பியலின் தன்னுணர்வு தேடல் தற்போது அதன் தொடக்க நிலையிலேயே இருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். அவர்களது வார்த்தைகளில்: ”மேரி நிறத்தினை பார்வையுணர்வின் மூலம் அறிந்திடாததின் காரணம், அவர் நிற அனுபவத்தினை வார்த்தைகளால் அறிந்திருந்தும் தம் நியூரானிய உபகரணத்தின் மூலம் நிறப்பதிவினை தம் மூளையில் ஏற்படுத்தியதில்லை என்பதே என நாங்கள் கருதுகிறோம்....ஒரு அக அனுபவத்தை வார்த்தைகளாலும் கருத்தாக்கங்களாலும் விவரிக்கமுடியாது இருக்கலாம். ஆனால் இரு அக அனுபவங்களின் வேறுபாடுகளை கட்டாயமாக விவரிக்கமுடியும் இதற்குக் காரணம் மூளையின் உயர் நிலை பார்வைத்தொடர்பு கார்ட்டிக்கல் பகுதிகளில் பெறப்படும் வேறுபாடுகள் உறுப்பு இயக்க வேறுபாடுகளுடன் தொடர்புடையவை என்பதனாலேயே.

சால்மர்ஸைப் பொறுத்தவரையில் தன்னுணர்வின் மைய மர்மத்தின் மற்றொரு முக்கிய பரிமாணம் உள்ளீடுகளை பதனப்படுத்துவதன் மூலம் எழும் அகானுபவம் அதனை அனுபவிக்கும் உயிர் அமைவுக்கு பொருளுடைய ஒருமையாக விளங்குவது. எனது பழைய பெண்டியம் MMX கணினி நான் என் வாழ்நாளில் பெற்று பதனப்படுத்தக்கூடிய தரவுகளைக் காட்டிலும் அதிக அளவு தரவுகளை பதனப்படுத்தியுள்ளது எனினும் மிகக்குறைந்த தரவுகள் கூட என்னில் பதனப்படுத்தப்படுகையில், அவை எழுப்பும் பொருள் பொதிந்த அனுபவத்தை எனது MMX கணினி பெறவில்லை என்பதில் (நீங்கள் லையல் வாட்சனின் 'Secret life of machines' போன்றவற்றை நம்பாதவராக இருக்கும் பட்சத்தில்) எவ்வித ஐயமுமில்லை. எனவேதான் சால்மர்ஸ் நரம்பியக்க உள்ளீடுகளைப் பதனப்படுத்துவதை முழுமையாக அறிகையின் மூலம் தன்னுணர்வினை அறியமுடியும் என்பதனை

**தன்னுணர்வும் பிரபஞ்ச விதிகளும்**

சால்மரின் வார்த்தைகளில்: ”இயற்பியலாளர் ஜான் வீலரின் பிரபஞ்சத்துவத்தின் அடிப்படை நியதிகளில் தகவல் என்பது இன்றியமையாததோர் அம்சமாகும். இயற்பியல் விதிகள் இறுதி நிலையில் தகவலியற்கையின் விதிகளாகும் போது இயற்பியல் விதிகளுக்கும் பௌதீக-உளவியல் விதிகளுக்கும் சில அடிப்படை இசைவுகள் ஏற்படும் சாத்தியக்கூறுகளும் உண்டு. அனைத்து இயற்பியல் விதிகளுக்குமானதோர் ஆகப்பெரிய பொதுக் கோட்பாடும், தன்னுணர்வு குறித்ததோர் கோட்பாடும், தம் வேரில் இணைந்து ஒரு மகா தகவல் கோட்பாடாக வெளிப்படவும் சாத்தியக்கூறு உண்டு.

இந்நிலையில் பிரிட்டிஷ் கணித இயற்பியலாளரான ரோஜர் பென்ரோஸ் க்வாண்டம் இயற்பியல் மூலம் தன்னுணர்வை விளக்க முயலும் கருத்தாக்கங்களும் முக்கியமானவை. கட்டுப்பாடான பரிசோதனை மூலம் தன்னுணர்வை அறிவதற்கானதோர் புரட்சிகர பார்வையினை தாம் ஏற்படுத்தியதாகவே பென்ரோஸ் கருதுகிறார். உள்ளீடு ஒரு குறிப்பிட்ட தீர்வு வழிமுறை (algorithm) மூலம் பதனப்படுத்தப்பட்டு வெளிப்பாடு ஏற்படும் கணினி என்னும் உருவகத்தின் அடிப்படையில் மூளையை கணினியாகவும் அதன் இயக்கத்தை தீர்வு வழிமுறை மூலம் பதனப் படுத்தப்படும் இயக்கமாகவும் தன்னுணர்வை அப்பதனழ்



மைக்ரோ ட்யூபியூல்கள் ட்யூபுலின்புரத அடுக்குகளால் ஆனவை. ட்யூபுலின் புரத நிலையுருவுகள் க்வாண்டம் மேற்பதிவுத்தன்மையுடன் விளங்குகின்றன.

சந்தேகிக்கிறார். க்ரிக்கும், கோச்சும் கூறுகின்றனர், ”சால்மர்ஸ் சந்தேகிப்பது போல தகவல் (information) என்பதே இங்கு மையமாக இருக்கலாம். (பல்வேறு புலன் உள்ளீடுகளைப் பதனப்படுத்தலின் மூலம் எழும் அக அனுபவப்) பொருளினை உருவாக்க ஒரு நியூரானிய வலையமைப்புக்கு (neural networks) எத்தகைய பண்புகள் தேவை என்பதனை ஆராய்வது பயனுள்ளதாக இருக்கலாம். எனில் சால்மரின் கடினக்கேள்வி முழுக்க முழுக்க புத்தொளியில் காணப்பட முடியும் அல்லது காணாமலே போகலாம்.” ஆனால் சால்மர்ஸ் வைக்கும் கருதுகோள் சுவாரசியமானது. இக்கருதுகோள் இயற்பியல் நிகழ்வோட்டங்களுக்கும் அனுபவத்திற்குமான ஒரு அடிப்படைத்தன்மையை சுட்ட விழைகிறது. அதன்படி: தகவலுக்கு இரு பரிமாணங்கள் இருக்கலாம். ஒன்று அதன் இயற்பியல் ரீதியானது மற்றொன்று அனுபவத்துவமானது (experiencial). நாம் எங்கெல்லாம் தன்னுணர்வுப்பூர்வமான அனுபவத்தைக் காண்கிறோமோ அங்கெல்லாம் அவ் அனுபவமானது அதன் ஒரு பகுதி தகவல் தன்மையிலும், மற்றோர் பகுதி மூளையின் இயற்பியல் பௌதீக செயல்பாடுகளிலுமாக உள்ளது. இக்கருதுகோள் மென்மேலும் கூர்மைப்படுத்தப்படுகையில் அது நம் தன்னுணர்வின் பல்வேறு தன்மைகளை விளக்கக் கூடும். சால்மர் அதனோடு கூட மற்றொரு அதீத ஆனால் சாத்தியமற்றதெனக் கூறமுடியாதத் தொடர்பையும் உடன் வைக்கிறார்.

உள்ளீடு ஆகியவற்றின் வெளிப்பாடாகவும் காணும் போக்கே நரம்பியல் மற்றும் உயிர் இயற்பியல் ஆராய்ச்சிகள் தன்னுணர்வினை அணுகுவதில் வெளிப்படுகிறது எனக் கருதும் பென்ரோஸ் தன்னுணர்வு அதற்கு மாறாக இருப்பதாகக் கருதுகிறார். அது தீர்வு வழிமுறை மூலம் பதனப்படுத்தல் எனும் தன்மையற்றது (non-algorithmic). என்கிறார். ஏற்கனவே நாம் எண்ணிறந்த அனுபவங்கள் ஊடாகவும், அவற்றின் மேலாகவும் கவிந்து ஒரு ஒருமைத்தன்மை ஏற்படுத்துவது தன்னுணர்வின் முக்கிய குணாம்சம் என்பதைக் கண்டோம். இது தீர்வு வழிமுறை மூலம் பதனப்படுத்தல் மூலம் விளக்கப்படமுடியாதது.

மயக்க தொழில்நுட்பவியலாளரான ஸ்டுவர்ட் ஹேமரா.்.ப்புடன் இணைந்து பென்ரோஸ் சில முக்கிய முடிவுகளை முன்வைக்கிறார். க்வாண்டம் இயற்பியலின் விதிகள் செயல்படும் நுண்ணுலகின் முக்கிய குணாம்சங்கள் தன்னுணர்வின் செயல்பாட்டில் பிரதிபலிப்பதாகக் கருதும் பென்ரோஸ் ரூ ஹேமரா.்.ப், எனில் க்வாண்டம் இயற்பியல்த்தன்மையுடன் செயல்படும் உயிரியல் நுண்அமைப்புகளைத் தேடுகின்றனர். மைக்ரோட்யூப்யூல்கள் எனப்படும் அமைப்புகளிலிருந்து க்வாண்டம் நிகழ்வோட்டங்கள் மூலம் தன்னுணர்வு முகிழ்த்தெழலாம் எனும் அவரது கருதுகோளை வலுப்படுத்தும் சில கண்டுபிடிப்புகள் அண்மையில் நிகழ்ந்துள்ளன.

ஒரு செல் உயிரினங்களிலிருந்து

( 24 ம் பக்கம் பார்க்கவும் )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகளை, உடமைகளை இழந்து துயருறும் உறவுகளே உங்கள் துயரில் நாமும் பங்கேற்கிறோம்

RBC™
ROYAL BANK
FINANCIAL GROUP



Jan 01-2005 - Jan 31- 2005 ரை எம்மிடம் Mortgage செய்து கொள்பவர்களுக்கு எமது இலாபத்தில் ஒரு பகுதியை நீங்கள் குறிப்பிடும் இடத்திற்கு, நபருக்கு நிவாரண உதவியாக அனுப்பிவைப்போம்

# Mortgage Centre

"வீடு உயிர்ப்புள்ள ஒரு இயக்கம். வீடு பற்றிய நினைவில்லாத மனிதர்களே இல்லை என்கிற அளவுக்கு அது உயிர் பெற்றது. தாய்மையாக, தோழமையாக பரி வோடும் கனிவோடும் எங்களோடு கலக்கிறது. சிநேகம் கொள்கிறது. எப்போதும் எங்களோடு ஒரு இணக்கமான உறவை அது விரித்திருக்கிறது"

**உங்கள் கடின உழைப்பை வீடொன்றில் முதலிடும் போது குறைந்த வட்டிவீதம் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள..**

# எங்களை அழையுங்கள்....

# 416.438.1688

**Vince Sinnadurai** **Abirami ( Abby ) Sri Haran** **Mailvaganam (Mike)**

Account Manager
Residential Morgages
416-917-9462

Mobile Mortgage Specialist
416-472-3195

Account Manager
Residential Morgages
416-220.1184

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரைக்கதம்பம்







## வில்

'எந்த ஒரு மனிதனும் ஒரு இலட்சியத்துடன் அதன் இலக்கை நோக்கிப் போராடினால் வெற்றி பெற முடியும்' என்ற கருவை மையமாக வைத்து தயாராகும் படமொன்றுக்கு 'வில்' என்று பெயரிடப்பட்டுள்ளது. கோகுலம் மீடியாஸ் நிறுவனம் தயாரிக்கும் இந்தப் படத்தில் விக்னேஷ் கதாநாயகனாக நடிக்க, மூன்று கதாநாயகிகளாக புது முகங்கள் அறிமுகமாகின்றனர். ஏற்கனவே 'மஞ்சுவிரட்டு' படத்தை இயக்கிய எஸ். எஸ். வளையாபதி இப்படத்துக்கான கதை, திரைக்கதை வசனத்தை எழுதியிருப்பதுடன் இயக்கியும் வருகிறார்.

## என் காதலே

யூத் கிரியேஷன்ஸ் என்ற பட நிறுவனம் தயாரிக்கும் 'என் காதலே' புதுமுக கதாநாயகனாக ஆர். கணேஷ் அறிமுகமாகிறார். கதாநாயகியாக சுபாஷினி நடிக்கிறார். மற்றும் நாசர், செந்தில், சார்லி, டெல்லிகணேஷ், 'ஆட்டோகிராப்' வேல் முருகன், டி.பி. கஜேந்திரன் இவர்களுடன் கோவை சரளா முதன் முதலாக அம்மா, மகள் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்.

ஆக்ஷன் பிரகாஷ் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குகிறார். இன்றைய தலைமுறையைப் பற்றி மூத்த தலைமுறையினர் வைத்திருக்கும் தப்பான அபிப்பிராயத்தை தகர்த்தெறிவது மாதிரியான கதை தான் 'என் காதலே'.

## காதல்

ராஜ்கிரண் நடிக்கும் 'மண்ணில் இந்த காதல்' திரைப்படத்தை பிரமாண்டமான முறையில் கே. கே. சி.இ மூவீஸ் என்ற நிறுவனம் தயாரித்து வருகின்றது. முழுக்க, முழுக்க காதலும், சமூக முன்னேற்றம் குறித்த கருத்துக்களும் நிறைந்த சமூக சித்திரமான இத்திரைப்படத்தில் இளம் காதலர்களாக சுதன், மேகா என்ற புதுமுக நாயகன், நாயகி அறிமுகமாகின்றனர். மேலும், கருணாஸ், குமரிமுத்து, கொட்டாச்சி, கில்லி சிவா, சித்திர குப்தன், முத்துகுமார், வண்டார்குழலி சுமிதா, சபீதா ஆனந்த், சுந்தரி எனப் பலர் நடிக்கின்றனர்.

'மண்ணில் இந்த காதல்' படத்திற்கு கிராமிய காதல் மணம் கமிழ்கின்ற விதத்தில் ஐந்து வித்தியாசமான பாடலுக்கு சௌந்தர்யன் இசையமைக்க,. அறிமுக கவிஞராக பி. முருகன் சக்கரவர்த்தி என்பவர் பாடல்களை எழுத, கதை திரைக்கதை வசனம் எழுதி வீரமணி இயக்குகிறார்..

## ஆசாமி

ஸ்கை மீடியாஸ் என்னும் புதிய திரைப்பட நிறுவனம் சார்பில் பி. மகேஷ் தயாரிக்கும் படம் 'ஆசாமி'. படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதியிருப்பவர் பார்த்தன். காதல், மோதல், நட்பு மற்றும் மனித உணர்வுகளை மையமாகக் கொண்டு பொழுது போக்கு அம்சத்துடன் சொல்லப்படும் இக்கதையை தெலுங்கில் பல படங்களை இயக்கிய கே. சுரேஷ்வர்மா இயக்குகிறார். தெலுங்கில் 'தில்' படத்தில் நடித்த நேகா கதாநாயகியாக நடிக்கிறார். மேலும் வடிவேலு, கலாபவன்மணி மற்றும் பல முன்னணி நடிக, நடிகையர்கள் நடிக்கின்றனர்.


KISKINTHA
Building Maintenance Ltd.
Residential, Commercial & Industrial Service
Available 7 Days a Week 24hrs
Carpet & Duct cleaning, Janitorial cleaning, Painting
Call Mano for Free Estimation
416-732.4574, 416-889.0631
www.kiskintha.com

நிதிப்பற்றாக்குறையா?
.Personal Loan . Line of Credit( upto 50K)
Credit Card .Consolidation Loan
Car Loan. Mortgage. RESP. RRSP
அழையுங்கள்
ரவி 416.554.8111

AJP Doors & Windows
பல வருடகால அனுபவம் மிக்க சௌந்தரின் நேரடி நிர்வாகத்தில்
All Custom Made
Call Sounder
Tel: 416.297.7522
Cell: 416.918.5360

Nallur Video Centre
Audio, Video, CD & Gift
VHS to DVD Record
DVD to DVD
PAL< > SCAM < > NTSC
Any System
NvC
607-1 Parliament St, 1st Floor
Toronto, Ontario ( Wellesly & Parliament )
Phone:416.944.0238

உங்கள் இல்லங்கள் தோறும்
SunTV
KTV
பொருத்திக் கொள்ள
எங்களையே அழையுங்கள்
$249.00+
இந்த ஸ்பெஷல்
சிலகாலம் மட்டுமே...
அழையுங்கள்
மோகன்: 416-893-5999
அனந்த்: 514-448-6171






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல இந்தி வில்லன் நடிகர் அம்ரீஷ்பூரி மரணம்





பிரபல இந்தி வில்லன் நடிகர் அம்ரீ‘பூரி மரணம் அடைந் தார்.வில்லன் நடிகராக அறிமுகம் ஆகி, ஹபாலிவுட்“டை கலக்கியவர் அம்ரீ‘பூரி. 72 வயதான இவர், மும்பையில் உள்ள மருத்துவ மனை ஒன்றில் அனுமதிக்கப் பட்டு இருந்தார். மூளையில், ஏற்பட்ட ரத்தக் கட்டிக்காக அவருக்கு சிகிச்சை நடந்தது.

அதைத் தொடர்ந்து உணர்வு இழந்த அவர் ஹகோமா“ நிலைக்கு தள்ளப்பட்டார். சிகிச்சை பலன் இன்றி அம்ரீ‘பூரி நேற்று காலை மரணம் அடைந்தார். அவருக்கு மனைவியும், ஒரு மகன், ஒரு மகள் ஆகியோர் உள்ளனர்.

மருத்துவமனையில் இருந்து அம்ரீஷ் பூரியின் உடல் வீட்டிற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொது மக்களின் பார்வைக்கு வைக்கப் பட்டு இருந்தது. அவருடைய நெருங்கிய உற வினர்கள் வெளிநாடுகளில் இருந்து வந்து கொண்டு இருப்ப தால் அம்ரீ‘பூரியின் உடல் தகனம் இன்று (வியாழக்கிழமை) பிற்பகல் நடக்கிறது. குணச்சித்திர நடிகர் மதன்பூரி யின் இளைய சகோதரர் ஆன அம்ரீ‘பூரி தனது 40-வது வய தில் இந்திப்பட உலகில் நுழைந் தார். சேகர்கபூரின் ஹமிஸ்டர் இந் தியா“ படத்தில் ஹமொகாம்போ“ என்ற வில்லன் பாத்திரத்தில் நடித்ததன் மூலம் அவர் பிரபலம் ஆனார். அம்ரீ‘பூரி இதுவரை 200-க் கும் அதிகமான படங்களில நடித்து இருக்கிறார். ரஜினிகாந்த் நடித்த 'தளபதி' படத்தில் மொட்டைத்தலை வில்லனாக வந்து தனது அலட்டிக்கொள்ளாத அட்டகாசமான நடிப்பின் மூலம் தமிழ் ரசிகர்களை கவர்ந்தார்.

கமலஹாசனின் அவ்வை சண் முகியின் இந்தி பதிப்பில், பெண் வேடம் தாங்கிய கமலஹாசன் பின்னால் சுற்றி வந்து அசடு வழியும் நகைச்சுவை பாத்திரத் தில் (தமிழில் ஜெமினி கணேசன் நடித்த வேடம்) சிறப்பாக நடித்த தன் மூலம், எந்த வேடத்தையும் தன்னால் சிறப்பாக செய்ய முடியும் என்று நிரூபித்தவர், அம்ரீ‘பூரி.

1982-ல் வெளியான ரிச்சர்டு ஆட்டன்பரோவின் 'காந்தி' படத்தில் அவர் ஏற்ற ஹகான்“ வேடத்தின் மூலம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து 1984-ம் ஆண்டில், ஷலிவுட் திரை உலகிலும் பிரவேசித்த அம்ரீ‘, ஸ்டீவன் ஸ்பீல்பெர்க்கின் படம் ஒன்றலும் நடித்தார்.

---

( 18ம் பக்கத் தொடர்ச்சி )

வேட்டை நடத்தி வருகிறாா் அவரது தாய்க்குலம்.

'காதலே ஜெயம்' என்ற படத்தைத் தானே தயாாரித்து இயக்கி, நாயகனாக நடித்துக் காயப்பட்ட நடராஜ், தற்போது முன்னணிநாயகர்களிடம் தேதி கேட்டு அலைந்து வருகிறாா்.

ஒரு படத்தை இயக்குவதற்காகக் கதை ஒன்றைத் தயாா் செய்து வருகிறாா் அபிராமி. 'திருப்பாச்சி' படத்தின் இயக்குநா் பேரசுவே அந்தப் படத்துக்கான அனைத்துப் பாடல்களையும் எழுதியுள்ளாா்.

PROPERTY
MORTGAGE CANADA
INC
We Bring Canada's leading lenders to you


Shan Subramaniyam
President/Broker


Ramanan Anandappa
Mortgage Broker

பொங்கள் வாழ்த்துக்கள்



HERE IS ANOTHER PROPERTY MAX'S SERVICE
TO SERVE YOU BETTER WE HAVE OPENED OUR SISTER COMPANY
PROPERTY MORTGAGE CANADA INC.

Shan Subramaniyam
President/Broker
Ph: 416.857.1780
Fax: 416.298.9963
PROPERTY MAX REALTY INC.
203-3321 Mc Nicoll Ave
Scarborough, On
M1V 5B3

NEW MORTGAGE! RENEWALS!
RE-FINANCING!
BAD CREDIT, NO CREDIT ...... NO PROBLEM...
SAME DAY APPROVALS & FAST

Ramanan Anandappa
Mortgage Broker
Ph: 416.837.8669
Fax: 416.298.9963
PROPERTY MORTGAGE CANADA INC.
203-3321 Mc Nicoll Ave
Scarborough, On
M1V 5B3

வாடிக்கையாளர்களுக்கு எமது பொங்கள் வாழ்த்துக்கள்



இவளால் நகை அழகா...
நகையால் இவள் அழகா...
கனகாம்பிகை நகைமாளிகை
KANAGAAMBIKAI GOLD HOUSE
TEL: 416-269-7198
3160 EGLINTON AVE E, UNIT# 03,
SCARBOROUGH

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SABA
AUTO TECH INC.

For Excellent Auto Repair & Body Work



Call: Logan
416.285-7133
90 Hymus Rd,Unit 5
Scarborough, On.
M1L 2C9


ஏ. எம். ரத்னம் தயாரிப்பில் அஜித்குமார் இரு படங்களில் நடிக்க உள்ளார்.

ஸ்ரீகாந்த் நடிக்கும் 'சதுரங்கம்' படத்தில் பாரதியாரின் 'ஆடுவோமே பள்ளு பாடுவோமே' என்ற பாடலை மாணிக்க விநாயகம் பாடியுள்ளார்.

கைவிடப்பட்ட 'சென்னையில் ஒரு மழைக்காலம்' படத்தில் அசின் பத்து நாட்கள் செயற்கை மழையில் நனைந்து நடித்துள்ளார்.

திருமணத்துக்குப் பிறகு சென்னையை விடடுக் குடி பெயர்ந்து விட்டாலும் தமிழ் சினிமாவையும் தமிழ் ரசிகர்களையும் தன்னால் மறக்க முடியவில்லை என்கிறார் சிம்ரன்.

மதுர படத்தைத் தொடர்ந்து ரக்ஷிதாவுக்கு தனுசுடன் ஒரு படத்தில் நடிக்க வாய்ப்பு வந்துள்ளது.

'அந்நியன்' படம் தெலுங்கில் 'அப்ரஜித்துடு' என்ற பெயரில் எடுக்கப்பட்டு வருகிறது.
'சுள்ளான்' படத்தை எடுத்த சந்திரசேகர் மீண்டும் தனுஷ் நடிக்க ஒரு படத்தைத் தயாரிக்க உள்ளார்.

பிரசன்னா நடிக்கும் படமொன்றை இயக்குவதன் மூலம் இயக்குநராகிறார் ஒளிப்பதிவாளர் விஜய் மில்டன்.

தன்னுடைய ஷோபா கல்யாண மண்டபத்திலேயே தனது ரசிகர் மன்ற தலைமை அலுவலகத்தையும் நடத்தி வருகிறார் விஜய்.

பிரசாந்த் நடிக்கும் 'லண்டன்' படத்தின் தயாரிப்பாளரான லண்டன் வாசி சுபா சந்தீப் பிரசாந்த்தின் தீவிர ரசிகையாம்.



ரஜினியின் சுய சரிதைதான் சின்னி ஜெயந்த் நடிக்கும் 'டாப் ஸ்டார்' படத்தின் கதை.

'கில்லி' யை அடுத்து தெலுங்கில் பவன்கல்யாணை வைத்து 'பங்காரு' என்ற படத்தை இயக்கத் தொடங்கிவிட்டார் தரணி.

கமல் அடுத்து நடிக்க இருக்கும் படத்தில் கமலுக்கு உடைவடிவமைப்பாளராகப் பணிபுரிய இருப்பவர் அவரது மகள் ஸ்ருதி.

விவேக் 'ஹீரோயிஸம்' கலந்த நகைச்சுவைக் கதைகளை நாடிப்போக, வடிவேலு வாயில் வந்த தொகையை சம்பளமாகக் கேட்க இப்போது சார்லியை நாடத்தொடங்கியுள்ளனர் தயாரிப்பாளர்கள்.

'திருப்பாச்சி' படத்தில் விஜய் தந்தையாக நடித்திருப்பவர் விக்ரமின் நிஜ தந்தை.

எஸ்.ஜே.சூர்யாவும் சிம்புவும் இணைந்து ஒரு படத்தில் நடிக்க முடிவு செய்திருக்கின்றனர்.

ஒரு நாளைக்கு நான்கைந்து பெட்டி வெண்குழல் வத்தியை ஊதித் தள்ளுகிறார் நமீதா.

ஏற்கனவே தான் எழுதி வெளியிட்ட 'இது ராஜபாட்டையல்ல' என்ற தன் நூலில் புதிய பகுதிகளைச் சேர்த்துச் சிறப்புப்பதிப்பு வெளியிடுகிறார் சிவகுமார்.

தன் பெயரை மாற்றினால் அதிர்ஸ்டம் அடிக்குமா என்று பெயரியல் நிபுணர் ஒருவரிடம் ஆலோசனை செய்துள்ளார் ஷாம்.

குணச்சித்திர வேடங்களில் நடிப்பதற்காகத் தீவிர வாய்ப்பு வேட்டையாடி வருகிறார் கவர்ச்சி நடிகை பாபிலோனா.

ஜெய் ஆகாஷ் - மதுமிதா நடிக்கும் 'பேர் அண்ட் லவ்லி' படத்துக்கு தமிழ் இயக்க ஆதரவாளர்களிடம் இருந்து எதிர்ப்பு வந்தால் என்று, 'சொல்ல சொல்லச் சிவக்குதே' என்று ஒரு மாற்றுத் தலைப்பையும் பதிவு செய்து வைத்திருக்கின்றனர்.

ரஜினியை 'செல்லம்' என்றுதான் அழைக்கிறார் பிரகாஷ்ராஜ்.

செல்வபாரதி இயக்கும் படத்துக்கு எம்.ஜி.ஆரின் வெற்றிப்படங்களில் ஒன்றான 'அன்பே வா' பெயர் வைக்கப்பட்டுள்ளது.

மாயாவி படத்தை இயக்கும் சிங்கம் புலி, ஏற்கனவே ராம் சத்யா என்ற பெயரில் அஜீத் நடித்த 'ரெட்' படத்தை இயக்கியவர்

'வீட்டோடு மாப்பிள்யையாக இருக்க வேண்டும்' என்ற நிபந்தனையுடன், மீனாவுக்கு மாப்பிள்ளை

( 17ம் பக்கம் பார்க்கவும் )

## பழஞ்சோறு.....பழஞ்சோறு.....பழஞ்சோறு

சரோஜா என்ற பெயரில் அந்தக் காலத்தில் பல நடிகைகள் இருந்தனர். சரோஜாதேவி, பி.எஸ்.சரோஜா, ஈ.வி.சரோஜா என்று சொல்லும் பட்டியலில் எம்.சரோஜாவும் ஒருவர். இவர் நகைச்சுவை நடிகர் 'டணால்' தங்கவேலுவின் துணைவி. அந்தக் காலத்தில் பிரபல நடிகையாக விளங்கிய லக்சுமிப் பிரபாவின சகோதரி. "வீட்டுக்கு ஒரு நடிகை போதும். சரோஜாவை நன்றாக படிக்க வைக்க வேண்டும்" என்று சரோஜாவின் தந்தை கொண்டிருந்த பிடிவாதத்தை மெல்ல மெல்ல கரைத்து வந்தவர் இயக்குனர் கே.சுப்பிரமணியம். கே.சுப்பிரமணியம் மரியாதைக்குரிய இயக்குனர்களில் ஒருவராக இருந்தபடியாலேயே சரோஜாவுக்கு அவரது தந்தை நடிக்க அனுமதி வழங்கனார். அவரது முதலாவது படம் கீதகாந்தி. அதில் நாயகி டி.எஸ்.சரோஜாவுடன் இரண்டாவது கதாநாயகியாக அறிமுகமான எம்.சரோஜாவால் பிற்காலத்தில் நகைச்சுவை நடிகையாகவே மிளிர முடிந்தது. நகைச்சுவை நடிப்பால் இவருக்கு ஆதர்ஷம் இவரது கணவர் 'டணால்' தங்கவேலு தான். அவருடன் இணைந்து ரசிகர்களை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்த நடிகை சரோஜாவுக்கு 2002ம் ஆண்டுக்கான, சிவாஜிகணேசன் நினைவு விருதைத் தமிழக அரசு கடந்த கார்த்திகை 2004ல் வழங்கிக் கௌரவித்தது. ஒரு கலைஞனுக்கு ரசிகர்களின் கைதட்டலும், பாராட்டும்தான் மிகப் பெரிய பரிசு என்று சொல்லும் எம்.சரோஜாவுக்கு வயது எழுபதைத் தாண்டிவிட்டது.






# லெகசி மருத்துவ நிலையம்
## Legacy Medical Centre




Family Physicians Walk-in Clinic
**குடும்ப வைத்திய நிலையம்**

Dr. R. லம்போதரன்
( MBBS - Srilanka ) ( CCFP - Canada )

Dr. திருமதி. அருணா லம்போதரன்
( MBBS - Srilanka ) ( Diploma in Obstetrics- New Zealand ) ( CCFP - Canada )

9 A.M. - 9 P.M.
7 Days a Week
416-299-8100




5637 Finch Ave. East
Unit #7 ( Finch & Tapscott)
Scarborough, On
( நாக பூஷணி அம்மன் கோவில் அருகில் )



# Immigration!!
# Your Attention Please…



இலங்கையிலிருந்தோ ஈழத்திலிருந்தோ உங்கள் உறவினர்கள் அல்லது நண்பர்களைக் கனடாவிற்கு குடியேற்ற விரும்புகிறீர்களா? அல்லது அவர்கள் யாரேனும் குடியேற விரும்புகிறார்களா? **Student Visa** மூலம் இங்கு வரலாம். வந்து ஒரு வருடத்திற்குப் பிறகு, நிரந்தர வசிப்புரிமைக்காக விண்ணப்பிக்கலாம். அதற்குள் தங்கள் தகுதிகளை வளர்த்துக் கொண்டு, ஒரு வேலையையும் ஏற்பாடு செய்தும் கொண்டால், நிரந்தர் வசிப்புரிமை பெறுவது எளிது.

கள்ளத்தனமாக வந்து கடன் வாங்கிய பணத்திற்காக இரவும் பகலுமாக உழைத்துக் கட்ட வேண்டிய கொடுமையிலிருந்து தப்பலாம். ஒவ்வொரு நாளும் அகதி வழக்கு தோற்குமோ, வெற்றி பெறுமோ என்று பயந்து பயந்து வாழாமல் இருக்கலாம். வேலை கிடைக்கத் தக்க படிப்பை மேற்கொள்வதன் மூலம், நல்ல வேலையும் கிடைக்கும். சுதந்திரமாகவும், உரிமையுடனும், மன அமைதியுடனும் வாழ வழி வகுக்கலாம்.

மிகவும் குறுகிய கால கட்டத்தில், குறைந்த பணச் செலவில், உங்கள் உறவினர்/நண்பரை கனடாவுக்கு அழைத்துவர தொடர்பு கொள்ளுங்கள்:






**தீனதாயளன்**
**2401 Eglinton Ave. East**
**Suite # 208, Toronto ON.**
**M1K 2N8**
**Tel: (416) 834 8298**
**Fax: (416) 752 5255**
**E-mail: Uttira@hotmail.Com.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோ தமிழ் சமூகத்தில் குடும்ப வன்முறைகள் பற்றிய அபிப்பிராயமும் வன்முறைக்கான பிரதிபலிப்பும்

ஒவ்வொரு சமூகத்திலும் கலாச்சாரத்திலும் குடும்ப வன்முறை தொடர்ந்து நடைபெற்ற வண்ணமே இருக்கின்றது. பெண்களும் சிறுவர்களும் சுதந்திரமாக பயமின்றி வன்முறையற்ற சூழலில் வாழ உரிமை உடையவர்கள் என்ற வகையில், ஒன்ராறியோ அரசு அண்மையில் தனது குடும்ப வன்முறைக் கெதிரான நான்கு வருட பல்பரிமாண செயல்பாட்டுத் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த செயல்திட்ட அறிக்கையானது, உன்னிப்பாக றொறன்ரோ பல்சமூகத்தில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் குடும்ப வன்முறைகளையும், குடும்ப வன்முறைகளினால் ஏற்படும் சீர்கேடுகளையும் தடுத்து, குடும்ப வன்முறைகளற்ற சிறந்த சமுதாயத்தை உருவாக்கும் பொருட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் றொறன்ரோ தமிழ் சமூகம் இந்த விடயம் தொடர்பாக இரண்டு ஆய்வுகளை உள்வாங்கி உள்ளது.

முதலாவது ஆய்வானது பெண்கள் சுகாதார ஆய்வு மையமும் (Center for Research in Women's Health) றொறன்ரோ குடும்ப கனடா சுகாதார ஆய்வு நிறுவகத்தின் (Canadian Institute of Health Research) நிதியீட்டத்துடன் றொறன்ரோ தமிழ் சமூகத்தில் குடும்ப வன்முறைகள் பற்றிய அபிப்பிராயமும் வன்முறையை எதிர் கொள்ளப்படும் விதமும் என்ற விடயத்தில் ஆய்வு மேற் கொள்ள ஆரம்பித்துள்ளது.

ஆய்வின் நோக்கமானது, வன்முறைகளை அனுபவிக்கும் புதிதாக வந்த சிறுபான்மைச் சமூக்ததைச் சேர்ந்த பெண்கள், வன்முறைகளைத் தடுக்கும் அல்லது வன்முறைகளுக் கெதிராக சேவைகளை உரியபடி பயன்படுத்த முடிவதில்லை. உதாரணமாக வைத்திய, சட்ட சேவைகள் உறைவிடங்கள் (Shelters) அதி அவசர எண்கள் (Hot lines) போன்றவற்றுடன் கலாச்சார மரபினாலும், மொழியறிவின்மையாலும், கனடாவின் நிரந்தர வதிவிட தகுதியை இழக்க நேரிடும் என்ற பயத்தினாலும் மற்றும் பல்வேறு தடைக் காரணிகளினாலும் வன்முறைகளைக் தவிர்க்கும் தடுக்கும் சேவைகளை சிறந்த முறையில் பயன் படுத்த முடிவதில்லை.

எது எப்படி இருந்த போதிலும் அனைத்து வயதிலுமான பெண்கள் குடும்ப வன்முறையை பல்வேறு விதங்களில் இனங்கண்டு விளங்கி வன்முறையை பல்வேறு மொழிகளில் வேறுபட்ட தமக்கே உரிய சொந்த



சொற்பிரயோகங்களில் இப்பிரச்சினைகளை பெயரிடுகின்றனர். ஆகவே இப் பெண்கள் குடும்ப வன்முறைகளை எவ்வாறு விபரிக்கின்றார்கள், எவ்வாறு அழைக்கின்றார்கள் என்பதை மேலும் தெளிவாக விளங்கிக் கொள்வதே இந்த ஆய்வின் நோக்கமாகும். ஆய்வின் ஆரம்ப வேவைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டது. இவ் ஆய்வானது பல்வேறு வயதினையுடைய தமிழ் சமூக பெண்களைக் கொண்ட குழு கலந்துரையாடல் மூலம் 8 பேர் கொண்ட ஒவ்வொரு குழுவாக 8 குழுக்கள் அமைத்து விடயம் சம்பந்தமாக கலந்துரையாடி ஆய்விற்கான அடிப்படைத் தரவு சேகரிக்கப்பட உள்ளது.

இவ் ஆய்வை நடாத்தும் பொருட்டு தமிழ் சமூகத்திடையே ஏற்கனவே சேவையாற்றும் அநுபவமிக்க தமிழ் அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றும் அமைக்கப்பட உள்ளது.

இறுதியாக ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட விடயங்கள் தமிழ் சமூகத்தின் கலாச்சார உணர்திறனுடன் கூடிய (Cultural Sensitive) சுகாதார சேவை முறைகளை அபிவிருத்தி செய்யவும் றொறன்ரோ வாழ் தமிழ் சமூகத்திற்கு சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தமது சேவைகளை சிறந்த முறையில் ஏற்றபடி திட்டமிட்டு தயாரித்து வழங்கும் பொருட்டும் தமிழ் சமூகத்திற்கு சேவைகளை வழங்கும் முன்னரங்க பணியாளர்களுக்குரிய பயிற்சியை வழங்கும் பொருட்டும் பயன்படுத்தப்படும்.

இந்த ஆய்வின் குழு கலந்துரையாடலில் பங்குபற்ற விரும்பும் பெண்கள் 416 351 3800 × 2738 எனும் இலக்கத்தினூடாக ராஜினி தார்சியெஸ், தர்ஷி யோகநாதன் என்பவர்களை அழைத்துப் பதிவு செய்து கொள்ளலாம். இரண்டாவது ஆய்வை வசந்தம் முதியோர் இல்லம் குடும்ப வன்முறை பற்றிய விழிப்புணர்வை மதிப்பிடும் வகையிலும், இரண்டாம் கட்டமாக குடும்ப வன்முறைக் கெதிரான குடும்ப வன்முறைகளைத் தடுக்கும் ஆவணங்களையும் கையேடுகளையும் தயாரிப்பதற்கான நடவடிக்கையிலும் வசந்தம் ஈடுபட உள்ளது.

## சிவயோக சுவாமிகள் சிவதொண்டன் நிலையம்
## அநாதைப் பிள்ளைகள், அகதிகள் பராமரிப்பு

ஈழத்தின் வடக்கில் யாழ்ப்பாணத்திலும் கிழக்கே செங்கலடியிலும் முறையே கோயில் கொண்டிருக்கும் சிவதொண்டன நிலையங்கள் பாதிக்கப்பட்ட அநாதைப் பிள்ளைகளுக்கும் மற்றும் இடம் பெயர்ந்த அகதிகளுக்கும் ஆறுதல் கொடுத்து தற்சமயம் மிக மேன்மையான சிவதொண்டாகிய அன்னதானப் பணியை செவ்வனே செய்கிறார்கள்.
சிவயோக சுவாமிகள் அன்னதானப் பணிக்கு எப்பொழுதுமே முன்னுரிமை கொடுத்து வந்தார்கள். சுவாமிகள் இற்றைக்கு 45 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் அவரின் ஆச்சிரமத்திலிருந்து மிக உருக்கமாக சத்தத்துடன் கூறியதாவது:

"தமிழனுக்கு கஞ்சி குடிக்கவும் வழி இல்லாத காலம் வரப்போகிறது, எல்லோரும் போய் கமம், விவசாயம் செய்யுங்கள்" என்றார். இந்த முன்னெச்சரிக்கை தான் எங்கள் தமிழ் மக்களுக்கு ஈழமண்ணிலே அந்த அவல நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது.

மேற் கூறிய அன்னதானப் பணி தொடர்ந்து நடைபெறுவதற்கு அவசரமாக நிதி உதவி செய்ய வேண்டியது முக்கியமான சிவதொண்டும் கடமையுமாகும். ஆகவே இந்தப் புண்ணிய கைங்கரிய பணிக்கு நிதி செய்ய விரும்பும் சுவாமிகளின் அடியார்களும் மற்றும் அன்பர்கள் யாவரும் பின்வரும் விலாசங்களைத் தொடர்பு கொண்டு உங்கள் நன்கொடை நிதியை அனுப்பலாம்.

உங்கள் உறவினர்கள் ஸ்ரீலங்காவில் இருந்தால் அவர்கள் மூலமாகவும் உங்கள் நன்கொடை நிதியை அங்கு உள்ளூரிலேயே கொடுத்து பற்றுச் சீட்டை பெற்றுக் கொள்ளலாம்.

| | |
|---|---|
| Sivathiru A. Chellathurai Swamikal | Mr. M. Thillakaratnam |
| **SIVATHONDAN NILAYAM** | **Chartered accountant** |
| 434, K.K.S.ROAD | 25/A Pamanlade lane |
| JAFFNA, SRILANKA | Wellawatte, Colombo-6 |
| | Srilanka Tel: 2365102 |

"தானத்தில் சிறந்தது அன்னதானம்"
குருபக்தி வளர்க! சிவதொண்டு வளர்க!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒஸ்ரேலியாவில் வசிக்கும் மிருக வைத்தியர் டொக்டர் நடேசனின் படைப்பான 'வண்ணாத்திக்குளம்' குறுநாவல் வெளியீடும் விமர்சனக் கூட்டமும் தை மாதம் 2ம் திகதி ஸ்காபுரோவில் இடம் பெற்றது. ஆறு மணிக்குத் தொடங்கிய விழாவிற்கு நான் சென்றது 20நிமிடங்கள் தாமதித்தே. அப்போது இந் நிகழ்வைத் தலைமை தாங்கி நாடாத்திய

படுகின்றார்கள் என்பது பற்றியும் எழுத்தில் வடித்ததிலும் பார்க்க இக் குறுநாவலை விமர்சனம் செய்த டி.பி.எஸ் ஜெயராஜ் அது பற்றி விளக்கமாக் கூறினார். அத்தோடு முன்னுரை தன்னுரை என்பவற்றில் டி.பி.எஸ் ஜெயராஜ் படைப்பாளி அதிகப்பிரசங்கித் தனத்தையும் மேதாவித்தனத்தை காட்டாது சொற்சிக்கனத்துடன் படைத்துள்ளார் என்றும் பாண்டித்தியம் நிறைந்த திறனாய்வு கொள்ளும்

இருக்கின்றது என்பதை அவள் செய்கை காட்டி நிற்கின்றது. அத்தோடு ஊரின் அனர்த்தங்களில் இருந்து தப்பிச் செல்ல அந்த இளைஞனின் உதவி அவளுக்குத் தேவையும் படுகின்றது. ஆனால் வண்ணாத்திக்குளத்தின் நாயகி தனது காதலனைக் காக்க அவனைக் கணவன் என்கின்றாள். இதைத்தானே அனேக நாயகிகள் செய்வார்கள்.

முடிக்கும் ஆவல் இருந்தது என்று. என்னுள்ளும் அப்படியான ஓர் உணர்வு எழுந்தது அதற்குக் காரணம் நாம் அறியாத மேட்டுப்பாளையம் திருநெல்வேலி, பாண்டிச்சேரி, கொல்லம் என்று இல்லாமல் கொக்குவில், வவுனியா, மதவாச்சி, பதவியா, கொழும்பு என்று எம்மோடு தொடர்புடைய எம்மைப் பழைய நினைவிற்குள் இழுத்துச் செல்லும் ஊர்களிற்கு கதை சொல்லி எம்மை அழைத்துச் சென்றது தான்.

விமர்சகர் ராஜேந்திரா யாழ்ப்பாணத்துப் பெண்களின் கோழைத் தனத்தையும் பிற்போக்குத் தனத்தையும் கடுமையான விமர்சித்தார். மனதிற்கு வேதனையாக இருந்தாலும் அதுதான் உண்மை என்பதனால் மௌனமாக இருந்து விட்டேன். கலப்புத் திருமணம் வேண்டாம் கடைசி சாதி தராதரம் பார்க்கும் தன்மையையாவது யாழ்ப்பாண மக்கள் விட்டொழிக்க மாட்டார்களா?

# "வண்ணாத்திக்குளம்"- குறுநாவல் விமர்சனக் கூட்டமும் விமர்சனமும்

**- சுமதி ரூபன் -**

அ.கந்தசாமி அவர்கள் 'வண்ணாத்திக்குளம்' பற்றி தனது சிறிய விமர்சனத்தை வழங்கிக்கொண்டிருந்தார். தொடர்ந்து



திரு.ராஜேந்திராயு, டி.பி.எஸ் ஜெயராஜ், காலம் செல்வம், தேன்மொழி ஆகியோர் தமது விமர்சனங்களை வைத்த பின்னர் நடேசன் அவர்கள் நன்றி உரை வழங்கி அதன் பின்னர் வாசகர்களின் விமர்சனங்கள் கேள்வி பதில் என்று நிகழ்வு நிறைவு பெற்றது. இந்நிகழ்வில் எழுத்தாளர் நடேசனின் இன்னுமொரு படைப்பான 'வாழும் சுவடு'களும் விற்பனைக்கு வந்தது. வாசகர்களால் வாங்கப்படும் இவ்விரு படைப்புகளுக்குமாகச் சேரும் பணம் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட எம்மக்களுக்குப் போய் சேரும் என்றும் அறிவிக்கப் பட்டது.

'வண்ணாத்திக்குளம்'குறுநாவல் 80-83ம் ஆண்டுகளில் எமது நாட்டைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. இந்த குறுநாவல் காதலைச் சொல்கிறதா? இல்லை அரசியலைச் சொல்கிறதா? என்று விமர்சகர்கள் கொஞ்சம் தடுமாறினார்கள். எதைச் சொல்ல வருகிறது என்பதை கதை சொல்லி வாசகர்களுக்கு அடையாளப்படுத்தும் தேவை என்ன என்பது எனக்குப் புரியவில்லை. காதலும் அரசியலும் எல்லோர் வாழ்க்கையிலும் பின்னிப் பிணைந்த ஒன்று. முக்கியமாக எமது நாட்டில் அரசியலின் பாதிப்பு என்பது எல்லா மக்களுக்கும் பொதுவாகிப்போய் விட்ட ஒரு விடையம். எனவே எந்தப்படைப்பாயினும் அரசியல் காதல் என்பதிலிருந்து எந்த ஒரு படைப்பாளியும் தப்பிவிட முடியாது.

வண்ணாத்திக்குளம் ஒரு தமிழ் இளைஞனின் ஒரு குறிப்பிட்ட காலத்தைக் குறித்து நிற்கின்றது. கதை சொல்லி கனமான ஒரு கருவை எடுத்து கனமான பல தளங்களை இணைத்து ஒரு கனமற்ற குறுநாவலை வாசகர்களுக்குப் படைத்துள்ளார் என்பது எனது சுருக்கமான விமர்சனம். எந்த ஒரு விடையத்தையும் கதை சொல்லி ஆழமாகப் பார்க்கவில்லை. தனது மனதிற்குள் ஆழமாக வடிவமைத்து விட்டு எழுதும் போது மேலோட்டமாக வடித்துவிட்டாரோ என்ற அச்சம் எனக்குள்.. அதே வேளை தான் மனதுக்குள் வடித்த அந்த ஆழமான கதைவடிவம் வாசகர்கள் படிக்கும் போது அவர்களைச் சேர்ந்து விடும் என்று அவர் கணித்திருக்கவும் கூடும் என்று எண்ணுகின்றேன்.

கதை சொல்லி சேகுவேரா என்று பொதுவாக அழைக்கப்பட்ட ஜே.வீ.பி யினரின் அரசியல் கொள்கையு, நோக்கு என்பவற்றையும் அவர்கள் தமிழ் சிங்கள மக்களால் எப்படிப் பார்க்கப்

வித்தகர்கள் இது இலக்கியமா என்று கேள்வி எழுப்பக் கூடும் என்றும் கூறியுள்ளார். இந்தக் கேள்வி விமர்சகருக்கே ஏற்பட்டதா என்ற சந்தேகம் எனக்கு. மிக மேலோட்டமாக ஆழமான ஒரு கருவைப் படைக்கும் படைப்பாளியை தட்டிக்கொடுப்பதிலும் பார்க்க விமரச்சனங்கள் வைத்து அவரின் எழுத்தை ஆழமாக்க விமர்சகர்கள் உதவ வேண்டும்.

படைப்பாளியான நடேசன் நன்றியுரையின் போது மிகவும் அடக்கமாக நான் பெரிய இலக்கியவாதியல்ல. என்னுடைய பல மறக்கமுடியாத அனுபவங்களை குறிப்பாக எழுதி வைத்து பல ஆண்டுகளின் பின்னர் நேரம் கிடைத்த போது அதனை ஒரு படைப்பாக்கினேன். இது நிறைவான ஒரு படைப்பு என்று நான் கூறவில்லை என்றும் கூறினார்.

இக்குறுநாவலின் நாயகனை படைப்பாளி வாசகர்கள் மனதில் ஒரு நற்குணம் கொண்ட முற்போக்குத் தனமான அறிவாளியாகத் தொடக்கத்திலிருந்தே காண்பித்து விட்டுப் பின்னர் நாயகன் சித்ரா எனும் சிங்களப்பெண்ணைக் கண்டு காதல் வயப்படும் போது அவனை ஒரு பதினாறு வயது இளைஞன் போல் சித்தரித்துள்ளார். வண்ணாத்துப்பூச்சி போல்க் கண் சிமிட்டும் அவள் அழகில் அவன் மயங்கும் போதே தனது மனதையும் அவளிடம் பறிகொடுத்து விடுகின்றான். அ.கந்தசாமி காலம் செல்வம் போன்றோர் தமது விமர்சனத்தில் குறிப்பிட்டது போல் கதையின் நாயகி சித்ரா வெறும் காதல் பதுமையாக வந்து செல்லாமல்யு சித்ரா மேல் நாயகனுக்கு காதல் வருவது அவளின் அறிவுபூர்வமான செயலாலோ பேச்சாலோ என்பது போல் காட்டியிருந்தால் சித்ரா எனும் நங்கை வாசகர்கள் மனதில் ஒரு நல்ல நாயகியாகப் பரிணமித்திருப்பாள்.

இதே வேளை எனக்குள் ஒரு சிறு குழப்பம். நயகனும் சித்ராவும் இருமுறை சந்தித்துக் கொண்ட பின்னர் சேலை வாங்குவதற்கென்று நாயகன் வவுனியா செல்ல முடிவெடுத்து சித்ராவையும் வரும்படி கேட்டுக்கொள்கின்றான். இருவரும் பேருந்தில் சந்தித்துக் கொள்கின்றார்கள். வவுனியாவில் கடைத் தெருவில் பிரச்சனை. இதனால் இருவரும் மீண்டும் பேருந்து நிலையத்திற்கு வந்து காத்திருக்கும் போது சிங்கள ஆமி நாயகனின் மார்பில் துப்பாக்கியை வைத்துக் கேள்வி கேட்கின்றது அவனைக் காக்க எண்ணிய சித்ரா நாயகனைத் தனது கணவன் என்று கூறுகின்றாள். எனது வாசிப்பின் புரிதலில் இருந்து நாயகனும் சித்ராவும் ஒருவருக்கொருவர் வாயால் தமது காதலைக் கூறவில்லையே தவிர இருவரும் காதலிக்கத் தொடங்கி விட்டார்கள். அது இருவருக்குமே தெரிந்த ஒன்று. இந்த அனர்த்தத்தின் பின்னர் இருவருமாக நாயகனின் இடத்திற்கே செல்கின்றார்கள். சித்ராவின் அண்ணன் ருக்மனிடம் தற்செயலாகக் கடைத்தெருவில் சித்ராவைச் சந்தித்ததாக நாயகன் பொய் சொல்கின்றான். ஆனால் விமர்சகர்கள் அனைவரும் சித்ரா நாயகனை கணவன் என்று கூறிய பின்னர் தான் அவர்களுக்குள் காதல் வந்ததாக விமர்சனம் செய்கின்றார்கள். அத்தோடு டி.பி.எஸ் ஜெயராஜ் அவர்கள் 'மிஸ்டர் அண்ட மிஸிஸ் ஐயர்' திரைப்படத்தில் வரும் ஒரு காட்சியை இந்தக் காட்சியுடன் ஒப்பிட்டும் விமர்சித்தார். மிஸ்டர் அண்ட் மிஸிஸ் ஐயரில் ஒரு முஸ்லீம் இளைஞனிடம் தெரியாமல் தண்ணீர் வாங்கிக் குடித்து விட்டேனே என்று முகத்தைச் சுளிக்கும் பிராமணப் பெண் திருமணமானவள். வளர்க்கப்பட்ட முறை வாழ்க்கை முறை எப்படியாயினும் அவளுக்குள்ளும் மனிதநேயம்

மேலும் கலப்புத் திருமணம். சிங்களப்பெண் தமிழ் ஆணைக் காதலிக்கின்றாள். பெரும் புயல் ஒன்று வீசப்போவதாக எண்ணி வாசித்தேன். ஒரு வித சலசலப்பும் இன்றி மிகவும் இலகுவாக இரு குடும்பங்களிடமும் இருந்து பச்சைக் கொடி காட்டி விட்டார்கள். அதிலும் சிங்களக் குடும்பத்தில் மிகமிக எளிதாகக் காட்டி விட்டார்கள். அது கொஞ்சம் கொச்சைத் தனமாக இருந்தது போல் பட்டது. ஒரு தமிழ் இளைஞன் வீட்டிற்கு வருகின்றான். சில காலத்தின் பின்னர் மகளைப் பெண் கேட்கின்றான். பெண்ணின் தாயார் சிறிது வெட்கம் கூடப்படுகின்றார். அவன் ஒரு தமிழ் இளைஞன். அவன் குடும்பம்யு உறவுகள் எப்படியானவை. மகள் எதிர்காலத்தில் எப்படியான சிக்கல்களைச் சந்திக்கப் போகின்றாள் என்ற எந்த வித எண்ணமும் இன்றி பல்கலைக்கழகத்தில் படித்த நல்ல வேலையில் இருக்கும் இளைஞனைக் காதலிக்கும் யாழ்ப்பாணத்துத் தமிழ் பெண்களை 'மாப்பிள்ளை பிடித்து விட்டாள்' என்ற பதத்தில் விமர்சிப்பது போல்தான் இதிலும் நல்ல படித்த இளைஞன் என்பதால் எந்த சங்கோஜமுமின்றி பெண்ணின் பெற்றோர் சம்மதம் கூறியது எனக்குச் சங்கோஜமாக இருந்தது. அடுத்து நாயகனின் குடும்பம். மகன் காதலிப்பது சிங்களப்பெண் என்று தெரிந்த போது தந்தையின் சில விதண்டாவாத விமர்சனத்தோடு அங்கும் பிரச்சனை முடிகின்றது. காதல் அரசியல் என்று எழுத்து சென்று கொண்டிருக்கும் போது மனதில் நிற்கும் மனதைத் தாக்கும் சம்பவங்கள் வரப்போகின்றது என்ற எதிர்பார்ப்பை எனக்குள் பல முறை எழுப்பிப் பின்னர் ஒன்றுமே இல்லாது போய் விட்டது எனக்குள் பலத்த ஏமாற்றத்தைத் தந்தது.

படைப்பாளி இந்த எழுத்து முறையைத் தான் படைப்பு முழுவதிலும் கொண்டு செல்கின்றார். மனித வாழ்க்கை அனர்த்தங்களால் அடிபட்டுப் போய்க் கொண்டிருக்கும் வேளையில் ஒவ்வொரு சிறிய நகர்வும் வாசகர்களை எந்த விதப் பாதிப்பிற்குள்ளும் கொண்டு செல்லாமல் நழுவி நழுவிச் சென்று கொண்டிருக்கின்றது. அனைத்துச் சம்பவங்களையும் ஒரு தகவல் தரும் வடிவில் இங்கே ஆமி அடித்தது அங்கே பெடியங்கள் தாக்கினாங்கள் என்பதாயும் விமர்சகர் காலம் செல்வம் குறிப்பட்டிருந்தது போல் புதிதாக ஒரு இடத்திற்கு நாயகன் செல்லும் போது அந்த இடத்திற்கு வாசகர்களையும் அழைத்துச் செல்லக் கதை சொல்லி தவறிவிட்டார். இருந்தும் அரசியல் பிரச்சாரம் செய்யும் பல சந்தர்ப்பங்கள் கதை சொல்லிக்குக் கிடைத்திருந்தும் அதனைச் செய்யாதது வாசகர்களிற்கு படைப்பாளி மேல் ஒரு மதிப்பைக் கொண்டுவந்திருக்கும்.

இப்படைப்பில் வரும் தலைமுடி வெட்டும் ஆறுமுகம் எனும் பாத்திரத்தினூடாக பலரின் அரசியல் பார்வைகளை படைப்பாளி கொண்டு போல் சுந்தரம் ருக்மன் காமினி போன்றவர்களையும் ஏனோ வீணடித்து விட்டார்.

இனக்கலவரங்கள்யு மாறுபட்ட அரசியல் கொள்கை கலப்புத் திருமணம் போன்ற காத்திரமான தளங்களையும் தனது சொந்த அனுபவங்களான மிருகப்பரிசோதனை போன்றவற்றையும் இன்னும் கொஞ்சம் சிரத்தை எடுத்து படைப்பாக்கியிருந்தால் அண்மையில் பலராலும் பாராட்டப்பட்ட 'புலிநகற்கொன்றை' போன்ற ஒரு காத்திரமான முழு நாவலை நடேசன் அவர்களால் கொடுத்திருக்க முடியும்.

விமர்சகர்கள் அனைவராலும் ஒட்டு மொத்தமாகத் தரப்பட்ட ஒரு விமர்சனம் இப்படைப்பில் பல குறைகள் இருப்பினும் வாசகர்களுக்கு படிக்கும் போது சோர்வைத் தரவில்லை.. படித்து

## தெரிந்துகொள்வோம்

### அரை முழுசா தெரியணுமா?

மழை காலம் என்றால் வானில் மின்னல், இடி இவைகளை பார்க்கலாம். வானத்திற்கு மூடு வந்துவிட்டால் அது சிறு குழந்தை போல் ஏழு வண்ணங்களால் வில் வரையும்.

அது தான் எத்தனை அழகு! அதன் பெயர் வானவில்! ஒரு வானவில்லை பூமியிலிருந்து பார்ப்பதற்கும், ஆகாய விமானத்திலிருந்து பார்ப்பதற்கும் என்ன வித்தியாசம்?

பூமியிலிருந்து பார்க்கும் போது அரைவட்ட வடிவத்தில் தெரிகிற வண்ணமயமான வானவில், விமானத்திலிருந்து பார்த்தால் முழு வட்டமாய் தெரியும்.

பூமியிலிருந்து வானவில்லை பார்ப்பது அபூர்வமாக இருக்கிறது. அது பூமியில் வரும் போது அதை முழுமையாக பார்க்க உடனே விமானம் ஏற வேண்டும். ஏறி மேலே போவதற்குள் வான தேவதை கோலத்தை கொண்டு போய்விட்டால்...!

### கண்ணாடி தயாராவது எப்படி?

கண்ணாடி சுத்தமான மணலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. 900 டிகிரி சென்டிகிரேட் வெப்பத்தில், சிறிது போரான் உதவியால், மண் உருகி குழம்பாகிறது. வேண்டிய உருவத்தில் வார்த்து குளிர வைத்தால் கண்ணாடி கிடைக்கிறது.

கண்ணாடி உண்மையில் திடமற்ற திரவமில்லாத பொருள். மேல் பரப்புதான் படிகமாக இருக்கிறது. இதன் மீது கீறல் போட்டால் கண்ணாடி எளிதில் உடைந்துவிடும்.

எரிமலை குழம்பின் சூட்டினால், இயற்கையாகவே நிலத்தில் கண்ணாடி கற்கள் தோன்றும். இவற்றை உடைத்து ஆதிகால மனிதர்கள் அம்பு முனைகளை செய்து கொண்டனர்.

லேசா கண்ணாடின்னு நினைச்சா, எவ்வளவு கனமான வி'யங்கள் இதிலிருக்கு இல்ல!

### பானை பானை!

வெயில் நாளில் ஓர் ஆலமரத்தின் இலைகள் நூறு பானை தண்ணீரை தருகின்றன.

அப்படியா, நான் ஆலமரத்தின் கீழ் நின்றபோது ஒரு சொட்டு தண்ணீர் கூட கொட்டவில்லையே என்றோ இதோ தண்ணீர் பிடிக்க குடத்துடன் கிளம்பிட்டேன் என்றோ கூறக் கூடாது. ஏனெனில், நீர் சொட்டாது என்பது உண்மைதான்.

ஆனால், ஆலமர இலைகள் அளிக்கும் நீர்த் துளிகள் கண்ணுக்கு தெரியாமல் காற்றில் கலந்துவிடுகின்றன. ஆலமரத்தின் கீழ் நின்றாலும் நீங்கள் இதை பார்க்க முடியாது. ஆனால், குளுமையை உணர்ந்து இருப்பீர்களே!

ஒரு காட்டில் எத்தனையோ மரங்கள் இருக்கின்றன. அவை நீரை வெளிவிடுகின்றன. அந்த நீர் உயரே... உயரே... போகிறது. மேலே போய் வேகமாய் மாறுகிறது. அதற்கப்புறம் மழை தான்!

மரங்கள் நம் உலகை அழ காக்குகின்றன. அது மட்டுமல்ல, மரங்களின் வேர்கள் மண்ணை நன்கு பற்றி கொள்கின்றன.

இதனால் மண் சரியாமல் காக்கப்படுகிறது. ஆமாம், மரங்கள் மழை தருவதோடு, மண் சரிவு ஏற்படாமலும் தடுக்கிறது.

அதனால் தான் நம் மூதாதையர் மரங்களையும், செடி கொடிகளையும் போற்றி பாடினர்.

மரத்தை வெட்டுவது நிலத்தை காலி செய்யும் நிகழ் காலத்தில்...!மனித இனத்தை சீக்கிரம் காலி செய்யும் எதிர்காலத்தில்...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவல்



(சென்ற வாரத் தொடர்ச்சி)

## 27

# லங்கா ராணி- அருளர்

குமார் மெதுவாக அவனைத் தொடர்ந்து கதையைக் கேட்கும் நோக்குடன் “பிறகு”

“கப்பலைச் சென்னைக்குக் கொண்டு போய்ச் சேர்ப்போம். உலகமே நடுநடுங்கும் எங்கள் பிரச்சினையை உலகத்திற்குத் தெரியவைக்க வேண்டுமானால் இதனைக் கட்டாயம் செய்தாக வேண்டும்.”

“வேட்டியுடன் இருந்த இளைஞன் கேட்டான். “சென்னையில் என்ன நடக்கும்?

சரவணன் இதுபற்றி முன்பு சிந்திக்காதவன் போல சற்று நிறுத்திவிட்டுச் சொன்னான்.

“கலைஞர் இருக்கிறார்.”

“இருந்தால்!”

“கதைக்க வரும்படி அழைப்போம். சென்னையில் அகதிகள் தங்குவதற்கு வசதி செய்து தரும்படி கூறுவோம். பங்காள தேசம்போல் நடக்கும்.”

“அங்கு போய்ச் சேர எத்தனை நாள் எடுக்கும் என்று நினைக்கிறாய்?” வேட்டியுடன் இருந்த இளைஞன் கேட்டான்.

“ஒரு சில மணித்தியாலங்கள்”

“அது இந்தியக் கரைக்கு. நான் கேட்டது சென்னைக்கு”

இதுபற்றி சரவணன் எதிர்பார்த்திராதவன் போல் ஒரு கேள்வியாகவே சொன்னான்.

“ஒருநாள்?”

“கொழும்பிலிருந்து வர இரண்டு நாட்கள், இதற்கு ஒரு நாளிலும் கூடுதலாகப் பிடிக்கும்.”

“சாப்பாடு!” குமார் குறுக்கிட்டான் “மாமூட்டைகள் தான் மிச்சம் இருக்கிறது, மற்றதெல்லாவற்றையும் முடிக்கச் சொல்லிவிட்டேன்.

“ரொட்டி போட்டுக் கொள்ளலாம்” சரவணன் சமாளித்தான்.

“தவறுகள் எங்கு நடக்கும்?” வேட்டியுடன் இருந்த இளைஞன் சரவணனிடம் கேட்டான். அவன் பதில் எதுவும் கூற முன்வரவில்லை. இளைஞன் தொடர்ந்தான்.

“முதலில் துவக்குகளை எங்களுக்குத் தராவிட்டால் நாங்கள் பலாத்காரமாக அவற்றை எடுக்க வேண்டி ஏற்படும். கீழ்த்தளங்களில் உள்ளவர்களில் இதில் விருப்பம் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் எங்களுக்கு எதிராகச் செயல்பட முன்வந்தால் எல்லாம் விபரீதமாகவே முடியும். சரி, அதுதான் பிரச்சினைகள் இல்லாமல் முடிந்து விட்டதென்று வைத்துக் கொண்டாலும், கப்பல் சிப்பந்திகள் தங்கள் தற்பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கிகள் தரவேண்டுமென்று கேட்டார்கள் என்று ஒரு வதந்தி. ஒருவேளை அவற்றை இவர்கள் பெற்றிருக்கலாம் இதிலும் பல சங்கடங்கள் வரலாம் . கப்பலைச் செலுத்துவதிலும் சிரமங்கள் ஏற்படலாம் . அடுத்து எங்களுக்கு கடலைப்பற்றி அதிகம்



தெரியாது. கடற்படையினர் வழிகாட்ட காலையில் வருகிறார்கள். அவர்கள் எங்களுக்கு உதவ முன்வராமல் விடலாம். வடக்குக் கடல் கற்பாறைகள் நிறைந்தது. கப்பல் பாறைகளில் மோதினாலும் மோதும்”.

சரவணன் குறுக்கிட்டான். “ஒருவனை முடித்துக் கடலில் வீசிவிட்டு மற்றவனையும் கடலில் எறியப்போகிறோம் என்றவுடன் எங்களுக்கு வழிகாட்டுவார்கள்.”

“சரி, அடுத்ததாக நாங்கள் சந்திக்கவிருப்பது இந்தியக் கடற்படையினர்.”

“தமிழக மீனவர்களும் வருவார்கள். கடற்படையினர் எங்களுக்கு வழிகாட்டுவார்கள்.”

“என்று நீ நினைத்தக் கொண்டிருக்கிறாய்”?

“என்ன செய்வார்கள்”

“ஹெலிகாப்டர்களில் வந்து கப்பலில் இறங்க முயற்சிக்கலாம்.”

“சுடுவோம்.”

“அவர்களிடம் இயந்திரத் துப்பாக்கிகளிருக்கின்றன. சுட்டுக்கொண்டே கப்பலில் இறங்கப் பார்ப்பார்கள். உன்னால் எவ்வளவு நேரம் சுட முடியும். இந்தியக் கடற்படையினரோடா போர் தொடுக்கப் போகிறாய்?”

“கப்பலில் இறங்கினால் கப்பலை வெடி வைத்துத் தகர்த்து விடுவோம் என்று கூறுவோம்! அவ்வளவு தூரம் பாதகமான முறையில் எங்களுக்கு எதிராக செயல்படமாட்டார்கள். இந்தியாவில் நாலரைக் கோடி தமிழர்கள் இருக்கிறார்கள். கலைஞர் இருக்கிறார். கிளர்ச்சி செய்யக்கூடும் என்று பயப்படுவார்கள்.”

“இதைச் சாட்டாக வைத்துக்கொண்டு தமிழ்நாட்டில் இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவார்கள்?

“எம்.ஜி.ஆர். ஆட்சிக்கெதிராக அப்படிச் செய்ய மாட்டார்கள்.”

“எம்.ஜி.ஆரும் தி.மு.க விலிருந்தவர்தான். அ.தி.மு.விலி இருப்பவர்களும் தி.மு.க விலிருந்தவர்கள் தான். அவர்களிலும் எங்களுக்கு அனுதாபம் தெரிவிப்பவர்கள் ஏராளம் பேர் இருக்கின்றனர். தி.மு.க கலைக்கப்பட்டு தமிழ்நாட்டில் அடக்குமறை கட்டவிழ்த்து விடப்பட்டதற்கு நம்மவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த தனிநாட்டுக் கோரிக்கையும் ஒரு காரணம். எதற்கும் சரவணன் கேள்! இன்றும் தமிழ்நாட்டில் திராவிட இயக்கங்களின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு எத்தனையோ சக்திகள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அடிமட்டத்தில் இருக்கும் தமிழர்களை ஒரு சிறு அளவிலாவது தட்டியெழுப்ப வெளிக்கிட்டிருக்கும் இந்தத் திராவிடர் இயக்கங்களுக்கு எதிராகவே இத்தனை சூழ்ச்சிகள் என்றால் ஒரு முழுமையான தமிழனுடைய எழுச்சிக்கு எதிராக இந்தச் சக்திகள் எவ்வளவு பயங்கரமாகச் செயற்படும் என்பதை நீ சற்று எண்ணிப்பார். நாம் எந்தவிதமான ஒரு அனுதாபத்தையும் இந்திய அரசிடம் இருந்து எதிர்பார்க்கக்கூடாது. தமிழ் மக்களுடைய இதயங்கள் எங்களுக்காகக் குமுறிக் கொண்டிருக்கலாம். அது அவ்வளவுதான். அதற்கு மேல் எதையும் எதிர்பார்க்க இயலாது.

“கலைஞர் மாபெரும் ஊர்வலம் நடாத்தினார். ஆதனால் தான் கலவரம் நின்றது.”

“அது ஒரு காரணமாக இருக்கலாம். நான் இல்லை என்று சொல்லவில்லை. அதற்குமேல் எதுவும் கலைஞரால் செய்யமுடியாது இதற்குமேல் அவர்களிடமிருந்து எதையும் எதிர்பார்த்து நாங்கள் செயற்பட்டு, அவர்களுடைய இக்கட்டான நிலையையும், இயலாமையும் உலகத்திற்குத் தெரியப்படுத்தி எங்களுடைய எதிரிகளை எள்ளி நகையாட வைப்பதில் என்ன பயன்? தமிழ் நாட்டில் இருக்கும் அனுதாபமும் இல்லாமல் போய்விடும். அங்கு கொந்தளிப்புகளை ஏற்படுத்தித் தமிழ்நாட்டு காவல் துறையினருக்கு வீண் பிரச்சினைகளை ஏற்படுத்தி எங்கள் மீது அவர்களுக்கு வெறுப்பை ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. அவர்கள் கண்ணியமாக கடமையைச் செய்யத் தெரிந்தவர்கள். எங்களுக்கு உதவக் கூடியவர்கள் தமிழ் நாட்டில் யாருமில்லை என்று நான் கூறவில்லை. ஒரு சிலர் இருக்கிறார்கள். அவர்களையும் எவ்விதபயனும் இல்லாதவர்களாக

( 22 பக்கம் பார்க்கவும் )




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 21 பக்கத் தொடர்ச்சி )லங்காராணி ஆக்குவதாகத்தான் இந்த ஏற்பாடு முடியும். அதுபோக எங்களைச் சென்னைத் துறைமுகத்தினுள்ளே நுழைய விடுவார்களோ தெரியாது. சென்னைத் துறைமுகம் மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது.

"விடாவிட்டால் திரும்பி வருவோம். உலகம் எல்லாவற்றையும் அறிந்து விட்டிருக்கும்.

"எத்தனை நாட்களுக்கு பின்? திரும்பி யாழ்ப்பாணம் வந்து சேர நான்கு நாட்களாகப் போய்விடும். எல்லோரும் பட்டினிதான் கிடக்க வேண்டும். சரவணன்! உலகிற்கு எங்கள் பிரச்சினைகளை இவ்வாறான பயங்கரவாதங்களால் தான் எடுத்துக் காட்ட வேண்டுமென்று நினைத்துக் கொள்ளக் கூடாது ஒரு சிலர் அப்படிச் செய்கிறார்கள் தான். அவர்களுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கிறது. பத்திரிகைகளிலும் வருகிறது. ஆனால் விளம்பரம் வேறு. நமக்குத் தேவையான அனுதாபமும் ஆதரவும் வேறு இதற்கு நாங்கள் தொடர்ந்து உழைக்க வேண்டும். நீதியையும் நியாயத்தையும் மூடிமறைக்கும் சக்திகளே இன்று முன்னின்று செயற்பட்டுக் கொண்டிருந்தாலும் நாளடைவில் எங்கள் நிலை உலகெங்கும் அறிவுறுத்தப்பட்டு விடும்.

பங்களாதேசத்தில் நடைபெற்றது வேறு விடயம். பாகிஸ்தான் எப்பொழுதும் இந்தியாவின் எதிரியாகவே இருந்தது. அதனால் அகதிகள் வந்து நிறையுமட்டும் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பங்களாதேசம் பங்களாதேசம் என்கிறாயே அங்கு என்னதான் நடந்துபோய்விட்டது. ராணுவ சர்வாதிகாரம் ஏற்பட்டிருக்கிறது. சுரண்டல்வாதிகள் தங்கள் வேலையைத் தொடர்கிறார்கள். பசிபட்டினி வறுமை தொடர்கிறது. நாடு விடுதலை அடைந்துள்ளது போல உனக்குத் தோன்றலாம். மக்கள் விடுதலை அடைந்துள்ளார்களா? இல்லவே இல்லை. மக்கள் விடுதலை அடையாத நாட்டு விடுதலை எதற்கு?

அதுபோக இங்கு நிலைமை வேறு. இலங்கையில் தனியான தமிழருடைய நாடு இந்தியாவின் ஒற்றுமைக்கு முடிவு கட்டும் என்று வாதிடுபவர்கள் ஏராளம். அல்லற்படுகின்ற தமிழரின் முதுகில் ஏறி நின்று கொண்டு தங்கள் கொடிகளை இங்கு பறக்கவிடலாம் என நினைப்பவர்கள் எத்தனையோ பேர். எங்களை அப்படியே கப்பலில் திரும்பிக் கொண்டுவந்து கொழும்பில் விட்டாலும் விட்டுவிடுவார்கள். எங்களுக்கு உதவி செய்பவர்கள் நீதியையும் தர்மத்தையும் உலகின் எந்தப் பகுதியிலும் நிலை நாட்டுவதற்குத் தேவையான மனோபலமும், சக்தியும் உடையவர்களாக இருக்கவேண்டும். அவர்களைத்தான் நாம் அணுகிச் செயல்பட வேண்டும். வெறும் ஆட்களின் எண்ணிக்கையை நம்பி செயல்பட வேண்டும். வெறும் ஆட்களின் எண்ணிக்கையை நம்பி நாம் செயற்பட முடியாது வேட்டியுடன் இருந்த இளைஞன் தனது பேச்சைச் சற்று நிறுத்திவிட்டு மறுபடியும் தொடர்ந்தான்.

"எங்களுடன் இருப்பவர்கள் ஒன்று இரண்டு பேரல்ல. ஆயிரத்து இருநூறு பேர். ஆயிரத்து இருநூறு உயிர்கள். எவ்வளவோ இன்னல்களுக்குப் பின்னர் வீட்டை அடைவதற்குத் துடித்துக் கொண்டிருப்பார்கள். அவர்களுடைய மனநிலைகளை நாங்கள் மறந்துபோகப்படாது. இந்த அல்லலுற்ற இதயங்களைக் கடலில் அலைக்கழித்து பரிதவிக்க விட்டுத்தான் எங்கள் பிரச்சினைகளைத் தெரியப்படுத்த வேண்டும் என்றால் அந்த உலகத்திற்குத் தெரியப்படுத்தவேண்டியதில்லை. அவ்வளவு தூரம் மடமையான உலகில் இருப்பதிலும் பார்க்க கப்பலைப் பாறையில் மோதிக் கடலில் அமிழ்த்தி நாங்களும் சேர்ந்து இறந்துமடிந்து போய் விடலாம். ஆனால் நீ நினைப்பது போல் அவ்வளவு தூரம் உலகம் பாழடைந்து போய்க் கிடக்கவில்லை."

சரவணனுக்குப் பொறுக்கமுடியவில்லை. "தனிநாடு வேண்டுமென்றால் எல்லோரும் தியாகம் செய்யவேண்டும். எங்கள் பிரச்சினையை உலகிற்குத் தெரியப்படுத்துவதற்கு இதைப்போல சந்தர்ப்பம் இலகுவில் வராது".

"தனிநாடு வேண்டும்தான். ஆனால் தியாகங்கள் செய்ய எல்லோரும் தயாராக இல்லை. அதற்கான ஒற்றுமை இல்லை. காலையில் சமையல் அறையில் பாண்வெட்டிக் கொண்டிருந்த பையன் ஒருவன் எதையோ எடுத்துச் சாப்பிட்டுவிட்டான் என்பதற்காக ஒருவர்"எங்களுக்குத் தராமல் தின்று முடிக்கிறார்கள்" என்று ஒரு கலாட்டாவையே உருவாக்கி விட்டாராம். நல்ல காலமாக குமார் அங்கு நின்றதால் அவரை ஒருவாறு சமாதானம் செய்து அனுப்பி விட்டாராம். நீங்கள் என்னதான் தியாகம் செய்தாலும் ஆளை விட்டால் போதும் என்று கூறுபவர்கள் ஏராளம். தனிநாட்டுப் போராட்டம் அவ்வளவு சுலபமானதல்ல. ஒரு கிழமையில் திரும்பப் போகிறவர்களும் இருக்கிறார்கள். கப்பலால் இறங்கி நேராகப் படத்துக்கப் போகிறவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இன்னும் ஏராளமானவர்கள் தென்பகுதியிலே இருக்கின்றனர்.

சரவணனன் குறிக்கிட்டான். "ஒரு மாதத்திற்கு ஒரு சிங்களப் பொலிசைச் சுட ஒரு இனக்கலவரம் வரும். இப்படியே எல்லோரையும் வரவைத்தால் தனிநாடுதானாக வரும்.'

"அது நல்ல திட்டம் தான். ஆனால் தனிநாட்டில் இருப்பதற்குதான் யாரும் இருக்கமாட்டார்கள். எல்லோரும் ஓடிவிடுவார்கள். சரவணனன் நான் சொல்வதைக்கேள். வெறும் வன்செயல் எதையும் தராது எல்லாவற்றையும அழித்தொழிப்பதாகத்தான் முடியும். பொலிசாருடனும் இராணுவத்தினருடனும் மோதப்படாது அவர்கள் வெறும் கருவிகள். வெறும் போலிப்புகழ்ச்சியால் உந்தப்பட்டுச் செல்வர்கள். அவர்களுடைய துர்ப்பாக்கியம் எப்பொழுதும் தீயசக்திகளின் எடுபிடிகளாகச் செயல்பட வேண்டிய நிலை. நாங்கள் கண்மூடித்தமாக அவர்களைத் தாக்கினால் அவர்கள் பிரிக்கமுடியாதவாறு தீயசக்திகளுடன் ஒன்றிப்போய்விடுவார்கள். இவர்களுடைய கண்கள் மூடிக்கிடக்கின்றன. இவர்களை அப்படியே வைத்துக்கொண்டு கண்களைத் திறந்துவிடவேண்டும். அதுதான் கெட்டித்தனம்.

'இவர்கள் என்ன எதிரிகள் அல்ல? இவர்கள்தான் இந்தக் கலவரத்தைத் தொடங்கி இத்தனைக்கும் பொறுப்பானவர்கள். இவர்களுடைய சேவையே எங்களுக்குத் தேவையில்லை. ஒழுங்கையும் சட்டத்தையும் பாதுகாப்பையும் நாங்கள் பார்த்துக்கொள்வோம். முதலில் இவர்கள் வெளியேற வேண்டும்."

**"ஒரு மாதத்திற்கு ஒரு சிங்களப் பொலிசைச் சுட ஒரு இனக்கலவரம் வரும். இப்படியே எல்லோரையும் வரவைத்தால் தனிநாடுதானாக வரும்"**

"அது வேறு விடயம். ஆனால் இருக்குமட்டும் அவர்களை தங்கள் கடமையைச்




செய்யவே அங்கு இருக்கிறார்கள். அவர்களுடன் மிகவும் கவனமாகப் பழகிக் கொள்ள வேண்டும்."

"இவர்கள் கடமையைச் செய்யத் தவறிவிட்டார்கள். இருக்கவே விடப்படாது அனுப்பிவிட வேண்டும்.'

"அவர்கள் கடமையைச் செய்யத் தவறினால் அதற்கு விசாரணைகள் வரும். தண்டனைகள் கொடுக்கப்படவேண்டும். அப்படி எதுவும் நடைபெறா விட்டால் பார்த்துக்கொள்வோம்."

"அவைகள் எதுவும் நடக்காது'

"சரவணன் கேள்! நாங்கள் கண்மூடித்தனமாக அவர்களை எங்கள் எதிரிகளாக ஆக்கப்படாது. எதற்கும் முதலில் மக்கள் தயாராக இருக்கவேண்டும். அவர்களுக்கு என்ன நடக்கிறது என்பது தெரியவேண்டும். இது இலகுவான காரியமல்ல.

"இதற்குமேல் என்ன தெரிய வைப்பது?"

"எதுவுமே அவர்களுக்கு விளங்கவில்லை. யாரோ தனிநாடு கேட்டார்கள். யாரோ அடித்தார்கள். கொள்ளையடித்தார்கள். துரத்தினார்கள் என்று பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு வருகிறார்கள் அவ்வளவுதான், எங்கு இருக்கிறோம், எங்கு போகவேண்டும். எப்படிப்போகவேண்டுமென்பது பற்றி அவர்களுக்கு முதலில் நன்கு தெரியப்படுத்தவேண்டும். திட்டமிட்ட பரந்த பொருளாதாரமும் முன்னேற்றமடைந்த விஞ்ஞானமும் கலாச்சாரமும் கொண்ட புதிய தமிழனுடைய சமுதாயத்தை ஒரு சரவணனுடைய சுழல் துப்பாக்கியால் நிறுவி விடலாம் என்ற நினைக்கிறாய். ஒரு போதும் முடியாது. தமிழனைத் தட்டியெழுப்பி அவனுடைய ஆற்றலை அவனுக்குத் தெரியப்படுத்துவது அவ்வளவு கலபமான காரியமல்ல. உனது தியாக மனப்பான்மை உனது உணர்ச்சியால் சீரழிந்து போகக்கூடாது எதற்கும் நீ முதலில் பண்ணைக்கு வா!"

சரவணன் மௌனமடைந்து போனான். வேட்டியுடன் இருந்த இளைஞன் குமாரைப் பார்த்து 'எத்தனை மணி" என வினவினான்.

"மூன்று மணி"

"கொஞ்சம் தூங்குவோம்"

இந்த இடத்திலேயே தூங்குவோம் என்றான் குமார். குமார் நின்றுகொண்டே தூங்கப் பழகியவன்.

"தேவையில்லை எதற்கும் கீழே இறங்கி மற்றவர்களுடன் சேர்ந்து தூங்கிவிட்டு காலையில் ஒன்றாக எழுந்திருப்போம் என்றபடி இறங்கிக் கீழ் தளத்திற்குச் சென்றனர். நடுவில் சற்று உயரமாக இருந்த மேடையில் துப்பரவு செய்துவிட்டுப் படுத்துக்கொண்டனர்.

தொடர்ச்சி அடுத்தவாரம்...

PARTSOURCE
The Parts. The Pros. The Price.

PARTSOURCE

[redacted] அனைத்துவிதமான
[redacted] பாகங்களின் தேவைகளுக்கும்.....
[redacted] நிர்வாகத்தில்...
[redacted]P Kumar
[redacted]6-751-2229
Tel: 416.751.2229
Fax: 416.751.7758
(MIDLAND & LAWRENCE)
2650 Lawrence Avenue E, Scarborough, ON. M1P 2S1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை

# சுனாமி

## எஸ்.ஸங்கரநாராயணன்

இந்தக் கதைக்கு கடைசி வரி இல்லை.

சுற்றிலும் மனுசாள் அங்கங்க கெடக்காங்க. என்னா ஜனமடியம்மா. எப்பிடியெப்பிடியோ உடம்பு துவண்டு திருகி என்ன கோலம் இது. என்னால எழுந்துக்கிட ஏலவில்லை. என்னாச்சி தெரியாது. என் உடம்புல தெம்பே கிடையாது. மூளையே மரத்துட்டது போல. எழும்ப நெனைச்சாலே சுத்தியடிக்குது உள்ள. நடுக்கம். ஒரே நாத்தக்காடு. என்ன இப்பிடின்னு யோசிக்கக்கூட கூடலியே. தாக்குப்பிடிச்சி எப்பிடியும் நான் எழுந்துக்கிடணும். இது எந்த இடம் தெரியல்ல. திடுதிப்புனு திரும்பவும் ஒரு அதிர்ச்சி என்னைக் கீழ விழுத்தாட்டுது. அத்தனைக்கு, முன்னைப்போல இல்லை இது.

ஆமாமா... நான் வீட்டுக்கு வெளியால படுத்திருந்தேன். அப்ப இப்பிடித்தான் ஆட்டிச்சி. ஒரு உருட்டு, நம்மளை வெச்சி யாரோ பகடையாடறாப்ல. சர்ர்னு அந்தப் பக்கம் போனதே தெரியாது. திரும்ப சிறு உருளல் பின்பக்கமா. அட நான் மட்டுமா? கூட சுத்திவர எல்லாமே ஆடுதடி. மனுசமக்கள் புல்பூண்டு உயிர்-உள்ளது அத்தது... எல்லாத்துக்கும் ஒரே சமயம் சாமி வந்தாப்ல. என் மேல யப்பாடி எங்கூட்டு மரம், சரசரன்னு முறியிற... செத்தம்டா சாமி - ஒரு அடையாளந் தெரியாத அலறல் அலறி... ஆனா யய்யா அதாண்டி அதிர்ட்டன்றது. அந்த மரம் சர்ரியா எம்மேல மார் குறுக்கால... மரத்திண்டின் அடியால நான்.

எங்கூடு ஒத்தச் செங்கல். ரயில் உருட்டல் போல அதை யாரோ பெரிய சொளகுல சலிக்காப்ல. அதைப் பாத்திட்டே இருந்தேன். ஓரளவு வெளிச்சம் வந்த நேரந்தான. மரம் என்ன, சொவரே சரசரன்னு சரியுது. பொத்து பொத்துனு விழுது. ஆட்டல் நிக்கவேயில்ல. மூச்சு இரைக்க திகிலோட பாக்கேன். தோள்பட்டைல ஒரு செங்கல் குத்து விழுது. என்னென்னவோ சத்தம். யானை மளக்னு முறிச்சி முழுங்கறாப்ல. பொல பொலன்னு செங்கப்பொடி. கண்ணுவூரா தூசி. வலிக்கு அலறவும் கூடல்ல... கண்ணு திறக்க வரல்ல. எரிஞ்சி கொளுத்துது... உடம்புல எங்க எங்கியோ விழுது கல்லுகள். எம்மேல. பக்கத்ல. ஆமா. மரம் மட்டும் இல்லாட்டி என் கதி அதோகதிதான். மொதல்ல மரம் விழுந்து பின்ன கட்டடம் நொறுங்கின அளவுக்கு நான் தப்சேன். எய்யா நான் பொழச்சிக்கிட்டேன். மருதை வீரன் துணை.

இதான் பூகம்பம். லேசா ஆட்டிச்சி. ஆட்ன ஜோர்ல முழிப்பு வந்து பதறி எழுங்குள்ளாற கதையே முடிஞ்சாச்சி. நான் பிழைச்சிட்டேன், நான் பிழைச்சிட்டேன்னு ஒரு பெருங்குரல் உள்ள... அது சட்னு அடங்கிச்சி. ஆமா, எம் மவள், பிள்ளைங்க... உள்ள என்ன ஆனாங்க. பெரியவன் சிவாஜி. ரெண்டாப்பு. விரல் சூப்புவான் இன்னமும். அதுக்குள்ள கைப்பிள்ளை வேற. பெரியாளுக தப்ச்சிட்டதா கணக்கு வெச்சிக்கிட்டாலுங் கூட மீனாச்சி - அதுங் கதி என்ன. -ந்தா நீ இப்பதான் சூதானமா இருக்கணும்டியம்மோவ்.

கடலுக்குப் பக்கமான இடந்தான். புஸ்சு புஸ்னு பெருஞ்சத்தம். எத்தனை நேரம் நான் கிடந்தேன். இப்ப எப்பிடி முழிப்பு கண்டது தெர்ல. கடல் சத்தம் யாரோ கேலியடிச்சச் சிரிக்காப்ல. மயக்கம் தெளசிஞ்சிட்டது. ஓரளவு நான் அத்தனைக்கு சிக்காதது பெரிய விசயந்தான். ஒரு ஆவேச எதிர்ப்புணர்ச்சி. நடந்தது நடந்தாயிட்டது. மகமாயி தாயி அதெல்லாம் அவ பாத்துக்குவா. எம் மகள் மக்களையும் அவ வசம் ஒப்படைக்கிறேன். தாயி. தயை செய். காப்பாத்து. குடும்பத்தோட மொட்டை குடுக்கறேன்.

எங்கியோ அழுகைக்குரல். ஆகா மனுசாள் மிச்சம் இருக்காங்க. அழுறதுக்கும் உசிர் வேண்டியிருக்கு. அவங்களை என்னால பாக்க முடியாது. நானே சிக்கிக்கிட்டு கெடக்கேன். அது ஆம்பளையா பொம்பளையான்னே தெரியாத ஒரு அழுகை. பயப்படடாது. பயந்தான் மனுசனின் முதல் சத்ரு. நானே கொஞ்சம் பயந்தாளுதான். ஆனா இப்ப எங்கருந்து இப்பிடியொரு தெம்பு வந்ததோ எனக்கே தெரியல்ல. அதெல்லாம் பொழச்சிக்குவேடி நீ. உன் மனுச மக்களை கண்ணால நீ பாக்கத்தான் போற. அந்தக் குரலுக்கு பதில்போல எங்கியோ ஒரு முனகல். அங்கங்க ஆளுக கெடக்காங்க போல. மச்சான் மயினிகளா பொறுமையா நிதானமா இருங்க. எப்பிடியும் மத்தாளுங்க வருவாங்க. நம்மத் துக்கி விடுவாங்க.
நம்ம வீட்டுப் பக்கம் சத்தத்தையே காணம், திடுக்குனுது. மகா...ன்னு பல்லைக் கடிச்சேன். டியேய் நீ அழப்டாது. பிறத்தியாளைச் சொல்லிட்டு நீயே அழுதா பைத்தாரத்தனம். அந்த மருத வீரனை நம்பறியா நீ?... நம்புறேன் நம்புறேன் நம்புறேன்-னு அடிச்சிக்கிட்டது மனசு. மகமாயி துணை. அவ பாத்துக்குவா எல்லாத்தையும்.

இப்பவே பாத்திட்டுதான் இருக்கா. மத்தாளுகள் தப்பிச்சிருப்பாங்கட்டி.

என்னா ஒரு இது, வெளிய வரன்னு நான் முயற்சிக்கிற அளவில் நிறையத் தரம் அந்த ஆட்டல் ஆரம்பிச்சிருது. விடறாப்ல இல்லை.



மார்கழிக் குளிர் போல தரையே ஆடுது. இன்னும் மேல மேலன்னு என்னென்னவோ விழுமோன்னு ஒரு பெரும் பயம். எதோ ஒரு நாய். அடில அதும் கெடக்கு போல. காள்காள்னு அதன் நாராசம் வேற. சுத்தமாச் சத்தம் கேக்குது. அது மாட்டல போல. பயந் தாளாத கத்தல் அது.

நான் எப்பிடியும் பிடியுருவிக்கிறணும். பெரிய விசயந்தான் அது. என் கால்ப்பக்கம் வசமா ஒரு கீறல். விண் விண்னு ரத்தத் தெறிப்பு. கால் இத்தா தண்டி வீங்கிக் கிடக்கு. எழுந்துக்கிட்டாலும் நடக்கேலுமா தெரியாது. எலும்பு கிலும்பு... சரி அதப்பத்தி யோசிக்கண்டாம். பொழச்சமே அதைப்பாருடி. இந்தளவு நிதானம் எனக்கே ஆச்சரியம். மகமாயி துணை. பெரிய அழிவுதான். வீடுவாசல் எல்லாம் போச்சு. பொழச்சது மறு சன்மம். கொஞ்சமா நகர முடியுது முடியுது. விடப்டாது. நெஞ்சுமேல மரம். நச்சாப்ல இடது பக்கம் ஒரு செங்கக் குத்து. என்னாடி இது. பாம்பு வாழறாப்ல.

அந்தக் கல்லு அசையுதா? அசைக்கணும். அசைச்சாகணும். தோள்ப்பட்டையால அதை அசக்கி... முடியல்ல. முடியணும். முடியணும். கையி அது கெடக்கு நீளமா. விரல் மாட்டல. ஆனா முழங்கை மேல ஒரு கல்லுக்கும்பல் கிடக்கு. யாரோ வெடி வெச்சாப்ல இப்டி சரிஞ்சிட்டுதே மகமாயி. மிக மெல்லிசா ஒரு முனங்கல் கேக்குது, இப்ப கேக்குது. அது நம்ப சிவாஜி மாதிரிதான் தெரிது. பக்கத்லதான் கெடக்கானாங் காட்டியும். மருதயம்மா. பிள்ளையப் பாத்துக்க. எனக்குத் தெம்பக் குடு. நான் முழிச்சி அதாச்சி அரைமணி ஆயிருக்கலாம். கண்ணு நெதானப் படலாச்சு. நேரே வானத்தின் சிறு துண்டு தெரிது. வெயில் அடிக்குது. தேடி ஆளுகள் வரப்டாதா. என்னாச்சி. ஆனா விடாத ஆட்டம். என்னா குலுக்கல். தாயக்கட்டம் விளையாட டம்ளருக்குள்ள தாயக் காயைக் குலுக்குறாப்ல. பூமியே வெடிப்பு கிடிப்பு கண்டுருக்குமா?

அவன் முனகல்தான் எனக்குத் தெம்பு. ஆமா அவனைக் காப்பாத்த நான் பொழச்சிக்கிட்டேன். பச்சப்பிள்ளையில்லா. பாவம். காலல படாம மோளத் தெரியாது. ஒரு டம்மி துப்பாக்கி வெச்சிருக்கான். ஆயி உன்னைச் சுடுறேன்னு உத்தரவு வாங்கிக்கிட்டு ஆசையா சுடுவான். அவன் சுடுறதுக்காவது நான் உசிரோட இருக்கணும்.

அவனும்.

அட கை நகருதுட்டி. நல்ல சகுனம். விட்றாதே. சோழியைத் துகீக்கி கபக்னு பிடிக்காப்ல அந்தக் கல்லை நான் மேலாப்ல அசைச்சிக் கீழிறக்க... முடியல்லியே. முடியணும். முடியணும். மகமாயி. எனக்கு முடியணும். திக்கத்தவருக்கு தெய்வமே பலம். சிவாஜி. இந்தா வர்றேன். என்னவோ நான் வசதியாக் கெடக்காப்லயும் அவந்தான் திண்டாடுறாப்லயும். கட்டில்ல துகீக்கத்ல சிரிப்பாச் சிரிப்பான். தன்னைப்போல உருண்டு விளிம்புக்கு வந்து, விழுவான் பொத்னு. முன் பல்லு பேத்துக்கிட்டவன். பூகம்பம் வேற. ஆயி வந்திர்றேண்டி கண்ணு. அதெல்லாம் நாம எல்லாருமே பிழைச்சுக்குவம்.

கல்லு பெரிய மனசு பண்ணி நகண்டாப்லதான். நடுவுல பாம்பாய்க் கிடந்தது கை. ஆனா கைமேல எதும் பளு இப்ப இல்ல. போதும். மகமாயி ஆத்தா. கருணையே கருணை. இப்ப கால் அசையுதா பாப்பம். விடப்டாது. சிவாஜி சிவாஜின்னு மனசு பொங்குது. நல்ல பிள்ளை அது.

ஆயி உனக்கு என்ன கொண்டாந்திருக்கேன் பாரு. ஐய என்னாத்துக்குடா கிழவிக்கு. நீ தின்னு - நான் தின்னுட்டேன். இது ஒனக்கு - என் ராசா! நீ பெரியவனாயி என்னா செய்வே... நிஜத்துப்பீக்கி வாங்கி.... ∴என்னைச் சுடுவே. இல்லியா?
நேரக் கணக்குல்லாம் அத்துப் போச்சு. நான் திரும்பத் திரும்ப என்னையே உள்ள அசக்கிக் கிட்டேன். உடம்பு எப்டி எப்டியோ சிக்கிக்கிடக்கு. கல்லுகள். இடிபாடுகள். ஒரு கல்லை உடம்பு உணர்ந்து அதை நகட்டினா அதும் மேல்க்கல்லு சரிஞ்சி உடம்பு வேற மாதிரி மாட்டிக்குது-சித்த அகலமா நகண்டேன். கட்ன புடவை டர்ர்னிச்சி. எம்பாடே வம்பாடாக் கெடக்கு. உதவி ஒத்தாசைன்னு யாரையும் எதிர்பார்க்க முடியாது போலுக்கு. அவக எப்ப வந்து எப்ப தப்பிக்க. அது சரி, யார் யாரு மிச்சம் பாக்கின்னே விளங்கலியே. கலிகாலம். பிடிச்சி ஆட்டுது.

நான் வெளியால வந்துட்டேன்டி மகமாயி. உடம்புல இத்தனை கீறல்னில்லை. கண்ணு எரிச்சல். தலை கலஞ்சி ஒரே மண்ணு. உசிரோட என்னைப் புதைச்சாப்ல ஆச்சே. எழுந்து நின்னா உடம்பே ஆடுது. பூகம்பம் நின்னிருக்கும் போல. ஆனா இது உடம்பசதி. குடிக்க எதாச்சிம் தேவை. அதை அப்றம் பாப்பம். சுத்தி முத்திப் பாத்தா. ஹா! இதாண்டி அழிவு. பேரழிவு.

உலகம் முடிவுக்கு வந்திட்டதா. குத்துகுத்தா குத்துகுத்தா விழுந்து கெடக்கு. நாடகப் பந்தல் கலைச்சாப்ல. சாரம் சாரமாக் கெடக்கு. மயான காண்டம். நம்மூட்டு வாசல் வேம்பு சாஞ்சிட்டது. முருங்கை அது சாது மரம். சிறு காத்துக்குமே புட்டுக்கும். கை முறிஞ்சாப்ல கிளை உள்ப்பள்ளம் பாரிச்சி நிக்குது. கல்க்குவியல். கல்லா மரமா தகரமா கூரையா சுத்தியும். தெருவே குப்பைக்காடு. மணி வீட்டு நாயி அந்தச் செங்கல்குத்தில் ஏறி உள்ள எட்டி முகந்து முகந்து பாக்குது. நன்றி விசுவாசமுள்ள சென்மம்லா.

இத்தன விருத்தியா அறிவு எனக்கு வேலை செய்யிது. வேடிக்கை பார்த்து நிக்கப்டாதுன்னு

( 24 ம் பக்கம் பார்க்கவும் )


SRI PARADISE INN
Take Out & Catering
ஸ்ரீ பரடைஸ் இன்
Srilankan & South Indian Food



Tel: (416) 269-4509

292 Markham Road
Scarborough, Ontario
(Markham, Eglinton)
M1J 3C5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

( 23ம் பக்கத் தொடர்ச்சி )சுனாமி

கட்டுப் படுத்திக் கிட்டேன். பிழைச்ச மனுசாள். பிழைச்சவரை லாபம். மருமகன் வந்து கேட்டா பதில் சொல்லோணும் நான். சூரங்குடில கடலைக்கடை எப்டியிருக்கோ. அங்க நிலவரம் வில்லங்கம் இல்லாதிருக்கணும். நம்ம கதையப் பாப்போம். எங்கூடு எது மத்தவர் இல்லம் எது அடையாளம் காண முடியல. எங்கூடு கல்லுக் கட்டடம். தகரக் கூரை. ஒத்தச் செங்கல் - அந்தோணிது மேல்க்கூரை எங்கூட்டு உச்சில கெடக்கு... எங்க தகரம். காத்துக்குத் துகீக்கினாப்ல வளைஞ்சி எகிறி நிக்கி. தொப்பித் துகீக்கல்.

உடம்பு பூரா மண்ணு. வலி. என்னைய ஆராச்சும் தாங்கிட்டா நடக்க சௌரியம். ஒரு குச்சி தேடாத உடம்பு. ஆளே சரிஞ்சிக்கிட தேடறாப்ல ஆச்சி. இடக்கால் வீக்கம். பெத்தம் பெரிய சுருட்டு, தீவட்டி மாதிரிக் கெடக்கு கால். என்னா கனம். கன்னிக் கெடக்கு. அதை அப்டி ஒரு அளுத்து அளுத்தி மத்த காலைச் சித்த துகீக்கி ஆட்டினேன். உதறினேன். கிர்ர்னு அப்டியே நிலை தடுமாறி மயக்கடிச்சி தலைசுத்தி விழ... ஒரு கல்லுக் குத்துல பிடிச்சிக்கிட்டேன்.

யார் செத்தா யார் பொழச்சா பாக்க முடியாத நேரம். நாம பொழச்சதே மறு சென்மம். விதி இது. கொடும் விதி. ஊர்த் துக்கம்லா. பொழச்சவாளைப் பாரு. நாம பண்ணுன பாவமா அதிர்'டமா இது தெரியல. மகமாயி நான் இப்ப என்ன செய்யணும். நின்னு சுத்து முத்தும் பாக்கேன். தள்ளாட்டுது குடிகாரனாட்டம். எங்கியாச்சும் சத்தம் கித்தம் வருதா?

அந்த நாயி அது உடம்புலயும் மண்ணு. உதறி வருது என்னைப் பாத்து. பசி போல. வாலை லேசா ஆட்டி என் மூஞ்சியப் பாத்து நிக்கி. அட மூதேவி. நானே பஞ்சப் பனாதை. என்னைப் பாக்குறதப் பாரு. அந்த முனகல் - சிவாஜிதான். மத்தாளைப் பத்தி தெர்ல. முனங்குறான். கெட்டிக்காரப் பயல். ஆயுசும் கெட்டிதான். முனங்கினா அடையாளந் தெரியும்னு நினைக்கிறானா? என்னால எம்மாடி இத்தனை கல்லையும் துகீக்கி, இனி அடியால அவனைத் தேடணும். என்னால நடக்கவே முடியல. நிக்கவே முடியல. மகமாயியம்மா. எனக்குத் தெம்பைக் கொடு.

அப்பதான் அது நடந்தது. பெருஞ்சத்தம் பின்னாலருந்து. அது சத்தமா என்னன்னு நினைக்குங்குள்ளாற அப்டியே தண்ணி, நிறையத் தண்ணி என்னை அலாக்கா வாரித் துகீக்கி ஒற்றத் தள்ளு. ஒரு விரல்சொடுக்கற நேரங்கூட இல்லை. ஆளைத் தள்ளுதா இழுக்குதா, ரெண்டுமா நடக்குறாப்ல. அத்தனை வேகம். ஆனை நாக்காய் ஒரு உள்சுருட்டல். மளுக். நான் மயங்கிட்டிருக்கிறேன்.

நேரக் கணக்கு பிசகியாச்சி மறுபடி. எனக்கு என்னாச்சி தெரியாது. உருண்டு கண்ணைத் திறந்து பாத்தா மேல மெலிசான வெளிச்ச வானம். நான் குப்புறக் கெடந்தேன். கல்லு கில்லுல்லாம் இல்லை. இது வேற இடம். என் உடம்புல என்னென்னமோ நாத்தம். துணியெல்லாம் அழுக்கும் பிசுக்குமா உடம்போட ஒட்டி. எழுந்து உக்காந்தேன். உடம்பு கிடுகிடுன்னு ஆடுது. ஆமா, அலை எந்திரிச்சி ஊருக்குள்ள கொந்தளிச்சிருக்கு. இப்டியெல்லாங்கூட ஆகுமா? நான் கடல் கரைவெளியில கெடக்கிறேன். எங்க ஊர்தானோ, வேற ஊரோ? எப்படி எப்ப நான் ஒதுக்கப் பட்டேன். தெரியாது. லேசா தண்ணி கால்ப்பக்கம் பணிஞ்ச நாய் உரசுறாப்ல. அங்கங்க ஜனம் விழுந்து கெடக்கும் போல. கோரமாத் தெரிது. எத்தனைக்கு மூச்சு இருக்கு, எத்தனை அவுட்டோ தெர்ல. உலகத்தில் இப்டியும் ஆவுமா?

நான் பொழச்சி மனுஷமக்கள் இல்லாட்டி என்னா இருக்கு பெறகு? கண்ணு தன்னைப்போல அழுது. வெளிர் இருட்டு. இப்ப அந்த ஆட்டம் இல்லை. பூகம்பம் அடங்கிட்டதா? எனக்கு இனியும் தெம்பு இல்லை. எழக்கூட காலை அசைக்கவே முடியல. இடதுகால் இனி பயன்படாதுன்றாப்ல பயம் வந்தாச்சி. திரும்ப எப்ப அலை கொந்தளிக்.... ஆஆஆ மகமாயி காப்....

---

( 14 ம் பக்கத் தொடர்ச்சி ) அறிவியலில்..

மூளையின் நியூரான்கள் வரைக்குமான அமைப்புகளில் காணப்படுகிற சைட்டோஸ்கெலிடான் (செல்லின் "எலும்பமைப்பு") பல மைக்ரோட்யூபுயூல்கள் எனப்படும் அமைப்புகள் உள்ளன. 12.5 நானோமீட்டர்கள் (ஒரு நானோமீட்டர் ஒரு மீட்டரை ஒரு பில்லியனால் வகுத்தால் கிடைப்பது:10^-9) ஆரம் கொண்ட உல்ளே ஏதுமற்ற உருளை போன்ற அமைப்புகளால் ஆனது.

மைக்ரோட்யூபுயூல்களின் சுற்றுச்சுவர்கள் அறுகோண அமைப்பு கொண்டவையாக 13 சுற்றுகளில் ட்யூபுலின் (Tubulin) எனும் புரதத்தால் அமைக்கப்பட்டுள்ளன. இப்புரதம் இரு பெப்டைட் மோனோமர்களால் ஆனது. 8 நானோமீட்டர் பரிமாணம் கொண்ட ட்யூபிலின் தோடு மூடிய நிலக்கடலைத் தோற்றம் கொண்டது. இது நாள் வரை செல் மற்றும் அதனினும் நுண்ணிய உயிர் அமைப்புகளின் அமைப்பொழுங்குக்கு மட்டுமே உதவுவதாக கருதப்பட்ட இந்த மைக்ரோட்யூபுயூல்கள் மின் மற்றும் பௌதீக சமிக்ஞைகளை கடத்தும் தன்மையும் கொண்டவை என்பதும் இரண்டாம் நிலை நியூரானிய தகவல்கள் அனுப்புவதில்


ஸ்ருவர்ட் ஹாமரொப் (இடது) ரோஜர் பென்ரோஸ் (வலது)

பங்கு பெறுகின்றன என்பதும் கடந்த பத்தாண்டுகளான ஆராய்ச்சிகளில் தெரிய வந்துள்ளன. ட்யூபுலின் புரதம் ஒன்றிற்கு மேற்பட்ட நிலையுருவுகள் கொண்டது. இப்புரத மூலக்கூறுகள் இத்தகைய நிலையுருவுகளில் க்வாண்டம் மேற் பதிவுத்தன்மையோடும் (quantum superpositions) இருக்க வல்லவை. ஆனால் இதற்கும் தன்னுணர்வுக்கும் என்ன தொடர்பு? பொதுவான கணினித்துவ தன்மையில் (computational model) மனம், தன்னுணர்வு மற்றும் மூளையினை ஆய்பவர்கள் நியூரானிய இயக்கங்களை ON-OFF எனும் ஒரு சுவிட்ச் (switch) ஆக காண்கின்றனர். இத்தகைய பார்வையில் மூளையில் ஏற்படும் செயல்கள் ஒரு நொடிக்கு 10^18 ஆகும். ஆனால் மைக்ரோட்யூபுயூல்களின் இயக்கச் செழுமையைக் கணக்கில் எடுத்துக் கொள்கையில் மூளையின் செயலியக்கத் திறனளவு நொடிக்கு 10^27 இயக்கங்கள் என அதிகரிக்கிறது. நியூரான்கள் வெறும் சுவிட்ச்களாக இல்லாமல் தம்மளவில் ஓர் கணினியாகக் கருதப்படவேண்டும்.

க்வாண்டம் நுண்ணுலகில் பருப்பொருட் துகள்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட இருப்புகளின் சாத்திய மேற்பதிவுகளாக உள்ளன. ஒரு நோக்குச்செயல் (observation) மூலம் இச்சாத்தியங்கள் ஒரு நிலைக்குக் குறுக்கப்படுகின்றன. தன்னுணர்வுக்கு முந்தைய நிலையிலிருந்து தன்னுணர்வுக்கு அத்தகையதோர் குறுக்கம் இருக்கலாம் என பென்ரோஸ் ரூ ஹேமரா.்.ப் கருதுகின்றனர். ட்யூபுலின்களின் க்வாண்ட இயற்கைச் சார்ந்த இருநிலைக்களுக்கிடையாக தாவல் நானோவிநாடிகளில் (1 நானோ விநாடிஸ்ரீ 1விநாடி.். 10^9) நடைபெறுவது (அதாவது ட்யூபுலின் புரத மூலக்கூறுகளில் அத்தகைய தாவல் நடைபெற்றால்.) அவ்வாறு நடைபெறும் பட்சத்தில், ட்யூபுலின்களின் எண்ணிக்கை அதிகரிக்க அதிகரிக்க தன்னுணர்வு orch-OR குறுகல் மூலம் நடைபெறும் நேரம் குறையும். ஒரு நெமடோட் எனும் வளையப்புழு தனது 300 நியூரான் செல்களில் 3 பில்லியன் ட்யூபுலின் மூலக்கூறுகள் கொண்டது. அதில் orch-OR குறுகல் சம்பவிக்க 133 மில்லி-விநாடிகள் (ஒரு மில்லி விநாடிஸ்ரீ ஒரு விநாடி.். 1000) ஆகும். பென்ரோஸ் ரூ ஹேமரா.்.ப் கருதுகோளில் தன்னுணர்வின் "போதம்" ஏற்பட orch-OR குறுகல் அவசியம். மானுடர்களில் இதற்கான நிகழ்வு நேரம் 13 மில்லி விநாடிகள்.

